# வைகறை

வாழ்வியல் சஞ்சிகை

இதழ்: 46 | விலை: 60.00

## பச்சை நிறக் கனவு



## குடும்ப வாழ்வைப் பாதிக்கும் இரண்டு விடயங்கள்...

# வெளிவந்து விட்டது

# அழைப்புப் பாதையில் ஒரு பயணம்




''அல்முன்தலக்'' (பயணம்) என்ற இந்நூல் அறிஞர் முஹம்மத் அஹ்மத் ராஷிதின் மிக முக்கிய நூல்களில் ஒன்று. பிக்ஹுத் தஃவா (பிரச்சார முறையியல்) என்ற நூல் வரிசைத் தொடரின் முதல் நூல். தஃவா என்பது இஸ்லாமிய அறிவியற் கலையாக நவீன காலப் பிரிவில் வளர்ந்து வருகின்றது. அதற்குப் பங்களிப்பு செய்த, செய்து வரும் அறிஞர்கள் பலர். அவர்களில் மிகப் பிரதான மானவர் முஹம்மத் அஹ்மத் ராஷித். இத்துறையில் ஆழ்ந்த புலமையும், ஏறத்தாழ 50 வருட கால கள அனுபவமும் கொண்டவர் அவர்.

இந்நூல் அமைப்பு ரீதியான தஃவாவின் அவசியம் பற்றி விளக்குகிறது. இஸ்லாமிய இயக்கம் என்பதற்கு ஷரீஅத் ரீதியான ஆதாரங்களை முன்வைக்கிறது. மிகுந்த ஆதாரபூர்வமாக அதனை விளக்குகிறது. எடுத்துக் கொள்ளும் அனைத்துக் கருத்துக்களையும் ஆதாரபூர்வமாக முன்வைக்கிறது. ஸஹாபாக் கள் காலம் முதல் இன்றுவரை அமைப்பு ரீதியான தஃவா வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது என விளக்கும் இந்த நூல், நிறைய இமாம்களின் மேற்கோள்களைக் கொண்டு வருகிறது.

இயக்க ரீதியான தஃவாவின் ஆதாரபூர்வத் தன்மையை விளக்குவதோடு தஃவாவின் மிக முக்கிய உண்மைகளையும் இந்நூல் அதன் இறுதிப் பகுதிகளில் தருகிறது. தமிழ் உலகுக்கு இத்துறையில் இதுவரை வெளிந்த நூல்களை விட வித்தியாசமான அமைப்பைப் பெற்ற நூல் எனக் கூறலாம்.

***உஸ்தாத் எம்.ஏ.எம். மன்ஸூர் (நளீமி)***

தஃவா களம் எதிர்கொள்ளும் இன்றைய பிரச்சினைகளுக்குத் தீர்வாக தஃவாவைச் சுமந்திருக்கும் மாமனிதர்களை இலக்கு வைத்து எழுதப்பட்ட 'இஹ்யாஉ பிக்ஹுத் தஃவா (தஃவா கலை நுட்பத்தை உயிரூட்டுதல்) தொடரின் முதலாவது நூல் 'அல் முன்தலக்' தமிழ் மொழிபெயர்ப்பு.

நூல்: அழைப்புப் பாதையில் ஒரு பயணம் எங்கிருந்து? எப்படி?

ஆசிரியர்: முஹம்மத் அஹ்மத் ராஷித்

தமிழ் மொழிபெயர்ப்பு:
அஷ்ஷெய்க் மிஹ்ழார் எம். ரஷீத்


பக்கம்: 152

விலை: 300.00

Published by:

FOCUS MEDIA (Pvt) Ltd

# வைகறை





22 சொத்துப் பங்கீட்டில் சமத்துவம்





30 குடும்ப வாழ்வைப் பாதிக்கும் இரண்டு விடயங்கள்....


04 கீழ்த்தரமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்தல்





09 மன நிம்மதியுடன் வாழ சில உபதேசங்கள்

06 ஒரு மாலை நேர உரையாடல்

11 நீங்களும் பணிவுள்ளவர் தானோ

14 இந்தியாவின் பறவை மனிதர்

18 குழந்தைகளிடம் கற்றலில் ஆர்வம்...

33 உங்கள் தெரிவை எங்கே மேற்கொள்ள...

39 கன்ஸா (ரழி)

42 இமாம் மாலிக் இப்னு தீனார்

46 இறைதூதரின் பாதச் சுவடுகள்...


## அஷ்பால்


48 மறந்துவிட வேண்டாம்

48 வரலாற்றில் ஒரு சம்பவம்

49 ஹதியா கேட்கும் மூதாட்டி


## கவிதை


50 இல்லை

50 கனம்மிக்க கடைகள்


## சிறுகதை


51 ஒதுங்குதல்

# வைகறை

## ஆசிரியர் கருத்து

வாழ்வியல் சஞ்சிகை இதழ் : 46

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்.

வைகறையின் மற்றுமொரு இதழில் சந்திக்கின்றோம். அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும் அல்ஹம்துலில்லாஹ்.

உலகம் வேகமாக வெப்பமடைந்து வருகின்றது. நீர், சுகாதாரம், ஆரோக்கியம் தொடர்பான பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. இயற்கை காடுகளும் மலைகளும் நீர்நிலைகளும் அழிக்கப்பட்டு வருகின்றன. விலங்கினங்கள், பறவையினங்கள், தாவர இனங்கள் அருகி வருகின்றன.

இந்நிலையில் சூழல் முகாமைத்துவம் தொடர்பான மாநாடுகள் உலகளவிலும் இலங்கையிலும் நடைப்பெற்று வருகின்றன. சூழலை பாதுகாப்பதற்கான சட்டங்கள் இறுக்கப்பட்டு வருகின்றன. மக்களை தெளிவு படுத்தும் நிகழ்ச்சிகளும் நடைப்பெறுகின்றன. எனினும், இவற்றையெல்லாம் கடந்து சூழலை பாதிக்கும் நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

சூழல் பாதுகாப்பை நாம் எம்மிலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். எமது வீட்டுச் சூழல், அலுவலக சூழல், மஸ்ஜித், பாடசாலை சூழல்கள் என்பவற்றில் நாம் ஒவ்வொருவரும் கவனம் செலுத்தினாலே ஓரளவுக்கேனும் சூழல் மாசடைவதை தடுத்து, இயற்கை சூழலை பாதுகாக்கலாம். இது தொடர்பாகவே வைகறையின் முகப்புக் கட்டுரை பேசுகின்றது.

இதனுடன், வழமையான பல்சுவை அம்சங்கள் வைகறையில் இடம்பெற்றிருக்கின்றன. வாசகர்கள் தமது கருத்துக்களையும் ஆக்கங்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.

வைகறையின் இவ்விதழ் வெளியீட்டில் பங்களித்த அனைவருக்கும் எமது ஆழ்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். மற்றுமொரு இதழில் சந்திக்கும் அவாவுடன் விடைபெறுகின்றோம்.

அன்புடன்,

ஆசிரியர்


| | |
|---|---|
| பிரதம ஆசிரியர்: | எம்.எச்.எம். நாளிர் B.A. (cey) |
| ஆசிரியர்: | ஏ.ஸீ.எம். நதீர் (நளீமி) B.A. (cey) |
| துணை ஆசிரியர்: | இன்ஸாப் ஸலாஹுதீன் (நளீமி) Dip. in Journalism |
| ஆசிரியர் குழு: | அஹ்ஸன் ஆரிப் (நளீமி) National Dip. in VPT, Dip. in Journalism |

தளக்கோலம், அட்டை வடிவமைப்பு : அஸார் வஸீர்

ISSN: 1800-0665




சந்தா விபரம்:
ஒரு வருட சந்தா - 450/= தனி இதழ்: 60/=

The Editor 'Vaiharai' Meelparvai Media Centre
No. 49, Sri Mahinda Dharma Mw, Dematagoda, Colombo-09, Sri Lanka.

☎ : 0112691258, : 077 2227569 ✉ : vaikarai.mag@gmail.com : www.meelparvai.net

# Day Zero என்றால்?

## கடைசி சொட்டு குடிநீரை ஏப்ரல் 12ம் தேதி பருகவுள்ள கேப்டவுன் நகரம்!



தென்னாப்பிரிக்காவின் கேப்டவுன் நகரம் விரைவில் 'டே சீரோ' என்ற நிலையை எட்டவிருக்கிறது.

'டே சீரோ' என்றால் என்னவென்று யோசிக்கின்றீர்களா? உலகிலேயே முதன் முறையாக ஒரு பெரு நகரம் சொட்டுத் தண்ணீர் கூட இல்லாமல், முற்றிலுமாக தண்ணீரில்லா நிலைக்குப் போகப் போகிறது. இதைத்தான் ஆங்கிலத்தில் 'டே சீரோ' (Day Zero) என்று சொல்கிறார்கள். வரும் ஏப்ரல் மாதம் 12-ம் தேதி, கேப்டவுன் நகரம் இந்த நாளை எட்டுகிறது.

சமூக தளங்களில் அவ்வப்போது பரவும் சில தகவல்களை போன்றதொரு நிலை உண்மையில் உருவாகப் போகிறது. நம் கண் முன்னே. அதுவும், சொட்டுத் தண்ணீர் கூட இல்லாமல் போகும் நாளை துல்லியமாக அறிவிக்கப்பட்டு, அதை பதைபதைப்புடன் எதிர்நோக்கியுள்ளனர் கேப்டவுன் மக்கள்.

குறிப்பாக, சமீபத்தில் இந்திய கிரிக்கெட் அணி, தென்னாப்பிரிக்கவுக்கு எதிராக இந்த கேப்டவுன் நகரில் உள்ள மைதானத்தில் விளையாடிய போது, இந்திய வீரர்கள் 2 நிமிடத்திற்கு மேல் குளிக்கக் கூடாது என உத்தரவிடப்பட்டு இருந்தது.

**ஏன் இந்த நிலை?**

கேப்டவுன் நகரில் 4 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். ஒரு காலத்தில் உலகின் பசுமையான நகரில் ஒன்றாக கேப்டவுன் நகரம் இருந்தது. ஆனால், உலக வெப்பமயமாதல், மழை பெய்யாமை, அரசின் மெத்தனப் போக்கு, அதைவிட மக்களின் அலட்சியம் ஆகிய காரணங்கள் ஒன்று சேர, இன்று ஒரு சொட்டுத் தண்ணீருக்காக கையேந்த உள்ளது கேப்டவுன் நகரம்.

கேப்டவுனுக்குப் பல காலமாக உயிர் ஆதாரமாக இருந்த தீவாட்டர்ஸ்க்லூஃப் (Theewaterskloof) அணையின் கொள்ளளவில், கடந்த 2016 ஆம் ஆண்டு 13 சதவிகிதமாக இருந்தது. ஆனால், இப்போது நீர் 10%க்கும் குறைவான நிலையில் வறட்சியை உமிழ்ந்து கொண்டிருக்கிறது. நகருக்கு தண்ணீர் வழங்கும் வாய்ப்பைக் கொண்டிருக்கும் இன்னும் சில அணைகளும் 15% வந்துவிட்டன. அது 13.5% எனும் நிலையை எட்டும்போது, 'டே சீரோ' நிகழும்.

கடந்த 2007 ஆம் ஆண்டே, தென்னாப்பிரிக்க நீர் விவகாரங்கள் துறை, நிலத்தடி நீர் குறைந்து வருவது குறித்து எச்சரிக்கை விடுத்தது. இது குறித்து மக்களிடமும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், மக்கள் இதனை பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது. அதேசமயம், தக்க நடவடிக்கைகளை உரிய நேரத்தில் எடுக்கவில்லை என்று அரசாங்கத்தின் மீதும் புகார்கள் கடுமையாக எழுகிறது.

**டே சீரோவுக்கு பிறகு கேப்டவுன் மக்களின் நிலை?**


மிக அபாயகரமான நிகழ்வுகள் டே சீரோவுக்கு பிறகுதான் காத்திருகின்றன. கடந்த டிசம்பர் மாதம், ஒரு நாளைக்கு ஒருவர் 87 லீட்டர் தண்ணீரை மட்டுமே உபயோகிக்க வேண்டும் என்று சட்டம் போடப்பட்டது. மீறினால், அபராதத் தொகையோடு தண்டனை என்று அறிவிக்கப்பட்டது. பெப்ரவரி 1 முதல் ஒரு நாளைக்கு ஒருவருக்கு 50 லீட்டர் மட்டுமே உபயோகிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

டே சீரோ நிலை ஏற்பட்ட நாள் முதல், நகரின் எந்தக் குழாய்களிலும் தண்ணீர் வராது. அதனால், நகர் முழுக்க 200-க்கும் அதிகமான 'தண்ணீர் பெறும் மையங்களை' அமைத்திருக்கிறது அரசு. வெளியிலிருந்து கொண்டுவரும் தண்ணீரை அதில் நிரப்புவார்கள். வரிசையில் நின்று பெற்றுக் கொள்ளலாம். ஒரு நாளைக்கு ஒருவருக்கு 25 லீட்டர் மட்டுமே.

இதுவும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத்தான். அதற்குள், பஞ்சம் தீரவில்லை எனில், மக்களிடையே நீருக்காக சண்டை ஏற்படும். பணம், காரை திருடும் முறை மாறி, தண்ணீரைத் திருடும் சூழல் உருவாகும். அப்போது, காவல்துறை, இராணுவம் கொண்டு அரசு மக்களை ஒடுக்கும். இதனால், கலவரங்கள் உருவாகும். ஒரு நகரத்திற்குள் ஏற்படும் நீர் வறட்சிப் போர், நாடுகளிடையேயான போராகவும் மாறும்.

இதே நிலையை நாமும் சந்திக்கவிருக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.....

# கீழ்த்தரமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்த்தல்



கலாநிதி அப்துல் ஹமீத் பிலாலி

தொலைக்காட்சி பார்த்தல் அடிப்படையில் தடுக்கப்பட்டதல்ல. அவ்றத்துக்களை பார்ப்பதும், இச்சையைக் கிளரும் காட்சிகளை ரசிப்பதும், பார்வையை தாழ்த்துமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ள விடயங்களை கண்டுகளிப்பதும் இவைபோன்ற அம்சங்களுமே தடுக்கப்பட்டுள்ளன. இவை தொலைக்காட்சி சீரியல்களாகவோ, திரைப்படங்களாகவோ, நாடகங்களாகவோ, ஆங்கிலப் படங்களாகவோ இன்னும் பிறவாகவோ இருக்கலாம்.

இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஷரீஅத் தடைசெய்திருக்கின்ற விடயங்களே நிறைந்திருக்கின்றன. இப்படியான நிகழ்ச்சிகளை பின்தொடர்வது தஃவாக் களத்திலுள்ள தீர்வு காணப்பட வேண்டியதொரு பிரச்சினையாகும்.

*இப்பிரச்சினையின் வெளிப்பாடுகள்*

- சந்தித்துக் கொள்ளும்போது இந்நிகழ்ச்சி களைப் பற்றிக் கதைத்துக் கொள்வது
- ஒரு திரைப்படம் அல்லது ஒரு தொலைக் காட்சி நிகழ்ச்சி தவறவிடப்பட்டிருந்தால் அதற்காக வருந்துதல்
- வீடியோ வடிவில் அதனைப் பதிந்து கொள்ளும் ஆர்வம்
- இவ்வாறான நிகழ்ச்சிகளுக்காக நல்ல பயனுள்ள நிகழ்ச்சிகளை துண்டித்துவிட்டுச் செல்லுதல்

- உரையாடல்களின் போது நடிகர்களின் வார்த்தைகளை பயன்படுத்துவதும் அடிக்கடி பிரயோகிப்பதும்
- பாவத்தை காணும்போது ஆன்மா உறைநிலையிருப்பது போன்ற உணர்வு
- தனிப்பட்ட ரீதியில் வணக்கங்களை மேற்கொள்வதில் கவனக் குறைவு

**இப்பிரச்சினைக்கான காரணங்கள்**


- ஈமானியப் பலவீனம்
- ஆற்றல்களை, திறமைகளை பயன்படுத்தாமை
- பெரிய ஓய்வு நேரங்கள் காணப்படுகின்றமை
- மகிழ்வூட்டக்கூடிய, புத்தாக்கமான நிகழ்ச்சி கள் கிடைக்காமல் மனதிற்கு பாரமான நிகழ்ச்சிகளாக அமைகின்றமை.
- திரைப்படங்களுக்கு அடிமையானவர் களுடன் அதிகம் உறவாடுதல்
- வீட்டினுள்ளே பக்குவமான சூழல் காணப்படாமை (கூட்டுக்குடும்பம், பேணுதலற்ற மனைவி).
- இஸ்லாமிய மாற்றீடுகள் இன்மை
- குறிப்பிட்ட நபர்களுடன் தேவையானவர்கள் சகவாசம் கொள்வதில் பலவீனம்
- ஓய்வுநேரத்தை எப்படியாவது கழிக்க முயற்சித்தல்.
- இளைஞர் யுவதிகளிடத்தில் காணப்படும் பாலியல் உணர்வுகள் இப்படியான அற்ப நிகழ்ச்சிகளை பார்க்க தூண்டுவது.
- வீடுகளில் உள்ள செட்டலைட் செனல் வசதிகள்
- தர்பிய்யா வழிகாட்டல்களில் பலவீனம்
- ஈமான், தர்பிய்யா சார்ந்த நிகழ்ச்சிகளை, கேளிக்கை நிகழ்ச்சிகள் மிகைப்பது

**தீர்வுகள்**

- திறமைகளையும், ஆற்றல்களையும் பயன்படுத்துதல்
- ஓய்வு நேரங்களை பயன்படுத்துதல்
- குறிப்பிட்ட நபரை அவருடைய குடும்பத்தில் கவனிப்பதும் அவருடன் சேர்ந்து பழகுவதும்
- அவருக்கான தர்பிய்யத் நிகழ்ச்சிகளை அதிகப்படுத்துதல்
- பார்ப்பதற்கு ஆகுமானவை எது? ஆகாதவை எது? என்பதை தெளிவுபடுத்துதல்
- நேரத்தை பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தில் கவனம் செலுத்துதல்
- தினசரி Time table ஒன்றுக்கு அவர்களை பழக்கப்படுத்துவதும் மாதாந்த வருடாந்த இலக்குகளை வழங்குவதும்
- கீழ்த்தர நிகழ்ச்சிகளை பார்ப்பதை தூண்டும் விடயங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளும் வகையில் தஃவா பொறுப்புக்களை வழங்குதல்
- ஆன்மீகப் பகுதியை பலப்படுத்துல் (தொழுகை, நோன்பு, தர்மம்...)
- மாற்றீடுகளை வழங்குதல் (இஸ்லாமிய நாடகங்கள், பாடல்கள், சீடிகள்...)
- குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் இடம்பெறும் போது வீட்டிலிருந்து வெளிச் செல்ல முயற்சி செய்தல்

இப்படியான கீழ்த்தர நிகழ்ச்சிகளினால் ஏற்படும் எதிர்மறை விளைவுகளை ஷரீஆ ரீதியிலும், நிஜமாகவும் தெளிவுபடுத்தும் அமர்வுகளை ஏற்பாடு செய்தல்

**தமிழில்- ஏ.டபிள்யூ.எம். பாஸீர்**



# ஒரு மாலை நேர உரையாடல்

**(இது ஓர் உண்மைச் சம்பவத்தைத் தழுவி எழுதப்படுகிறது. இந்த உரையாடலில் வரும் அனைத்துப் பெயர்களும் மாற்றப்பட்டுள்ளன.)**

அன்று ஒரு புதன்கிழமை என்று நினைக்கின்றேன். மஃரிப் பாங்கு சத்தம் ஊர் முழுவதும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. நான் வகுப்பு நடத்தி முடிந்ததும் வந்த மாணவிகளை அனுப்பி விட்டு, மாணவர்களுடன் இருந்தேன். எமது கல்வி நிலையத்துக்கு பல தரங்களில் கற்பவர்களும் வெவ்வேறு பாடங்களுக்காக வருவார்கள். அவர்களில் ஒரு சிலர் என்னுடன் நீண்ட நேரம் உரையாடி விட்டுச் செல்வார்கள். அன்று தரம் 5 மற்றும் 6 ஐச் சேர்ந்த மாணவர்கள் ஆறு அல்லது ஏழு பேரளவில் இருந்திருப்பார்கள்.

எனினும், அவர்களில் வயதுக்கு முந்திய முதிர்ச்சியும் சிறந்த புரிதலும் இருப்பதை தினமும் கண்டு வருகிறேன். அவர்களுடன் இருக்கும்போது நானும் அவர்களில் ஒருவராக மாறிவிடுவேன். அவர்களின் பேச்சுகளில் எனக்கொரு விருப்பு இருக்கிறது. அதனால் எப்படியாவது தூண்டித் துருவி சிறுபிள்ளைதனமாக கேள்விகளைக் கேட்டு கதைக்க ஆரம்பித்து விடுவேன்.

இத்தனை நாட்களுக்குப் பிறகு நான் எமது சமூகத்தின் புதியதொரு பக்கத்தை புரட்டிப் பார்த்தது அன்றைக்குத்தான்.

ஹஸ்ஸானும் ஆகிபும் எனக்கருகில் இருந்தனர். ஆஷிப் இரண்டடி தள்ளி இருந்தான். ஆஷிபை எனக்கு நன்றாகத் தெரியும். மற்றவர்களை விட துல்லியமானவன்; தெளிவானவன். எப்போதும் யாரையாவது குழப்பிக் கொண்டே இருப்பான். அதில் நானும் ஒருவன்தான். மறுத்துப் பேச ஒன்றும் இல்லாதபோது ஏதாவது சொல்லிவிடுவான்.

அன்றும் இப்படித்தான் எமது உரையாடல் ஆரம்பமானது.

'இலக்ஷன்ல இங்க யாரு வெத்தின..'

'மிஹ்லார் நானா சேர்'

'கெட்ட ஆத்தல் நானா', 'வீச்சு றொட்டி தந்தான்வள். கெட்ட சாத்தொண்டு சாத்தினை'

இதையும் சாதனை என்ற தொனியில் அவர்கள் கதைப்பது இனிமையாக இருந்தது. தொடர்ந்தும் ஏதோ சொல்லிக் கொண்டே போனார்கள். சரியாக விளங்கிக் கேட்கவில்லை. ஏனென்றால் அன்று ஆஷிப் மட்டும் அமைதியாக பேசாமல் ஏதோ



ஒன்றை மறைப்பதை போன்று இருப்பது என்னுள் ஒரு சங்கடத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். கூட்டமாக கதைக்கும்போது யாரை யும் புறக்கணிக்க முடியாதுதானே?... அதனால்,

'ஆஷிப் யேன் இன்டகி சைலன்ட்' என்றேன்

'அவர் அப்பிடிதான் சேர்' இது ஆகிப்.

'என்னா அவர் அப்பிடி... அவன் நல்ல பொடியன்.. சும்மா இரிங்கவா' என்று ஆஷிபை தட்டிக் கொடுத்தேன்.. ஒரு காரணத்திற்காகதான்.

'நேத்து நடந்தத சேர்ட சொல்லவா..' என்றான் ஆகிப்.

ஆஷிப் அதனைத் தடுக்க முயன்ற அடுத்த கணம், விடயத்தை செய்கையாக ஒருவன் செய்து காட்டிவிட்டான். எனக்கும் விளங்கிவிட்டது. அதே வயதை நானும் கடந்திருக்கிறேன். சிலபோது வீட்டில் மின்சாரம் இல்லாதபோது மெழுகுத் திரி எரிவதைக் கண்டால் பேப்பர் துண்டுகளை சுருட்டி பற்ற வைத்து, இழுத்து, புகைவிட்டு, சோதனை செய்து பார்த்த ஞாபகம் என்னுள் வந்துபோனது. ஆனால், இப்போது காலம், எத்தனையோ யுகங்களை உதறித் தள்ளி விட்டு தற்சமயம் எங்கோ சென்றுவிட்டது.

'எப்பல இருந்து இந்த பழக்கம்' நான் தொடர்கிறேன். அவன் பதிலளிக்கவில்லை. கொஞ்ச நேரம் சிரமப்பட்டு சிரித்துவிட்டு...

'நானாமார் வற்புறுத்தி தந்தான்வள் சேர்' என்றான்.

'நீங்கயேன் அவங்களோட பழவுர...'

'வேற யாரும் இல்லே சேர்... அவங்க ஊட்டுகிட்ட ஈரவன்கள்..'

'ஒங்கட வயசு பொடியம்மாரோட பழவனும்... இனி யாராலும் பெரிய பொடியம்மாரோட ஈக்குரத கண்டா என்ட வந்து சொல்லனும் சரியா...'

இந்த விடயத்தை எவ்வாறு கையாள்வது என்ற சஞ்சலத்தில் தான் நான் அவ்வாறு பொதுவாக கூறிவிட்டேன். இப்படியான நிலமைகளில் ஒருவனின் எதிர்காலம், மானம், இரகசியம் போன்றவற்றை நாம் கருத்தில் கொள்ள வேண் டும். எனது மனசாட்சியை பொருத்து அன்றைய நாளில் யாரும் எனது வார்த்தைகளால் பாதிக்கப் பட்டிருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

பல நாட்களாக இந்தப் பிரச்சினைக்கு எப்படி முடிவு கட்டலாம் என்று யோசித்தேன். இன் னொரு நாள் எமது உரையாடல் ஆரம்பித்தது. அன்று இருந்தவர்கள் தான் இன்றும் இருந்தனர்.

'நீங்க சொல்லியும் கேட்காம நேத்து ரீஸாவோட சுத்திகொண்டு இருந்தான் சேர் இவன்'' என்று ஆகிப், ஆஷிபை சுட்டிக் காட்டினான்.

'ரீஸா யாரு' என்றேன்.

'அவன் பத்தாம் ஆண்டு சேர், அவன் ஸ்கூல்ல சிகரெட், கே-ஜீ அடிச்சி மாட்டி ஸ்கூல்ல இருந்து வெலக்கினை... அவன்ட ஊட்ல இப்ப அவன கணக்கெடுக்குரல்ல. அவன்ட கைல சல்லி இல்லாததுக்கு சின்னவன்கள பழக்கி உட்டுட்டு எல்லாரும் சேர்ந்து சிகரெட் குடிக்குர...' என்றான் இன்னொருவன்.

பக்கத்தில் ஆஷிப் எந்த குற்றமும் இல்லாத வனை போல இருப்பதும், இவர்கள் சொல்லும் ஒவ்வொரு விடயமும் அடியும் உச்சியுமாக இருந்தது.

'ஊட்ல ஒரு நாளகி எவ்வளோ சல்லி தார' என்று ஆஷிபை பார்த்து கேட்டேன்.

'நா இப்ப சிகரெட் அடிக்கிரல்ல நானா சீஷாதான் அடிக்கிரை..' என்றான்.

சீஷா என்பதும் போதை உலகத்துக்கு அறிமுகமாகி வரும் புதிய சாதனம் தான். அதனை மின்னேற்றம் (Charge) செய்துதான் பாவிக்க வேண்டும். அது போதையை தருவதில்லையாம், வெறும் புகையைத்தான் அதனால் விட முடிகிறதாம். அதனால் அவர்கள் அதனை ஹலால் ஆக்கியும் விட்டார்களாம். உண்பதற்கும் குடிப் பதற்கும் எவ்வளவோ இருக்க போயும் போய் இதனையா இழுப்பார்கள்?!!...

அதனை பயன்படுத்துவதால் போதை ஏற் படாது போகலாம். ஆனால், அதில் 'Nicotine' எனும் நச்சு இரசாயன சேர்வையை ஓர் ஆக்கக் கூறாக சேர்த்திருக்கிறார்கள். Nicotine என்பது



பொதுவாகவே இதய நச்சு என்றுதான் அழைக்கப் படுகிறது. புற்றுநோய், இதய செயலிழப்பு போன்ற பல பக்க விளைவுகளை அது ஏற்படுத்துகிறது.

'நான் கேட்டதுக்கு பதில் சொல்லுங்களே.'

சுருக்கமாக 'ஐம்பது ரூபா' என்றான்.

'இல்ல சேர் இவன் களவான்ற' என்று மறுத்து கத்தினான் பக்கத்தில் இருந்தவன். அதனை பொருட்படுத்தாது இருந்துவிட்டேன். மற்றவர் களை பக்கத்தில் வைத்து எதுவும் செய்யமுடியா தென்று அவர்களை வீட்டிற்குச் செல்லுமாறு கூறிவிட்டு தனியாக வைத்துக் கதைத்தேன்.

'சரி இப்ப சொல்லுங்க எந்த கடைல வாங்குர'

'நா வாங்குரல்ல...'

'அப யாரு வாங்கிதரா...'

'ரீஸாதான் வாங்கி தருவான்.'

'யாரு அவர்.'

'ஊட்டுக்கு முன்னால ஈரவன். எண்ட நானாட க்லாஸ்..'

'யார்ட சல்லிக்கு வாங்குர..'

'என்டதான்..'

'அந்த நானாட சல்லி இல்லயா'

'அவர் ஊட்ல மாட்டி இப்ப அவங்கட ஊட்ல சல்லி குடுக்கரல்ல'

'அப்ப ஒங்கட சல்லிக்கி ரெண்டு பேரும் குடிக்கிர'

'இல்ல நா இப்ப குடிக்கிரல்ல..'

'எப்ப கடசியா அடிச்சிங்க...'

'இப்ப ரெண்டு வருஷத்துக்கு முந்தி...'

'ஒண்டும் மறைக்காம சொல்லுங்க பார்போம்..'

'ஊட்ல சல்லி களவெடுக்குரா...

'முந்தித்தான்... இப்ப எடுக்குரல்ல'

அவனுடைய தந்தை கண் புற்றுநோய்க்கு சிகிச்சை செய்து வீட்டில் இருக்கிறார். அவரும் தினமும் பத்து சிகரெட்டுகளை கடமையாக இழுத்து வருகிறார். ஆஷிபின் மூத்த சகோதரனும் போதை எஜமானுக்கு ஓர் அடிமைதான்.

அவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தபோது நேரம் 6:40 மணியளவில் இருக்கும். வெளியே இருட்டியிருந்தது. எனது உடம்பு புல்லரித்தது. வியர்வையால் ஆடை நனைந்தும் இருந்தது.

'ஊட்ல சொல்லிகுடுக்கவா'

'பரவல்ல சொல்லி குடுங்க' என்று எந்த சங்கடமும் இன்றி சொன்னான்.

'ஊட்ல தெரியுமா..'

'எப்பயோ தெரியும் சர்...'

எது நடந்தாலும் பரவாயில்லை என்று அவனது வீட்டுக்கு செல்கிறேன். போகும் வழிகள் மிகவும் ஒடுக்கமாக இருந்தது. எங்கு பார்த்தாலும் பெண் கள் வீதி வழியே கதைத்துக் கொண்டிருக்கிறார் கள்... சிறுவர்கள் ஓடித் திரிகின்றார்கள். மங்கலமா, அவமங்கலமா? எதுவும் புரியவில்லை.

போகும் வழியில் ஒரு வீட்டுக்கு அருகில் ஒருவன் குடித்து விட்டு ஆடிக்கொண்டிருந்தான். அந்த வீடு ஆற்றுக்கு அருகில் எப்போது விழப் போகிறேன் என்றிருந்தது. அந்த வீட்டுக்குள் ஆஷிப் செல்கிறான்.

எதுவும் பேச என்னிடம் சக்தி இருக்க வில்லை... மீண்டும் திரும்பி வருகிறேன்..

எங்கே துவங்குவது, எங்கே முடிப்பது என குழப்பமாக இருக்கிறது. அவன் இப்படி மாறி யிருக்க யார் காரணம், அவன் காணும் மூத்த முன்மாதிரிகளா, இல்லை அவன் வசிக்கும் அந்த சூழலா?

அந்தக் கிராமத்தில் படித்தவர்களும் தாராள மாக இருக்கின்றனர். மார்க்கம் தெரிந்த ஆலிம் களும் இருக்கின்றனர். படிப்பவன் பட்டம் பெற்று வெளியேறி வருகிறான். ஆனால், குடிகாரர்கள் எந்தப் பாரபட்சமுமின்றி அந்தச் சிறுககளை தம் வழியில் வழிப்படுத்தி வருகிறார்கள். குடிப்பவன் செய்யும் வேலையை படிப்பவன் ஏன் செய்ய மறுக்கிறான். செல்வத்தை யும் செல்வாக்கையும் கற்ற சமூகத்தார்கள் எப்போது தேடி அலைய ஆரம்பித்தார்களோ அப்போதே எம் சமூகத்தின் எழுச்சி வீழ்ச்சியாகிப் போய்விட்டது.

முதலில் தமது முன்மாதிரிகளை வேறுபடுத்தி கற்றுக் கொடுக்க வேண்டும், அடுத்து சூழலை வேறு பிரித்தறியும் விளக்கத்தை வழங்க வேண்டும். சூழல் என்றால் பாடசாலைச் சூழல், வீட்டுச் சூழல், ஊர், கிராம சூழல் ஆகியவற்றை மட்டுமல்ல, இப்போது சமூக வலைத்தள சூழலையும் கவனத்தில் கொள்ள வேண்டிய நிலை காணப்படுகிறது.

உரையாடல்கள் தொடரும் இன்ஷா அல்லாஹ்

இம்தாஸ் அன்சார், கம்பளை

# மன நிம்மதியுடன் வாழ சில உபதேசங்கள்

ஷெய்க் அபூ ஹப்ஸ் மொரித்தானி

தமிழில் - பாதிஹ்

1. வைகறைத் தொழுகையுடன் நாளை ஆரம்பியுங்கள். காலை திக்ர்களை ஓதுங்கள். அல்லாஹ் மீது நம்பிக்கை வைத்திருங்கள். மன நிம்மதியும் இலகுவும் வெற்றியும் கிடைக்கும்.
2. பாவமன்னிப்பில் தொடர்ந்து ஈடுபடுங்கள். அது உங்கள் பாவங்களை அழிக்கும். வாழ்வாதாரத்தை பெருக்கும்.
3. பிரார்த்தனை புரிவதை நிறுத்தி விடாதீர்கள். அது உங்களை காப்பாற்றும் கயிறாகும்.
4. உங்களது வார்த்தைகள் மலக்குகளால் எழுதப்படுகின்றன என்பதை நினைவில் வைத்திருங்கள்.
5. புயலுக்குள் சிக்குண்டாலும் நம்பிக்கையுடன் இருங்கள்.
6. விரல்களின் அழகு அது தஸ்பீஹ் செய்வதில் உள்ளது.
7. சோகங்கள் பீடித்து கவலைகள் அதிகரித்தால் ''லா இலாஹ இல்லல்லாஹ்'' எனக் கூறுங்கள்.
8. பணத்தை வழங்கி ஏழைகளின் அன்பையும் பிரார்த்தனையையும் வாங்குங்கள்.
9. உள்ளச்சம் நிறைந்த ஒரு ஸஜ்தா புவியிலுள்ள தங்கத்தை விட மிகவும் சிறந்தது.
10. வார்த்தைகளை மொழிய முன்னர் சிந்தியுங்கள். ஆட்களை கொல்லும் எத்தனையோ வார்த்தைகள் உள்ளன.
11. அநியாயமிழைக்கப்பட்டவனின் பிரார்த்தனை குறித்தும், ஏதும் கிடைக்காதவனின் கண்ணீர் துளி குறித்தும் எச்சரிக்கையாய் இருங்கள்.
12. புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் வாசிக்க முன்னர் அல்-குர்ஆனை வாசியுங்கள்.
13. உங்கள் குடும்பத்தின் ஸ்திரத்தன்மைக்கு காரணமாக இருங்கள்.
14. உங்கள் மனதை கட்டுப்படுத்த பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். அது எப்போதும் மனோயிச்சைப் படி நடக்கவே முயல்கிறது.





15. பெற்றோரின் கரங்களை முத்தமிடுங்கள். அவர்களின் மனத்திருப்தியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

16. உங்கள் பழைய ஆடை ஏழைக்கு புதிய ஆடை.

17. கோபமும், பொறாமையும் கொள்ளாதீர்கள். சேர்ந்து நடக்குமாறு அல்லாஹ் கட்டளை யிட்டிருப்பவர்களை துண்டித்து நடக்காதீர் கள். வாழ்க்கை என்பது நீங்கள் கற்பனை செய்வதை விட மிகவும் குறுகியது.

18. மிகப் பலசாலிகளின் பலசாலியும், மிகப் பெரும் பணக்காரனுமான அல்லாஹ்வை எப்போதும் உங்களுடன் வைத்திருங்கள். அவன் மீது எப்போதும் நம்பிக்கை வையுங்கள்.

19. ஏற்றுக் கொள்ளப்படுதலின் வாயிலை பாவம் செய்வதன் மூலம் மூடிவிடாதீர்கள்.

20. பொறுமையும் தொழுகையும் துன்பங்களை யும் களைப்பையும் போக்கி கடமை களையும் சிறந்த முறையில் நிறைவேற்று வதற்கு உதவி செய்பவையாகும்.

21. கெட்ட எண்ணங்களை விட்டுவிடுங்கள். மகிழ்ச்சியும், மனநிம்மதியும் பெறுவீர்கள்.

22. அனைத்து கவலைகளுக்கும் காரணம் அல்லாஹ்வைப் புறக்கணிப்பதே. அவனிடம் திரும்புங்கள்.

23. தொடர்ந்து தொழுது வாருங்கள். உங்கள் மண்ணறைக்கு அது வரும்.

24. உங்கள் மீது பொறாமைப்படுபவர்கள் இருப்பதை செவியுற்றால் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுமாறு தெரிவியுங்கள்.

25. தொடர்ந்து சூறா தபாரகவை ஓதிவாருங்கள். அது உங்களைக் காக்கும்.

26. எதுவுமே கிடைக்காதவன் யாரென்றால் உள்ளச்சமான தொழுகையையும், கண்ணீர் சிந்தும் கண்களையும் கொண்டிராதவனாகும்.

27. கவனிப்பாரற்றிருக்கும் மனிதர்களை நோவினைப்படுத்தாதீர்கள்.

28. முழு அன்பையும் அல்லாஹ் மீதும் அவனது தூதர் மீதும் வைத்திருங்கள். மக்களுடன் நற்பண்புகளுடன் பழகுங்கள்.

29. பொறாமைப்படுபவனை மன்னித்து விடுங்கள். அவன்தான் உங்களுக்கு அவனு டைய நன்மைகளை பரிசாகத் தருபவன்.

30. தொழுகையும் குர்ஆன் ஓதுதலும் இறை நினைவும் முகத்தில் ஒளியை ஏற்படுத்து கின்றன. உள்ளத்தில் மன அமைதியைத் தருகின்றன. தொழிலில் வெற்றியைத் தருகின்றன.

31. நரக நெருப்பை அஞ்சுபவன் பாவங்களைத் தூண்டுபவைகளிடமிருந்து பொறுமையாய் இருந்து கொள்ள வேண்டும்.

32. இரவு அகன்றுவிடும்போது கவலைகள் நீங்குகின்றன. இறுக்கம் தளர்வடைந்து இடைவெளி வியாபிக்கிறது. கஷ்டங்கள் இலகுவாகின்றன.

33. அற்பமான கதைகளை, வசனங்களை வெறுத்தொதுக்குங்கள். உங்களிடம் மலையளவு வேலைகளை வைத்திருங்கள்.

34. உள்ளச்சத்துடன் தொழுகையில் ஈடுபடுங் கள். தொழுகையை விட சிறிய விடயத் தையே எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள்.

35. அல்-குர்ஆனை தலையருகே வைத்திருங்கள். ஒரு அல்குர்ஆன் வசனத்தை ஓதுவது உலகத்தையும் அதன் மீதுள்ள அனைத்தையும் விட சிறந்தது.

36. வாழ்வு அழகானது. அதனை விட அழகானது நீங்கள் இறை விசுவாசத்துடன் இருப்பதாகும்.



# நீங்களும் பணிவுள்ளவர் தானே!

இவ்வுலகத்தில் பெருமைப்படாமல் வாழ்ந்தவர்கள் ஒரு சிலரையே வரலாறு படம்பிடித்துக் காட்டுகின்றது. மற்ற அனைவரும் ஏதோ ஒருவகையில் பெருமைப்பட்டு இருப்பார்கள். அதில் நீங்களும் நானும் விதிவிலக்கா என்ன?. சிலர் தான் செய்கின்ற அனைத்து விடயங்களுக்கும், சிலர் தன் குடும்பத்தில் செய்கின்ற காரியங்களுக்கும், சிலர் அறிவுப் பட்டங்களைப் பெறுவதன் மூலமும், இன்னும் சிலர் எதற்கு பெருமைப்படுகிறேன் என்று தெரியாமலும் பெருமைப்பட்டுக் கொண்டு 'நான் தான் பெரியவன், எனக்குதான் எல்லாம் தெரியும்' எனும் பாணியில் வாழ்ந்தார்கள், ஏன் இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

'நீங்கள் பெருமை பிடித்தவர் இல்லை' என்று நன்றாக தெரியும். ஏனென்றால், பெருமை பிடித்தவன் தொடர்ந்து வாசித்துக் கொண்டிருக்க மாட்டான். பெருமை, தலைக்கணம், அகங்காரம் போன்ற சொற்களை செ விமடுக்கவும் மாட்டான். இது தொடர்பான விடயங்களை வாசிக்கவும் மாட்டான். மனிதன் என்ற வகையில் அனைவருக்கும் பெருமை வர வேண்டும். ஆனால், உடனே அதனை பணிவு எனும் ஆயுதம் கொண்டு வெட்டி வீசி விட வேண்டும். அதற்கான ஒரு வழிகாட்டலையே இங்கே பார்க்கப் போகிறோம். தொடர்ந்து வாசியுங்கள், யதார்த்த வாழ்வியலைப் புரிந்துகொள்ளலாம்.

சரி, தலைப்புக்குள் நுழையலாம்.எமக்கு ஏற்படுகின்ற பெருமையை அடக்க மிகச் சிறந்த ஆயுதம் பணிவுதான் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஏனெனில், தற்பெருமையின்றி அடக்கமாக இருப்பதையே பணிவு என்பார்கள். வேறு வகையில் சொல்வதென்றால் பிறரது சுயமரியாதைக்கு பங்கம் விளைவிக்காமல், அவர்களது உணர்வுகளைப் புரிந்து நடப்பது எனக் கூறலாம். உதாரணமாக, ஒரு குடும்பத்தில் இரு பிள்ளைகள் இருக்கின்றனர். அதில் ஒருவன் குடும்பத்துக்காக மாடாக உழைக்கிறவன். இவன் தான் வீட்டுச் செலவுகள் அனைத்தையும் பார்க்கிறான். இதனால் அவன் அடிக்கடிதான் செய்தவற்றை சொல்லிக் காட்டி, அடுத்தவனை நக்கலாக குத்திக் காட்டி பேசுவான். ஆனால், மற்றவனோ தொழிலுக்காக காத்துக் கொண்டிருப்பவன். தன் வீட்டில் நடக்கும் அனைத்தையும் சமாளித்துச் செல்வான். எல்லோருடனும் பாசமாக இருப்பான். இதில் அந்தக் குடும்பம் யாருடன் அன்பாக இருக்கும்???



முதலாமவன் என்னதான் உழைத்துக் கொட்டி னாலும் மனித உள்ளங்களுக்கு பணிவு, அடக்கம்தான் தேவை. எனவே, எல்லோரும் இரண்டாமவனுடன் தான் அன்பாக இருக்க விரும்புவர். இதுதான் யதார்த்தமும் கூட.

ஒரு மனிதன் எப்போதெல்லாம் பணிவாக இருக்கிறானோ, அப்போது பாசமும், உதவியும், நட்பும், உறவும் அவனைத் தேடிவரும் என்பது நிச்சயம். இப்படி உங்கள் வாழ்விலும் நடந்திருக்கலாம். நடந்திராவிட்டால் கவலையை விடுங்கள். நடத்திக் காட்டுவோம்.

ஸூரத்துல் பகறா, 45வது வசனத்தில் மனிதர்களைப் பொறுமையையும் தொழுகையையும் கொண்டு அல்லாஹ் உதவி தேடச் சொல்கிறான். இவ்விடத்தில் இவை இரண்டையும் கொண்டு உதவி தேடுவது பணிவுள்ளவர்களைத் தவிர மற்றவர்களுக்குப் பாரமாக இருக்கும் என்கிறான். இவ்வச னத்திலிருந்து பணிவுக் குணம் உள்ளவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் பொறுமையை பேணுவதுடன் தொழுகையையும் தவறாமல் நிலைநாட்டுவர். இவ்விரண்டு பண்பும் உங்களிடம் பணிவு இருந்தால் சரி, இல்லாவிட்டால் நாளை வேண்டாம் இன்று முதலே செயற்படுத்தத் தயாராகுங்கள்.

இந்த பணிவுக் குணம் உள்ளவர்கள் எப்போதும் பூமியில் பணிவாக நடப்பார்கள். மற்றவர்கள் 'அவனுக்கு தலக்கணம், அவனுக்குத் திமிர், அவனா? அவன் ஒரு பெருமபுடிச்சவன்' என்று சொல்ல மாட்டார்கள். இதனை ஸூரத்துல் புர்கான் 63வது வசனம் தெளிவுபடுத்துகின்றது.

'பணிந்து செல்வது பலவீனம், பணிந்தால் மரியாதைக் குறைவு ஏற்படும்' என்றெண்ணி நம்மில் சிலர் மடயர்களாக வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். உண்மையில், ''யார் அல்லாஹ்வுக்காகப் பணிந்து நடக்கிறாரோ அவரை அவன் உயர்த்தாமல் விடமாட்டான்.'' (முஸ்லிம்) என நபிமொழி சான்று பகர்கின்றதே!.

இப்போது பணிவு என்பதற்கு சில உதார ணங்களை பார்ப்போம். அல்லாஹ்வினுடைய ஏவல் விலக்கல்களில் பணிவு, ஆடையமைப்பில் பணிவு, குடும்ப விவகாரங்களில் பணிவு, சிறுவர் களுடன் பணிவு. இந்த வகையில் பணிவென்பது ஒவ்வொரு இடத்திற்கும், சந்தர்ப்பத்திற்கும் ஏற்ப மாறுபடும். அதனை எமது பகுத்தறிவை வைத்து சுதாகரித்துக் கொள்ளவேண்டும்.

இப்போது உங்களுக்கு பணிவு பற்றிய தெளிவு கிடைத்திருக்கமென்று நம்புகிறேன். அடுத்து மென்மேலும் நமது பணிவை அதிகரித்துக் கொள்ள என்னவெல்லாம் செய்யலாம் என்று நோக்குவோம்.

- அதிகமதிகம் அல்லாஹ்விடம் துஆ கேட்டல்
- அல்லாஹ்வின் திருப்தியை மாத்திரம் நாடி செயற்படுதல்
- சுயவிசாரணை செய்தல்
- அனைத்து விடயங்களிலும் சகிப்புத் தன்மையுடன் நடந்துகொள்ளல்
- அதிகமாக அல்-குர்ஆனை ஓதுதல்

இவற்றை வளர்த்துக் கொள்கின்றபோது பணிவு என்பது எம்மோடு ஒன்றித்ததாக மாறும். இதன்போது அனைவராலும் நேசிக்கப்படும், விரும்பப்படும் நபராக மாற முடியும். இறுதியில் நீங்களும் தானே. அதாவது 'நீங்களும் பணிவுள்ளவர் தானே!' என உங்கள் உள்ளங்கள் சொல்லிக்கொண்டிருக்கும். அந்த இன்பகரமான நொடியை அனுபவிக்க நீங்கள் தயாராகி விட்டீர்களா?... பிறகு என்ன தாமதம்???
செயற்படத்துவங்குங்கள்...

**ஸுஹைமி செய்ன் (இர்பானி)**
அறபுமொழிப்பீடம்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# முதலில் உன்னை மாற்று உன்னை சூழ உலகம் அதுவாக மாறிவிடும்

உன் வாழ்வில் வெற்றிபெற முதலில் முயன்று பார் உன்னாலும் முடியும். மாற்றத்துக்கு வயது எல்லை கிடையாது. ஊனம் காரணமாக அமை யாது. ஆசையும் அவாவும் முயற்சிக்கு மட்டுமே போதும். ''நீங்கள் உங்களை மாற்றாத வரை அல்லாஹ்வும் உங்களை மாற்ற மாட்டான்'' என்பது அல்குர்ஆன் கூறும் அடிப்படை விதி. அப்படியாக தன்னை மாற்றி உலகில் மாறுதல் கண்டு திருப்தியாக மரணித்த ஒரு பெரியவரின் வரலாற்று சுருக்கம் இது. அவர்தான் தனது நொண்டிக்காலால் தவழ்ந்து சென்று சுவன வாடையை உணர்ந்து அதற்காக ஷஹீதானவர்.

சிலை வணக்கத்தில் தன்னை மொத்தமாக இழந்திருந்தார் அந்த பெரிய மனிதர். வயது அறுபதை தாண்டி இருந்தது. ஆனால், தனது பிழையான கொள்கையில் அவருக்கு பிடிப்பும் பற்றும் நம்பிக்கையும் அடிமனதில் நிலையாக வேர்கொண்டிருந்தது. மதீனத்து தலைவர்களில் பிரபலமானவராக அவர் கருதப்பட்டார். பனூ ஸலமா கோத்திரத்தில் அவரது புகழ் கொடி கட்டிப் பறந்தது. ஜாஹிலிய சிந்தனை வட்டாரத் தில் மிகச் சிறந்த மனிதராக போற்றப்பட்டார்.

பெறுமதியான பலகையால் வடிவமைக்கப் பட்ட மனாத் எனும் சிலைக்கு முன்னாள் அம்ர் தன்னை அடிமையாக்கி இழந்திருந்தார். எதுவுமே செய்யாத அந்த மனாத்தை அழகு பார்ப்பதிலும் ஜோடிப்பதிலும் தனது அதிகமான நேரத்தை கழிப்பார். மனாத்தின் உள்ளம் நோகும்படி எதுவுமே செய்ய மாட்டார்.மனாத்தை ஆலோசிக் காமல் வாழ்வை ஆரம்பிக்கவே மாட்டார். இப்படியாக மனாத்தும் அம்ரும் ஒன்றுக்குள் ஒன்றாகச் சங்கமித்துப் போனவேளை...

மதீனாவில் இஸ்லாமிய போதனைகளை மக்களுக்கு வழங்கி வந்தார் நபித்தோழர் முஸ்அப் இப்னு உமைர்.தனது பரம்பரை செல்வ செழிப் பை இஸ்லாத்துக்கு முன்னாள் துச்சமென மதித்து தூக்கி எறிந்துவிட்டு வந்த அழகு நிறைந்த கட்டிளம் வாலிபர் அவர். இஸ்லாத்துக்காக எல்லாவற்றையும் செய்து கடைசியில் அதிலே மரணித்து அடக்கம் செய்யக்கூட கபன் இல்லாத அளவுக்கு இத்கர் எனும் ஒருவகை புல்லால் கபன் செய்து மூடப்பட்டு அடக்கப்பட்ட பெருமைக் குரியவர்.

இந்த உமைர் எனும் தோழரால் கவரப்பட்ட அம்ரின் புதல்வர்களின் மாற்றம் அம்ரையும் விடவில்லை. ஈமானிய கீற்றுக்கள் அவரது உள்ளத்தை கடுகதி வேகத்தில் துளைத்தன. காலைச் சூரியன் போல இருளை அகற்றிக் கொண்டு அவரது உள்ளம் பிரகாசம் காணத் தொடங்கியது. இதுவரை வாழ்ந்த வாழ்வை எண்ணி வருந்தினார். இயலாமை, போலி, பித்தலாட்டங்களுக்கு முன்னாள் தனது மனதின் மகா சக்தி கண்டு வியந்தார். தனது ஊனத்தை ஒரு புறம் தூக்கி எறிந்துவிட்டு தனது சிந்தனையை மேயவிட்டார். ஈமான் அவராய் வருடிக்கொள்கிறது. ஸூரா பாத்திஹாவின் வசனங்கள் அறுபது வயது தாண்டிய பிறகு அவரது ஆன்மாவை உசுப்பி விடுகின்றன.


நொண்டிக் காலால் சுவனம் நுழைய ஆசை வைக்கிறார். ஓடோடி வந்து நபியவர்களிடம் இஸ்லாத்தில் இணைகிறார். உஹத் யுத்தத்துக் காண அறைகூவல் வருகிறது. தனது ஊனத்தை காரணம் காட்டாமல் நபியவர்களுடன் இணைந்து விருப்பத்தோடு போராடுகிறார். போராடி ஷஹீத் ஆகிறார். இதுதான் முயற்சி. இதுதான் உயர்ந்த சாதனை. சாதிப்பதற்கு எதுவுமே தடையில்லை. சுவனம் செல்ல ஊனம் தடையே இல்லை.



# இந்தியாவின் பறவை மனிதர்

# சலீம் அலி

ஹெட்டி ரம்ஸி



மயிலும், அன்னமும், காக்கையும், குருவியும், குயிலும், புறாவும், கிளியும், கீச்சான் குருவியும் எல்லாம் நம் அன்றாட வாழ்வோடு பிண்ணிப் பிணைந்தே நாம் வாழ்ந்து வளர்ந்து வந்திருக்கி றோம். மகாகவி பாரதியாரும் 'விட்டு விடுதலை யாகி நிற்பாய்.. அந்தச் சிட்டுக் குருவியைப் போல்' என்றும், 'காக்கை குருவி எங்கள் ஜாதி'.. 'நீர் கடலும், மலையும் எங்கள் கூட்டம்' என்று பாடியுள்ளார்.

இப்படி நம் தினசரி வாழ்க்கையுடன் நெருங்கிய பறவைகள் எத்தனையோ கண்டுபிடிப்புகளுக்கும் காரணமாக இருந்திருக்கிறது என்பதை அறிந்தால் நீங்கள் ஆச்சரியப்படாமல் இருக்க மாட்டீர்கள்.

நமது முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம்கூட அவருடைய கல்வி நாட்களில் அவருடைய ஆசிரியர் கரும்பலகையில் வரைந்து காட்டிய ஒரு பறவையின் படம்தான் அவரை பிற்காலத்தில் 'இந்தியாவின் ஏவுகணைத் துறையின் தந்தை' என்று உலகமே கண்டு வியக்கும் உயர்ந்த இடத்துக்கு இட்டுச் சென்றது. சிபி மன்னன் ஒரு பறவைக்காக தன் உடலின் சதையை அறுத்துத் தந்தான் என்ற இலக்கிய செய்தியைப் போல் பற வைகள் இவர்களுடைய வாழ்க்கையையே திசை திருப்பியிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

பறவைகள் வாழ்வு, இயற்கைப் பாதுகாப்புக்காக வாழ்நாளின் பெரும் பகுதியை செலவிட்ட ஆராய்ச்சி யாளர் 'சலீம் மொய்சுதீன் அப்துல் அலி' பற்றிய சொல்வண்ணமே இந்தக் கட்டுரை பதிப்பு.

மும்பையில் நவம்பர் 12, 1896 ஆம் ஆண்டு பிறந்த இவர், சிறுவயதில் பெற்றோரை இழந்தவர். மாமா விடம்தான் வளர்ந்தார். இளம் வயதில் விளையாட் டுத் துப்பாக்கியால் ஒரு சிட்டுக் குருவியை சுட்டு விட்டார். இறந்து விழுந்த குருவியை அவரால் மறக்கவே முடியவில்லை. பிறகு இறந்து போன அக்குருவியின் கழுத்தில் திட்டாக மஞ்சள் நிறக் கறை படிந்திருப்பதைக் கண்டார் சலீம் அலி. இதற் கான காரணத்தைத் தன் சித்தப்பாவிடம் கேட்க, அவரோ அப்போது மும்பாய் இயற்கை வரலாற்றுக் கழகத்தின் கௌரவச் செயலராக இருந்த டபிள்யூ. எஸ். மில்லர்ட் (W.S. Millard) என்பவரிடம் சலீம் அலியை அறிமுகப்படுத்தினார்.

மில்லர்டின் உதவியுடன் பறவைகளை எவ்வாறு அறிந்துகொள்வது, எப்படிப் பாதுகாப்பது போன்ற விவரங்களை சலீம் அலி தெரிந்துகொள்ள முடிந்தது. அப்பொழுதிலிருந்து சலீம் அலிக்கு பறவைகள் மீது தீராத நாட்டம் பிறந்தது. பின்பு கல்லூரிப் படிப்பை மேற்கொண்ட போதிலும் பட்டம் ஏதும் பெற வில்லை. கல்லூரியில் படிக்கும்போது, தொழிலில் அண்ணனுக்கு உதவ பர்மா சென்றவரின் மனம் பறவைகளைச் சுற்றியே சிறகடித்துக் கொண்டிருந்தது.

சலீம் அலியின் 18 ஆவது வயதில், 1918 டிசம்பரில் சலீம் அலிக்கும் தெஃமினாவுக்கும் திருமணம் நடை பெற்றது. சலீம் அலியின் வணிகம் காரணமாக இவர்கள் இருவரும் சிறிது காலம் பர்மாவில் வாழ்ந்தனர். திருமணமாகி குடும்ப வாழ்க்கையை மேற்கொண்ட சலீம் அலி வேலையின்றி வாடினார். ஆனால், அவரது மனைவி தெஹ்மினா பணியில் இருந்தமையால் வறுமைத் துன்பம் பெருமளவுக்கு அவரைத் தாக்கவில்லை.

வேலையின்றி இருந்த நாட்களில் சலீம் அலி தனது வீட்டுத் தோட்டத்திலிருந்த மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு பறவைகளை நோட்டம் விடுவது வழக்கம். புதுப்புது பறவை மாதிரிகள், இறகுகளை சேகரித்தார். மீண்டும் மும்பை திரும்பி விலங்கியல் படித்தார். பின்னர், தேசிய வரலாற்றுக்

கழக அருங்காட்சியகத்தில் 'Guide' (வழிகாட்டி) வேலை கிடைத்தது. ஏற்கனவே பறவைகளின் வாழ்க்கை முறையில் நாட்டம் கொண்டிருந்த சலீம் அலிக்கு இவ்வேலை மேலும் அத்துறையில் ஆர் வத்தை ஊட்டியது.

பறவையியலில் தன் அறிவை மேலும் வளர்த் துக் கொள்ள சலீம் அலி ஜெர்மனி சென்று டாக்டர் இர்வின் ஸ்ட்ராஸ்மன் என்பவரிடம் பயிற்சி பெற் றார். பயிற்சி முடிந்து இந்தியா திரும்பியவுடன், தன் வாழ்க்கைச் செலவுக்குப் போதிய வருமான மின்றி சலீம் அலி வாட நேர்ந்தது. அவர் ஏற்கனவே பார்த்து வந்த வழிகாட்டி வேலையும் பண நெருக்கடி காரணமாக நிரப்பப்படவில்லை.

தூக்கணாங் குருவியின் வாழ்க்கை முறை பற்றி *1930* இல் ஆய்வுக் கட்டுரை வெளியிட்டு புகழ் பெற்றார். *1932* இல் 'கேரளப் பறவைகள்' என்ற நூலை எழுதி வெளியிட்டார். பறவையியல் தொடர் பான பத்திரிகை ஒன்றை நடத்தினார். வெளிநாட்டுப் பறவைகள் குறித்து ஆராய்வதில் ஆர்வம் காட்டாத அவர், நம் நாட்டு பறவைகள் குறித்து அறிந்து கொள்ளவே நிறைய இருக்கிறது என்று கருதினார். நீண்ட காலம் 'மும்பாய் வரலாற்று சங்கத் தலைவ ராகப் பணிபுரிந்தபோது பறவையியலுக்காக (Ornitho logy) பத்திரிகை ஒன்றை நடத்தினார்.

*1942* ஆம் ஆண்டு 'இந்தியப் பறவைகள்' (The Book of Indian Birds) என்னும் அரிய நூலை எழுதி வெளியிட்டார். இந்திய சுதந்திரத்திற்குப் பின் பண் டித ஜவஹர்லால் நேருவின் குடும்பத்தினருடன் ஏற்பட்ட நட்புறவின் தொடர்ச்சியாக தேசிய அள வில் பறவைகள் சரணாலயங்கள் அமைக்க இவர் ஆற்றியத் தொண்டு மகத்தானது.

''கண்டுப்பிடிப்பு என்பது வெறும் புதுமைகள் நிகழ்த்துவதில் இல்லை. அந்தத் துறை பற்றி முற்றி லும் அறிந்து கொள்ள முனையும் எத்தனிப்பே, முக்கியமானது'' என்பது கண்டுப் பிடிப்பைக் குறித்து இவர் கொண்டிருந்த கொள்கை ஆகும். *1948* ஆம் ஆண்டு பேராசிரியர் எஸ். தில்லான் ரிப்லீயுடன் இணைந்து சர்வதேச அளவிலான ஆய்வுத் திட்டம் ஒன்றைத் தீட்டினார். *1955* ஆம் ஆண்டு இவரது சிங் கப்பூர் நண்பர் லோக் தாவோவின் பொருள் உதவி யுடன் மேற்கொண்ட ஆய்வின் பயனாக 'சிக்கிம் பறவைகள்' (Birds of Sikim) என்ற நூலை வெளி யிட்டார். பின்னர் *1974* - ஆம் ஆண்டு ''இந்திய மற்றும் பாகிஸ்தான் பறவைகள் பற்றிய கையேடு'' (Handbook of Birds of India and Pakistan) என்ற பத்து மாபெருந் தொகுதிகள் இவரது சிரிய முயற்சியால் நூலாக வெளிவந்தது.

சலீம் அலி உலகின் மிகச் சிறந்த பறவையியா ளாளர்களுள் ஒருவர். அவரின் வாழ்நாள் முழுவதும் இயற்கையியல்வாதியாகவே வாழ்ந்திருக்கிறார். மேலும் அவரை பெருமைப்படுத்தும் விதமாகவும், செல்லமாகவும் கூட 'இந்தியாவின் பறவை மனிதர்'' என்றும் அழைத்தனர்.

உலகிலேயும் சரி, இந்தியாவிலும் சரி, பறவை களைப் பற்றி முறையாக அறிந்து அவற்றை கணக் கெடுப்பு செய்தவர்களில் சலீம் அலியும் ஒருவர். அவரின் ஆராய்ச்சி முக்கியமாக பறவைகளின் கருவி யல் தொடர்பாகவே இருந்தது. சலீம் அலியின் உலகமே இந்திய நாட்டுப் பறவைகளோடு பின்னிப் பிணைந்ததாக விளங்கியது. இந்நிலையில் அவர் உலகப் புகழ் வாய்ந்த பறவையியல் அறிஞரான 'எஸ். தில்லான் ரிப்ளே' என்பவருடன் தொடர்பு களை ஏற்படுத்திக் கொண்டார். அப்போது இந்தியத் துணைக் கண்டத்துப் பறவைகளைப் பற்றி 10 தொகுதிகளைக் கொண்ட தொகுப்பு நூல் ஒன்றைப் படிக்க நேர்ந்தது.

இத்தொகுப்பில் பறவைகளைப் பற்றிய பல் வேறு விவரங்களும், அதாவது அவற்றின் தோற்றம், உணவுப் பழக்க வழக்கம், இனப்பெருக்க முறை, வலசை போதல் போன்ற பல்வேறு செய்திகளும் அடங்கியிருந்தன. பறவைகளைப் பற்றி அறிந்து கொள்வதை தனது பொழுதுபோக்காக மட்டுமன்றி, வாழ்க்கைப் பணியாகவே சலீம் அலி மேற்கொண்டி ருந்தார். தன்னார்வத்தினால் அரிய பல அறிவியல் கண்டுபிடிப்புகள் நிகழ்த்திய இவருக்கு மேற்கூறிய விருதுகளும், ஜே.பால் கெயிட்டி வனவிலங்கு பாதுகாப்பு விருதும், தேசிய பறவை பேராசிரியர் விருது எனப் பாராட்டுகள் தேடி வந்தன.

மக்கள் அவரை, 'பறவைகளைப் பற்றிய நட மாடும் கலைக்களஞ்சியம்' என்றே அழைத்தனர். ஏறக்குறைய 65 ஆண்டுகள் இடைவிடாது பல்வேறு இடங்களுக்கும் பயணம் செய்து, தான் விருப்பத் தோடு ஏற்றுக்கொண்ட பணியில் பெரும் சாதனை களைப் புரிந்த சலீம் அலிக்கு அப்பட்டம் மிகவும் பொருத்தமே. மேலும் இவர் பத்ம பூஷண் *(1958)*, பிரித்தானியப் பறவையியல் கழகத்தின் விருது *(1967)*, ஜோன் சி. பிலிப்ஸ் விருது (World Conservation Union - *1969)*, பத்ம விபூஷண் *(1976)*, J. Paul Getty Wildlife Conservation Prize of the World Wildlife Fund *(1976)*, Commander of the Netherlands (Order of the Golden Ark) *(1986)* போன்ற பல விருதுகளையும் வாங்கி சாதனை படைத்துள்ளார்.

*1987* ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்த இந்திய மாமேதை இவ்வுலகை விட்டு பிரிந்தார். ஆனால் 'ஒரு குருவியின் வீழ்வு' (The fall of a sparrow) என்ற அவரின் சுயசரிதை மூலம் இந்திய இளைஞர்களுக்கு பல கிடைக்கப்பெறாத உண்மைகளைக் கூறியிருக் கிறார்.

# பிரசங்கங்களின் போது உரத்து சத்தமிடுவதை தவிர்ப்போம்!

காலித் மிஷ்அல்

''மேலும் உன் நடையில் மத்திய தரத்தை கடைப்பிடிப்பாயாக! உன் சப்தத்தையும் தாழ்த்திக் கொள்வாயாக! ஏனென்றால் நிச்சயமாக சப்தங்களில் எல்லாம் மிக வெறுக்கத்தக்கது கழுதைகளின் சப்தமே'' என்று கூறினார். (லுக்மான்-19).

அனஸ் (ரழி) அவர்கள் நபி(ஸல்) அவர்களை பற்றி விபரிக்கும், ''நபி(ஸல்) அவர்கள் நடந்தால் ஒரு ஊன்றுகோலை ஊன்றி செல்வது போல் மெதுவாக நடப்பார்கள். அதே போல் சந்தைகளில் ஒரு போதும் சப்தத்தை உயர்த்த மாட்டார்கள்'' என குறிப்பிடுகிறார்கள்.

சமூகத்தின் கல்விமான்களால் பல இடங்களில் பேருரைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. அப்போதெல்லாம் நாம் அவதானிக்கும் ஒரு பொதுவான ஒரு விடயம் அவர்கள் சத்தத்தை உயர்த்திப் பேசுவதாகும்.

ஏன் இவ்வாறு உரத்துப் பேசுகிறார்கள்? நபி (ஸல்) அவர்கள் உரத்து சத்திமிட்டுப் பேசுவதை முற்றாக வெறுத்திருக்கிறார்கள். நாம் முன்னோக்கி பேசும் எமது முஸ்லிம்கள் பாமரர்கள் அல்ல. அவர்களுக்கு இஸ்லாத்தை அழகாகவும், அமைதியாகவும் கூறி புரிய வைக்க முடியும்.

ஆனால், இதற்கு மாற்றமான நிகழ்வுகளையே வழமையாக நாம் கண்டுவருகிறோம். ஜும்ஆ பிரசங்கங்களின் போது அதனை நடாத்தக் கூடியவர்கள் தொண்டை கிழியக் கத்துகிறார்கள். சிலபோது வெறும் அசிங்கமாக இருக்கிறது.

எமது நாடு பல்லினத்தவர்கள் வாழும் ஒன்று. எமது கூச்சல்கள் அவர்களை தொந்தரவுபடுத்திவிடக் கூடாது. எமக்கும் அடுத்த சமூகத்திற்கும் இடையிலான வெறுப்புணர்வுக்கு எமது பிரசங்கங்களும், பேச்சுக்களும் காரணமாக அமைந்து விடக்கூடாது.

எமது மதத் தலைவர்களை விட அடுத்த மதத் தலைவர்களின் உபதேசத்தை கேட்கும் போது எவ்வளவு இனிமையாக இருக்கிறது. அவர்கள் சாந்தமாக, இனிமையாகவே பேசுகின்றனர்.

எமது மதத் தலைவர்கள் ஒலிபெருக்கி முன்வந்தால் அவை வெடித்துச் சிதறுகின்றன. முரீதின்களைத் தவிர மற்ற அனைவருக்கும் அது தலைவலியையும், நேரவிரயத்தையும் ஏற்படுத்துகின்றன.

நான் பல்லின பாடசாலையில் படிக்க கூடியவன் என்ற வகையில் இதை சொல்கிறேன. உண்மையாக மேலுள்ள குர்ஆன் வசனத்திலே கூறப்பட்ட வாறு உரத்து, சத்திமிட்டுக் கத்தி உரையாற்றுவதை, பிரசங்கம் செய்வதை அல்லாஹ் வெறுக்கிறான். எமது சமூகத்தில் இருக்கக்கூடிய கத்பாக்களை, பேருரைகளை நடாத்தக் கூடியவர்கள் இவ்விடயத்தில் ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

எமது மார்க்கமான இஸ்லாம் அமைதியையும் சாந்தத்தையும் போதிக்கிறது. எனவே, நாம் சாந்தமின்றி, அமைதியின்றி நடப்பதால் ஏனைய சமூகத்துக்கு முன்நிலையில் இஸ்லாத்தின் அமைதிக்கும் சாந்தத்திற்கும் கலங்கம் விளைவிக்கின்றோம்.

சிலபோது எமது அடுத்த சமூகத்தினர் எமது உரைகளை, பிரசங்கங்களை வைத்து, எமது மார்க்கத்தை வன்மம் கொண்டதாகப் பார்க்கின்றனர். எமது பள்ளிவாயல்களிலும், மதஸ்தாபனங்களிலும் இடம்பெறும் உரைகளும், பிரசங்கங்களும் மக்களை சாடும் பாணியில் அமைந்திருப்பதாகவே அவர்கள் கருதுகின்றனர்.

இங்கு இன்னுமொன்றையும் நான் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும். எமது மௌலவிமார்கள் மிம்பரில் அல்லது பொது இடங்களில் உரைகளை நடாத்தும் போது மாற்று மதங்களை பற்றி நிந்தித்து பேசுவதையும், ஆவேசத்தை வெளிப்படுத்துவதையும் நிறுத்த வேண்டும். நாம் எங்கோ ஒரு மூலையில் பேசுகின்ற ஒரு சில வார்த்தைகள் இன்றைய தொழிநுட்ப யுகத்தில் காட்டுத் தீபோல பரவிவிடுகின்றன. சிலபோது எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போல எமது உரைகள் அமைந்துவிடலாம்.

எனவே, எமது உலமாக்கள் தமது உரைகளில், பிரசங்கங்களில் உரத்து சத்தமிடுவதை தவிர்ந்து மனிதனின் அமைதிக்கும், மனநிம்மதிக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம். அமைதியாக உள்ளத்தில் ஊடுருவும் மாற்றமே உண்மையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது என்பதை நாம் அனைவரும் புரிந்து நடப்போம்.

# குழந்தை வளர்ப்பிற்கான சில ஆலோசனைகள்



1. உங்கள் குழந்தை பரீட்சையில் பத்திற்கு நான்கு புள்ளிகள் எடுத்தாலும் மற்றைய வர்களுக்கு முன்னால் அவர்களை புகழுங் கள்.
2. உங்கள் குழந்தையை பயனற்றவர் என உணரச் செய்ய வேண்டாம். ஒருவரை விட மற்றொருவருக்கு அதிக அன்பு செலுத்த வேண்டாம்.
3. உங்கள் குழந்தையுடன் பேசும் சந்தர்ப் பங்களில் அவர்களுடன் மரியாதையாக பேசுங்கள். தருங்கள் என்று கேட்க வேண் டாம். தயவு செய்து தருங்கள் எனக் கேளுங்கள். தெளிவான, அன்பான வார்த் தைகளை பேசுங்கள்.
4. உங்கள் குழந்தை இளவயதை அடைந் தாலும் அவர்கள் சிறுவர்கள் என்பதை மனதில் பதிந்துக்கொள்ளுங்கள். அவ்வா றில்லாது அவர்களை பெரியவர்கள் போன்று நடத்தினால் அவர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவார்கள்.
5. உங்கள் குழந்தைகளுக்கு தீர்மானம் எடுப் பதற்கு உதவி செய்யுங்கள். அவர்களுக்கு வழிகாட்டுங்கள். அவர்கள் சுயமாக செயற்பட வழிகாட்டுங்கள்.
6. நீங்கள் ஒரு தீர்மானத்தை மேற்கொள் ளும்போது அவர்களின் ஆலோசனை களை பெற்றுக்கொள்ளுங்கள்.
7. உங்கள் வீட்டில் ஒரு மூலைப் பிரதே சத்தை ஒதுக்கி, உங்கள் குழந்தைகளின் சான்றிதழ்கள், பதக்கங்கள் போன்ற வற்றை காட்சிப்படுத்துங்கள்.
8. உங்கள் குழந்தை ஏழு வயதை அடைந் தால் நீங்கள் தொழும்போது அவர்களை யும் இணைத்துக்கொள்ளுங்கள்.
9. குழந்தைகளுக்கு எப்படி தமது கருத்துக் களை முன்வைக்க வேண்டும், அதற்கு உடன்படாவிட்டால் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்பதை கற்றுக் கொடுங்கள்
10. உங்கள் குழந்தைகள் கேள்விகளை கேட்க அவர்களை உற்சாகப்படுத்துங்கள். அக் கேள்விகளுக்கு பொருத்தமான பதில் களை அளியுங்கள்.
11. உங்கள் குழந்தைகளுக்கு வாக்களித்தால் அதனை நிறைவேற்றுங்கள். நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்க வேண்டாம்.
12. உங்கள் குழந்தைக்கு குழுவாக இயங்க வும் தனது திறன்களை வளர்த்துக் கொள்ளவும் கற்றுக்கொடுங்கள்.
13. உங்கள் குழந்தைகளுக்காக துஆ கேளுங் கள். அவர்கள் தவறான வழியில் சென் றாலும் கூட.
14. நீங்கள் தோல்வியடையலாம். ஆனால், நம்பிக்கையை இழந்து விட வேண்டாம் என்பதைஅவர்களுக்குகற்றுக்கொடுங்கள்.
15. நீங்கள் ஒரு தவறு செய்தால் உங்கள் குழந்தைகளிடம் மன்னிப்பு கேளுங்கள்.
16. குழந்தைகள் நல்ல விடயங்களை செய் யும்போது அவர்களை ஆச்சரியப்படுத் துங்கள். அழகிய பரிசில்களை வழங் குங்கள்.
17. உங்கள் குழந்தைகளுக்கு அல்குர்ஆனின் ஒரு பகுதியை ஒவ்வொரு நாளும் ஓதப் பழக்குங்கள்.
18. உங்கள் குழந்தையை நீங்கள் விரும்பு வதையும் அவர்கள் உங்களுக்கு எவ்வ ளவு முக்கியமானவர்கள் என்பதையும் அவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்.



# குழந்தைகளிடம் கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்தல்

## சில வழிகாட்டல் குறிப்புகள்

முர்ஷித் தாஹா

இலங்கையில் பாடசாலைக் கல்வியானது பல்வேறு பிரச்சினைகளுக்கும் தலையீடுகளுக்கும் முகங்கொடுத்து வருவதனை நாம் காண்கின்றோம். அவ்வப்போதைய அரசுகள் முன்வைக்கும் புதிய திட்டங்கள் மற்றும் கல்விக் கொள்கைகள் ஒரு பக்கமும் பாடசாலை மட்டங்களில் காணப்படுகின்ற அல்லது எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், போதாமைகள் மறுபக்கமும் காணப்படுகின்றது.

பாடசாலை கல்வியாண்டு ஒன்றில் தவணைப் பரீட்சைகள், மாதாந்தப் பரீட்சைகள், அலகுப் பரீட்சைகள் என ஏகப்பட்ட பரீட்சைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. அதிகமான பெற்றோர் குறிப்பாக, தாய்மார், தனது பிள்ளை படிப்பதிலே ஆர்வம் காட்டுவதில்லை, படித்தவற்றை உடனே மறந்துவிடுகின்றனர் என அங்கலாய்த்துக் கொள்கின்றனர். இன்னும் சில பெற்றோர் தமது பிள்ளைகள் சிறப்பாக பாடங்களை மீட்டுகின்றனர். ஆனால், பரீட்சையிலே விடைகளை எழுதுவதில் தவறிவிடுகின்றனர் என முறைப்படுகின்றனர்.

இத்தகைய நிலைமைகளால் பிள்ளைகள் பரீட்சைகளில் எதிர்பார்க்கும் பெறுபேறுகளை, புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளத் தவறுகின்றனர். இத்தகைய சிக்கல்களை, பிரச்சினைகளை எவ்வாறு எதிர்கொள்ளலாம், படித்தவற்றை மறக்காமல் முறையாக பதிலளிப்பதற்கு எத்தகைய வழிமுறைகளை கையாளலாம்? என்பதை நோக்குவோம்.

முதலாவதாக பிள்ளைகளிடம் கற்பதிலும் வாசிப்பதிலும் சுய ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் சூழலையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். சுயஆர்வம் இல்லாமல், முறையாகப் படிப்பதற்கும் வாசிப்பதற்கும் முடியாது போவது மட்டுமன்றி, படித்தவை விரைவாக மறந்தும் விடுகின்றது.

**சுய ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கு**

1. அறிவு, கல்வி மற்றும் தேடல், வாசிப்பின் முக்கியத்துவத்தினை பிள்ளைகளுக்கு உணர்த்தும் வகையிலான நடவடிக்கைகளை, நிகழ்ச்சிகளை, ஒழுங்குகளை மேற்கொள்ளல் வேண்டும். குறிப்பாக இஸ்லாம் அறிவுக்கும் அறிஞர்களுக்கும் கொடுத்துள்ள முக்கியத்துவத்தினையும் அவசியத்தினையும் உணர்த்துதல்.

2. அறிவைப் பெற்றுக் கொள்வதற்காக, கற்றுக் கொள்வதற்காக செல்வது, சுவர்க்கத்திற்குச் செல்வதற்கான பாதையை இலகுபடுத்துகின்றது. அவ்வாறே, அத்தகையவர்களுக்காக மலக்குகள் இறகுகளை விரித்து நிற்கின்றனர். பூமியில் உள்ளவையும் வானத்தில் உள்ளவையும், கடலில் உள்ள உயிரினங்கள் உட்பட, அவர்களுக்காக இஸ்திஃபார் செய்கின்றன. அறிஞருக்கும் ஆபிதுக்கும் இடையிலான வித்தியாசம், சந்திரனையும் ஏனைய கோள்களைப் போன்றதாகும். அறிஞர்கள் நபிமார்களின் வாரிசுகள். நபிமார்கள் தீனார்களையோ, திர்ஹமையோ வாரிசாக விட்டுச் செல்லமாட்டார்கள். நிச்சயமாக, அவர்கள் அறிவினையே வாரிசாக விட்டுச் செல்வார்கள். யார்

அதனை எடுத்துக் கொள்கிறார்களோ, அதனை அவர்கள் முழுமையாக பெற்றுக் கொள்வார்கள். (திர்மிதி)

3. அறிஞர்கள், சிந்தனையாளர்கள், கண்டு பிடிப்பாளர்கள், முன்னோடிகள் பற்றிய கதைகள், வாழ்க்கைக் குறிப்புகளை அவர்களுக்கு சொல்லு தல். அறிஞர்களையும் அவர்களது பணிகளையும் பாராட்டிப் பேசுதல்.

4. குழந்தைகள் ஒரு இலட்சியத்தினை (Ambition) தெரிவுசெய்வதற்கான அறிவுரைகளை வழங்கி, வழிகாட்டி உதவுதல். வைத்தியராக, பொறியியலாளராக, பல்கலைகழக விரிவுரையாள ராக, கணக்காளராக, ஊடகவியலாளராக, அதிப ராக, ஆசிரியராக மற்றும் தொழிலதிபராக, தொழில்நுட்பவியலாளராக அல்லது இது போன்ற ஒருவராக வருவதற்கான ஆசையை விதைத்தல். அத்துடன், குழந்தையின் திறமை, ஆற்றல், ஆர்வம் என்பனவும் கவனிக்கப்படல் வேண்டும். குறித்த ஒரு துறையினை தேர்ந்தெடுப்பதற்கு பெற்றோர் கட்டாயப்படுத்தாமல் இருப்பது நல்லது. பெற்றோர் ஆலோசனைகளையும் உள வளத்துணையையும் வழங்க வேண்டும்.

5. அறிவைப் பெற்றுக் கொள்ளுதல், எதிர் காலத்தில் சிறந்த தொழில்துறையினை தேர்ந் தெடுத்து, வாழ்க்கையில் முன்னேறுவதற்காக கடுமையாக உழைக்க வேண்டியதன் முக்கியத் துவத்தை தெளிவுபடுத்தல்.

மேற்குறித்த விடயங்களுக்கு துணையாக அமையும் நடவடிக்கைகளாக

1. உடற்பயிற்சியில், விளையாட்டுகளில் அவர்களை ஈடுபடுத்துங்கள் - ஏனெனில் அது, இரத்த சுற்றோட்டத்தை சீர்படுத்துகின்றது. அதன் மூலம் உற்சாகமாக இருப்பதற்கும், ஆர்வத்துடன் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்வதுடன் நினைவாற்றலையும் ஒழுங்குபடுத்துகின்றது.

2. தூங்குவதற்கு போதுமான நேரத்தை வழங் கும் வகையில், நாளந்த நிகழ்ச்சி நிரலை ஏற் படுத்திக் கொடுத்தல். முறையான தூக்கம் இல் லாதபோது, நினைவாற்றல் பலவீனமடைகின்ற துடன், கற்கின்ற விடயங்கள் சிந்தனையில் முறையாக பதிவதில் சிக்கலை ஏற்படுத்தும்.

3. நிறை உணவில் அதிக கவனம் செலுத் துங்கள் - பிள்ளைகளுக்கு வழங்குகின்ற உணவில், புரோடீன்கள், கனிப்பொருட்கள், காபோஹைத ரைட், நார்ப் பொருட்கள் என்பன போதியளவு உள்ளடக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண் டும்.

4. உடல் ஆரோக்கியத்தில் முழுமையான கவனத்தை குவித்தல். எத்தகைய நோய் அறிகுறி கள் வெளிப்படுமாயின் உரிய நேரத்தில் உரிய நிவாரணங்களை வழங்கல்.

5. பாதுகாப்பான, அமைதியான குடும்ப சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல் கற்றல், வாசித் தல், பாடமீட்டல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தூண்டும் வகையிலான அமைதியானதும் பாது காப்பான சூழலை வீட்டில் ஏற்படுத்தல். போதி யளவான காற்றோட்டம், வெளிச்சம் மற்றும் சீதோஷன நிலைகளை ஒழுங்குபடுத்திக் கொடுத் தல். அசௌகரியம், இடைஞ்சல்களை ஏற்படுத்து கின்ற விடயங்களை தவிர்த்தல்.

6. கற்றல், பாடமீட்டல் நேரங்களை மிகச் சரியாக ஒழுங்குபடுத்திக் கொள்ளல். உணவு சாப் பிட்ட பின்னர், தூக்கம் மிகைக்கின்ற நேரங்களை தவிர்த்து, மிகச் சிறந்த நேரங்களை தேர்ந்தெடுத் தல். அதிகாலைப் பொழுதுகள், இரவு வேளைகள் மிகச் சிறந் தது.



**விடயக் குறிப்புகளை தயாரித்தல்**

**1. பாடப் பரப்பினை முதலில் விளங்குதல்**

பாடக் குறிப்புகளை மனனம் செய்வதற்கு முன்பதாக, குறித்த பாடப் பரப்பினை மிகச் சரி யாக விளங்குதல் வேண்டும். அது குறித்த பயிற்சிகளைச் செய் தல். ஏனெனில், பாடக் குறிப்

பினை விளங்குவது, அதனை விரைவாக மனனம் செய்வதற்கு உதவியாக அமைகின்றது. விளங்காமல் மனனமிடுவதனை விட மிகச் சரியாக விளங்கியதன் பின் மனனமிடுவது இலகுவாக அமைவதுடன், இலகுவாக அவற்றை மீட்டவும் முடிகின்றது.

2. பொருத்தப்பாடும் தொடர்புபடுத்தலும்

பாடப் பரப்புகளில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுகின்ற அல்லது வேறுபட்ட பாடங்களில் தொடர்புபடுகின்ற பாடப் பரப்புகளை தொடர்புபடுத்திக் கற்றல்.

3. வேறுபட்ட பாடங்கள்

ஒரே வகையான பாடப் பரப்புகளை அடுத்தடுத்து கற்காமல் அல்லது மீட்டாமல் இருத்தல் மிக முக்கியமானது. இது தகவல்கள், விடயதானங்களில் குழறுபடிகளை ஏற்படுத்துவதுடன், விரைவாக மறக்கடிக்கச் செய்யும்.

ஐந்து வகையான வாசிப்புகள்

ஐந்து வகையான வாசிப்பு ஒழுங்குகளை பிள்ளைகள் கைக்கொள்கின்றபோது, பாடங்களை, பாடப் பரப்புகளை புதிய அணுகுமுறையில் விரைவாக உள்வாங்குவதற்கும் கிரகிப்பதற்கும் உதவியாக அமைகின்றது. பாடங்களை மிகச் சரியாக முன்வைப்பதற்கு, முதலில் பாடக் குறிப்புகளை மிகச் சரியாக உள்வாங்க வேண்டும். பாடக் குறிப்புகளை உள்வாங்குகின்றபோது குறைபாடுகள், விளங்காமைகள் காணப்படின், முன்வைப்பதிலும் மீட்டுவதிலும் பிழைகள், குளறுபடிகள் ஏற்படும்.

எனவே, பாடக் குறிப்புகளை, மிகச் சரியான முறையில் பதிப்பதற்கும், உள்வாங்குவதற்கும் பின்வரும் ஐந்து வாசிப்பு வழிமுறைகளைப் பின்பற்றல் வேண்டும்.

1. விரைவான வாசிப்பு

பாடக் குறிப்பை விரைவாக வாசித்து, அது குறித்த பொதுவானதும் மொத்தமானதுமான கருத்தினை உள்வாங்கல்.

2. செயற்பாடுகளுடனான வாசிப்பு

இந்த முறைமையில், சில செயற்பாடுகளை மேற்கொண்டு, வாசிப்பதன் மூலம் பிள்ளை பாடக் குறிப்புகளை புதிய வழிமுறையினூடாக விரைவாக மனதில் பதிப்பதற்கும், உள்வாங்குவதற்கும் உதவியாக அமைகின்றது.

- பாடக் குறிப்பை சத்தமிட்டு வாசித்தல்
- பாடக் குறிப்பில் முக்கிய விடயங்கள், சொற்களின் கீழ் அடையாளமிடல் அல்லது வட்டமிடல் அல்லது நிறம் தீட்டல்
- வரலாறு, புவியியல் போன்ற பாடங்களில், வரைபடங்களைப் பயன்படுத்தல்
- பாடக் குறிப்பில் பந்திகளுக்கு, சிறு தலைப்புகளைப் பயன்படுத்தல்
- முழுமையான ஒரு பந்தி அல்லது ஒரு குறிப்பு தொடர்பில் கேள்விகளை அமைத்தல்
- குறித்த பாடக் குறிப்பில் உள்வாங்கிய விடயம் தொடர்பில் சில அமைப்புகளை, தோற்றங்களை வரைதல்
- குறித்த பாடக் குறிப்பு தொடர்பில் விசேடமாக சுருக்கம் ஒன்றை எழுதுதல்



- பாடக் குறிப்பினை அல்லது அதில் சில பகுதிகளை, பாடல்களாக மாற்றுதல்
- பாடத்தினை நடிப்பாக அல்லது செயற்பாடாக மாற்றுதல்
- பாடத்தினை அல்லது பாடக் குறிப்பினை, செய்திக் கையேடாக மாற்றுதல்
- உள்வாங்கிய, மீட்டிய பாடக் குறிப்பு தொடர்பில் சிந்தையில் ஒழுங்கமைப்பினை, பதிவினை ஏற்படுத்திக் கொள்ளல்.

3. மனனமிடுவதற்கான வாசிப்பு

இந்தச் சந்தர்ப்பத்திலேதான், பாடக் குறிப்பில் தான் விளங்கிய, உள்வாங்கிய பகுதிகளை மனனமிட முயற்சித்தல். அப்போது தான்,தேவையான சந்தர்ப்பத்தில், முழுமையாக மிகச் சரியாக முன் வைக்கலாம்.

4. சுயமாக செவிமடுத்தல்

தான் படித்த, மீட்டிய பாடக் குறிப்பினை, தானே சுயமாக மீட்டிப் பார்த்தல். இதனால் பல பயன்கள் உள்ளன. விடுபடுகின்ற, பிழையான பகுதிகளை அடையாளப்படுத்தி, திருத்திக் கொள்ளலாம்.

5 ஏனையவர்களுக்கு விளங்கப்படுத்தல்

படித்த விடயங்களை இலகுவாக நினைவில் வைத்திருப்பதற்கு வசதியாக, ஓய்வு நேரங்களில், படித்த விடயங்களை, தமது பெற்றோருக்கு, நண்பர்களுக்கு அல்லது தனது சகோதரர்களுக்கு விளக்கலாம் அல்லது அவர்களுடன் கலந்துரையாடலாம்.


நினைவாற்றலை, ஞாபகசக்தியினை வளர்ப்பதற்கு, சில விளையாட்டுகளை, செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலமாக வளர்க்கலாம், மேம்படுத்தலாம்.

1. நினைவகத் தட்டு

ஒரு பெரிய தட்டிலே, பல்வேறுபட்ட, அதிகமான பொருட்களை (திறப்பு, சிறிய பந்து, பேனாக்கள், நூல்...) வைத்து விட்டு, 10 விநாடிகள் அவற்றைப் பார்ப்பதற்கு விடுங்கள். பின் அவற்றை மறைத்து விட்டு, அவற்றில் சில பொருள்களை மீண்டும் எடுத்துக் காட்டுங்கள். பின் அவற்றையும் மறைத்துவிடுங்கள். எடுத்துக் காட்டிய பொருள்களை ஒவ்வொன்றாகக் குறிப்பிடச் சொல்லுங்கள். இவ்வாறு தொடர்ந்து மேற்கொள்வதன் மூலமாக ஞாபக சக்தியினை வளர்க்கலாம்.

2. 'நான் சந்தைக்குப் போனேன்'

பிள்ளைகளை அல்லது குடும்ப அங்கத்தவர்கள் ஒரு வட்டமாக அமர்ந்து ஒரு விளையாட்டை மேற்கொள்ளல். முதலாமவர் 'நான் சந்தைக்குச் சென்று, கரட் வாங்கினேன்' என்ற வசனத்தைக் குறிப்பிடுவார். பின்பு இரண்டாமவர், முதலாமவர் சொன்ன வசனத்துடன் சில சொற்களை



இணைத்து அதனை மீட்டுவார். உதாரணமாக, நான் சந்தைக்குச் சென்று கரட்டும் கீரையும் வாங்கினேன்' எனக் குறிப்பிடுவார். மூன்றாமவர், 'நான் சந்தைக்குச் சென்று கரட்டும், கீரையும், மிளகும் வாங்கினேன்' எனக் குறிப்பிடுவார். இவ்வாறாக தொடர்ந்து செய்கின்ற அதேவேளை, அதில் சிலவற்றை மறக்கின்றவர்கள், நீக்கப்படுவார்.

இம்முறை புதிய விடயங்களை பிள்ளை பதிவு செய்வதற்கும், நினைவாற்றலை ஊக்குவிப்பதற்கும் சிறந்தவழியாகும்.

# சொத்துப் பங்கீட்டில் சமத்துவம்

## ஆரம்பகால விவாதங்கள்

தமிழில்: ஸியாப் முஹம்மத்

கடந்த ஆகஸ்டு மாதம் தூனிசியா நாட்டு அதிபர் காஇத் சிப்ஸி பெண்களுக்கு வாரிசுச் சொத்தில் சமபங்கு அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தது தொடக்கம் அங்கும் வட ஆபிரிக்க நாடுகளில் பெரும் சர்ச்சை வெடித்திருந்தது.

முக்கியமாக வாரிசுச் சொத்துப் பங்கீடு குறித்த விடயம் இஸ்லாத்திலே குறை கண்டுபிடிக்க விரும்புவோர் கையிலெடுக்கும் விவகாரமாகவும் காணப்படுகின்ற நிலையில் இப்போலிக் குற்றம் சுமத்தல்களுக்கு தகுதியான அறிஞர்களால் அந்தந்தக் காலத்தின் மொழியில் பதில் அளிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

இஸ்லாம் கூறும் வாரிசுரிமைச் சட்டம் குறித்த விடயம், மனித சிந்தனைக்கு இடம் வைக்கத் தேவையற்ற அளவுக்கு திட்ட வட்டமான கருத்துடன் கூடிய அல்குர்ஆன் வசனங்களால் தெளிவுபடுத்தப் பட்டிருக்கின்றது.

எனவே, அந்த சட்டத்திலே மனித உற்பத்திகள் கைவைக்க இடமளிப்பது இறை வஹியை மாசு படுத்தவும் அதிலே குறை காணவும் அனுமதிப்ப தற்குச் சமமாகும். இதனாலேயே கடந்த மாதம் தூனிசிய அதிபரின் வேண்டுகோளின் போதும், இதற்கு முன்னரும் அநேக சந்தர்ப்பங்களில் இஸ்லாமிய அறிஞர்கள் ஆக்ரோஷமாக இது பற்றிப் பேசி இஸ்லாத்தின் கருத்தை மிகத் தெளிவாக முன்வைத்து வந்திருக்கிறார்கள்.

இஸ்லாம் முன்வைக்கும் சொத்துப் பங்கீட்டு விவகாரம் தொடர்பிலான விவாதங்கள் அரபுலகி லும் இஸ்லாமிய உலகிலும் கிளப்பப்பட்டு இன்னும் ஒரு நூற்றாண்டு கூடக் கழியவில்லை. இக்கருத்துக்கள் தோன்றிய வரலாற்று வேர்களை நோக்கி நாம் பயணித்தால் 1928ம் ஆண்டளவில் எகிப்தின் புத்திஜீவித்துவ, பெண்ணிய மட்டங்களில் இடம்பெற்ற விவாதங்கள் முக்கி யம் மிக்கவை. எனினும், இக்கருத்துப் பரிமாறல் களை நோக்குகையில் பெண்ணுக்கு சொத்துப் பங்கீட்டில் சமபங்கு அளிக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கை அக்கால சமூக மாற்றத்தினாலோ அல்லது முன்னேற்றகரமான சிந்தனைகளாலோ ஏற்பட்ட தொன்றல்ல என்பது துலங்குகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் அரபு-இஸ்லாமிய உலகில் மக்கள் இஸ்லாமியக் கருத்துக்களை விட்டும் தூரமாகி அவர்கள் மத்தியில் சோசலிஸக் கருத்துக்கள் அறிமுகமாகி செல்வாக்குச் செலுத்தத் துவங்கிய காலகட்டமாகும்.

முதன் முதலில் இக்காலப் பின்னணியில் எகிப்தின் கிப்தியக் கிறிஸ்தவ சிந்தனையாளர் மூஸா ஸலாமா 'கிறிஸ்தவ இளைஞர் அமைப்பு' நிகழ்வொன்றில் 1928 இல் நிகழ்த்திய விரிவுரையில் பெண்களுக்கு வாரிசுச் சொத்தில் சமபங்கு வேண்டும் என்பதை சமத்துவத்தின் அவசியம், சொத்துக்கள் இல்லாத பெண்களை ஆண்கள் விரும்பவில்லை என்பவற்றைக் காரணமாக முன்வைத்துப் பேசியிருந்தார்.

நிகழ்வுக்குப் பின்னர் எகிப்துப் பெண்ணிய அமைப்பின் நிறுவனரான ஹுதா ஷஃராவிக்கு எகிப்துப் பெண்களுக்கு இவ்விடயத்தில் நீதி கிடைக்கப் போராடுவதற்கும் அதனை அரசாங்கத்திடம் கோரிக்கையாக முன்வைக்கவும் அழைப்பு விடுக்கும் கடிதமொன்றையும் அனுப்பி வைத்திருந்தார்.

இந்த நிகழ்வுகளுக்கு எகிப்துப் பத்திரிகைகள் பெரும் இடம் கொடுக்க பரபரப்பான கருத்துக்கள் பரிமாறப்பட்டதை நோக்கலாம். எகிப்து உட்பட அரபுலகின் புத்திஜீவித்துவ மட்டங்களை இஸ்லாம் அல்லாத சிந்தனைகள் நிரப்பிக் கொண்டிருந்த அக்காலப்பகுதியில் மூஸா ஸலாமாவின் கருத்துக்களை மறுத்துப் பதிலளிப்பதில் இலக்கிய விமர்சகரான முஸ்தபா ஸாதிக் ராபிஈ மற்றும் பெண்ணியவாதியாக பிரபலம் பெற்ற ஹுதா ஷஃராவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ராபிஈ தனது கட்டுரையில் மூஸா ஸலாமா முற்றாக மேற்குலகின் சிந்தனைக்கு சார்ந்திருந்து அதனைக் கண்மூடிப் பின்பற்ற அழைப்பதை விமர்சித்திருந்ததோடு அவர் இஸ்லாத்தை அதன் சரியான புரிதலில் விளங்காமல் இருப்பதையும் சுட்டிக்காட்டினார். அதனை அவர் சிறுபிள்ளைத்தனமான புரிதல் என வர்ணித்திருந்தார்.

ராபிஈயின் கட்டுரையின் முக்கியப் பகுதிகள் வருமாறு: ''இஸ்லாமிய ஷரீஆவின்படி மகளுக்கான சொத்துப் பங்கீடு என்பது ஒன்று அல்ல. இங்கு திருமணம் என்ற ஒழுங்கொன்றும் உள்ளது. இரண்டும் ஒன்றிணைந்து தான் அவளது சொத்துரிமை உள்ளது. அதாவது பெண் ஒரு புறம் தனது பங்கினைப் பெற்றுக் கொண்டு இன்னொரு புறமாகப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இன்னொரு பங்கை விட்டுக் கொடுக்கிறாள்.'' அதாவது அவளின் கணவனின் சொத்தில் அவளுக்குப் பங்கு இருக்கின்றது. கணவனுக்கு இந்தளவுக்கு மனைவியின் சொத்தில் பங்கு இல்லை என்பதனை அவர் தெளிவுபடுத்துகிறார். அத்தோடு அவளுக்கான செலவினத்துக்குரிய கடமையும் கணவனிடமே உள்ளது.

இது பற்றிய ஹுதா ஷஃராவியின் கட்டுரை 'சியாஸா' என்ற சஞ்சிகையில் வெளிவந்தது. அவரது ஆக்கத்தில் மூஸா ஸலாமாவின் கருத்துக்களுக்கு இரு காரணிகளால் தனக்கு உடன்பாடு இல்லை என்பதை விளக்கியிருந்தார்.

(1) எகிப்தின் பெண்ணிய இயக்கம் மேற்குலகின் சிந்தனைத் தாக்கத்துக்கு உட்பட்டிருந்தாலும் எல்லாவற்றிலும் மேற்கினைப் பின்பற்ற வேண்டிய அவசியம் கிடையாது. அந்தந்த நாட்டுக்கென சட்டங்களும் வழக்காறுகளும் இருக்கும். ஒரு இடத்துக்குப் பொருந்துபவை இன்னொரு இடத்துக்குப் பொருந்த மாட்டாது.

(2) இவ்வாறு ஒரு வித்தியாசம் இருப்பதனால் பெண்கள் தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதை அவர் இரண்டாவதாக வலியுறுத்தியிருந்தார்.

அடுத்து, சொத்துரிமை இல்லாத பெண்களை திருமணம் செய்ய ஆண்கள் முன்வராமல் இருப்பது உண்மையெனின், கிழக்குலகை விடவும் வாரிசுரிமையில் சமத்துவம் பேணப்படுவதாகச்

கூறப்படும் ஐரோப்பாவில் ஏன் பிரம்மச்சாரிகளது தொகை அதிகரித்திருக்கிறது என ஹுதா ஷஃராவி கேள்வி எழுப்பினார்.

அத்தோடு இவ்வாறு சமபங்கீடு அளிப்பது ஒரு கணவனுக்கு தனது மனைவி, குழந்தைகளுக்கு செலவளிப்பதை விட்டும் நீங்கிக் கொள்ளும் மனநிலையைத் தோற்றுவிக்காதா எனக் கேள்வி யெழுப்புகிறார். குறிப்பாக இந்நிலை வறுமைப் பின்புலத்துடன் வரும் பெண்களுக்கு அதிக கஷ்டத்தை சுமக்கச் செய்யும் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

ஹுதா ஷஃராவியின் எழுத்துக்கள் இறுதியில் இவ்வாறு நிறைவு பெறுகிறது: ''பெண்ணுக்கு உரிய இடம் கொடுக்கப்பட வேண்டும் என்ற வாதத்தின் மூலம் நாம் நாடுவது சட்டத்தை மாற்ற அல்லது ஷரீஆவைக் கவிழ்த்து விடும் முயற்சி அல்ல. இந்த சட்டத்தில் நாம் ஆட்சேபமோ, சந்தேகமோ வைக்கவில்லை.

எமது கோரிக்கை இறைவனும் அவனது சட்டமும் எந்நோக்குடன் உள்ளதோ அந்த நோக்கத்தை அடையும் வகையில் இச்சட்டங்களை நடைமுறைப்படுத்தவே உழைக்கிறோம். அத்துடன் ஒரு சில பெற்றார் மார்க்கத்தின் பெயரால் பெண் பிள்ளைகளுக்கு சொத்துப் பங்கீட்டை மறுத்தால், நாம் அதற்கென மார்க்கத்தை பழித்துரைக்க மாட்டோம். இஸ்லாம் மார்க்கம் இந்த சூழ்ச்சிகளை விட்டும் தூய்மையானது.''

மீண்டும் எழுந்த சர்ச்சை:

இந்த வாத-விவாதங்கள் நிறைவுற்று இரு வருடங்களில் எகிப்தின் அல்அஹ்ராம் பத்திரிக்கையில் மூஸா ஸலாமா வின் நண்பர் மஹ்மூத் அஸ்மி 1930 ஜனவரியில் எழுதிய கட்டுரை மூலம் மீளவும் மேலெழுந்தது. அதற்கு சிறிது காலத்தின் பின்னரேயே பஃக்ரி மீக்காயீல் என்பவர் அமெரிக்கப் பொதுக் கூட்டமொன்றில் பெண்ணுக்கு சொத்துரிமையில் சமபங்கு வேண்டுமென ஒரு விரிவுரை செய்கிறார்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து மீளவும் எகிப்திலே சர்ச்சை வெடிக்கின்றது; விவாதங்கள் தொடர்கின்றன. இவர்களுக்குப் பதிலளிக்கும் விதத்தில் ஷெய்க் ரஷீத் ரிழா தனது பிரபலம் மிக்க 'அல்மனார்' சஞ்சிகையில் கட்டுரை வரைகிறார். அதில் அவர் பெண்ணுக்கு சொத்துரிமையில் சமமாக வேண்டுவோரது கருத்துக்களைத் தொகுத்துத் தருகிறார். அதனது சாராம்சத்தை இவ்வாறு நோக்கலாம்:

(1) முஸ்லிம்கள் அநேக விவகாரங்களில் ஷரீஆ சட்டத்தில் தங்கியிருப்பதோடு அரசின் சட்டத்தையும் ஏற்றுள்ளனர். அவ்வாறிருக்க தனியார் சட்டப்பகுதிகள், வாரிசுரிமைச் சட்டப் பகுதிகளோடு தொடர்பான பகுதிகளில் முஸ்லிம்கள் இஸ்லாமியச் சட்டத்தைப் பின்பற்றுவதை விட்டுவிட ஏன் உடன்படுவதில்லை?

(2) சில முஸ்லிம் அறிஞர்கள் கால மாற்றத்துக் கேற்ப மனித நலன்களும் மாறியிருப்பதைக் கருத்திற்கொண்டு உலக விடயங்களோடு

தொடர்பான சட்டங்களை விட்டுவிடலாம் என்கின்றனர்.

(3) இன்று வாரிசுமையின் நிலை அதன் அடிப்படையை விட்டும் அகன்றிருக்கின்றமை.

(4) முழு உலகுமே சகோதரனுக்கும் சகோதரிக்கும் சம அளவில் சொத்துக் கிடைக்க வேண்டுமென சொல்கிறதே?

இறுதியில் ஷெய்க் ரஷீத் ரிழா தனது கருத்தைப் பதிவு செய்கிறார்: ''ஷரீஅத் என்பது நாம் விரும்புகிற பகுதியை எடுத்துக் கொண்டு நமக்கு விருப்பமற்றதை விட்டுவிடக் கூடிய விடயமல்ல; இது மார்க்க விவகாரம். மார்க்கத்தைப் பூரணமாக ஏற்க வேண்டும். அதன் பயனை நாம் அறிந்து கொண்டாலும்தான் இல்லாவிட்டாலும்தான் பின்பற்றியேயாக வேண்டும். ஷரீஆவைப் பின்பற்றுவது தெரிவுச் சுதந்திரத்துக்குட்பட்டது என்பதை முன்சென்ற அறிஞர்களோ தற்கால அறிஞர்களோ எவரும் சொல்லவில்லை. அவ்வாறு சொல்வது அல்குர்ஆன், அஸ்ஸுன்னா, இஜ்மாஃ அனைத்துக்கும் முரணானது. அவ்வாறு சொல்வது தெளிவான நிராகரிப்பாகும். அது இபாதத் பகுதியாகலாம் அல்லது முஆமலாத்தாக இருக்கலாம், ஆதாரம் உறுதியென்றால் கடைப்பிடிக்கத்தான் வேண்டும்.''

பெண்ணுக்கு சொத்துப் பங்கீட்டில் சமபங்கு வேண்டும் என்ற கருத்து மிகக் குறுகிய கால வரலாறு கொண்ட பலவீனமான வாதம். அக்காலத்திலேயே அதற்கு உரிய பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனினும், அரபு-இஸ்லாமிய உலகில் இக்கருத்தினை ஆதரிப்பவர்கள் நாற்பதுகளின் பின் அதிகரித்திருக்கிறார்கள்.

பின்நாட்களில் வந்த அறிஞர்கள் இன்னும் இதனை ஆழமாகத் தெளிவுபடுத்தியுமுள்ளார்கள். அவர்களது கருத்துக்கள் பெண்ணுடைய விவகாரத்தில் இஸ்லாத்தின் நீதித் தன்மையை இன்னும் பறைசாற்றுகிறது:

(1) ஆண் மஹர் கொடுப்பதின் மூலமும் ஆணே குடும்ப செலவினத்தைப் பொறுப்பேற்பதன் மூலமாகவும் பெண்ணுக்கு சொத்தும் அதனை அனுபவிக்கும் வாய்ப்பும் உள்ளது.

(2) பெண் போல இரு மடங்கு சொத்துப் பங்கீட்டினை ஆண் பெறும் சந்தர்ப்பங்கள் நான்குதான் உண்டு.

(3) சரிசமமான சொத்துப் பங்கீடே அதிகமாகும்.

(4) பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் பெண் ஆணை விட அதிகம் பங்குகள் பெறுகிறாள்.

இவை சில குறிப்புக்கள் மட்டுமேயாகும். கட்டுரையின் விரிவஞ்சி மேலதிக தகவல்களைத் தவிர்க்கிறோம். இறை சட்டத்தின் அற்புதத்துக்கு வாரிசுரிமை தொடர்பான இஸ்லாத்தின் கருத்துக்கள் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. அதனாலேயே அது குறித்த சட்டங்கள் அல்குர்ஆனில் தெளிவாகவும் முழுமையாகவும் விளக்கப்பட்டிருக்கின்றன. தூதர் (ஸல்) அவர்களது எச்சரிக்கைப்படி பூமியை விட்டும் விரைவில் மறையும் அறிவாகவும் வாரிசுரிமைக் கலை குறிப்பிடுப்பட்டுள்ளது.

(குறிப்புக்கள்: கட்டுரை www.mugtama.com, www.islamtoday.net, www.raialyoum.com ஆகிய இணையங்களிலிருந்து தொகுக்கப்பட்டது.

மேலே மேற்கோள் காட்டப்படும் பெண்ணிய செயற்பாட்டாளர் ஹுதா ஷஃராவியின் ஹிஜாப், குடும்ப அலகு பற்றிய கருத்துக்கள் இஸ்லாத்துக்கு முரணனானதாக இஸ்லாமிய அறிஞர்களால் மறுத்துப் பேசப்பட்டுள்ளன.)

# பச்சை நிற


ஏ.ஸீ.

இறைவன் அளித்த அருட்கொடைகளுள் நாம் வாழும் சூழல் மிகவும் முக்கியமானது. ஆறுகள், நீர் நிலைகள், நீர் வீழ்ச்சிகள், கடல்கள், மலைகள், மரங்கள், தாவரங்கள், பறவைகள், மிருகங்கள் என எத்தனை அழகான, அற்புதமான, அவசியமான படைப்புக்கள். எனினும், மனித செயற்பாடுகள் இந்த இறை அருள்களை அழித்து வருகின்றன. சூழல் மாசடைதல் இன்று ஒரு பெரும் பிரச்சினையாக எம்முன் எழுந்து நிற்கின்றது.

உலகம் மிக வேகமாக கருமையடைந்து வருகின்றது. பச்சை புல் வெளிகள் அருகி விட்டன. அழகிய நீரோடைகள் சிதிலமடைந்து விட்டன. நீர் வீழ்ச்சிகளும் வெயில் காலங்களில் வரண்டு விடுகின்றன. நகரெங்கும் வழிந்தோடும் கழிவு நீர்கள் ஆற்று நீரின் நிறத்தையும் மாற்றிவிடுகின்றன.

இன்னும் பத்து வருடங்களில் பசுமை நிலங்கள் பல பாலைவனமாகிவிடும் அச்சம் காணப்படுகின்றது. இந்தப் பூமியின் எங்கோ ஒரு மூலையில் வாழும் எமது பங்களிப்பு மீண்டும் ஒரு பச்சை உலகத்தை மீட்டுத் தரலாம்.

இக்கட்டுரையில் குறிப்பிடப்படும் எழு விடயங்களை ஒவ்வொரு தனிநபரும் பின்பற்றும்போது பெருமளவிலான சூழல் பிரச்சினைகள் கட்டுப்படுத்தப்பட்டு விடும். மீண்டும் ஓர் அழகான பச்சை உலகத்தை அடைந்து கொள்ளலாம்.



## 01. நாளாந்த செயற்பாடுகளை மாற்றிக் கொள்ளுங்கள்

- மின்சார உபகரணங்களை பயன்படுத்தாத போது அதன் ஆழிகளை (Switch off) அணைத்து விடவேண்டும். தொலைக் காட்சி, கணினி, அச்சியந்திரம், மின் விளக்குகள் போன்றன இதில் உள்ளடங்கும். இச்செயற் பாட்டை இன்னும் இலகுவாக்க நேரத்திற்கு தானாகவே அணைந்து விடும் ஆழிகளைப் பயன்படுத்தலாம். அது போன்றே குளிரூட்டி கள், மின்விசிறி போன்றவற்றில் நேரத்தை குறித்து, அந்நேரத்தில் தானாக அணைந்து விடச் செய்யலாம்.

- அவசியமற்ற போது பிளக்குகளை (Flags) கழற்றி விடுங்கள். அடுத்த 06 மணித்தி யாலத்திற்கு உங்களுக்கு அவசியப்படாத மடிக் கணினி, சமையலறை உபகரணங்கள் போன்ற வற்றின் மின் இணைப்புகளை கழற்றி விடுங்கள்

- ஆடைகளை இயற்கையாகக் காற்றில் உலர்த்துங்கள். செயற்கையான உலர்த்திகள், குளிர்சாதன பெட்டி, குளிரூட்டிகளுக்கு அடுத்ததாக அதிகமாக மின்சாரத்தை விரயமாக்குகின்றது.


- சலவை இயந்திரத்தில் ஆடைகளை கழுவும்போது ஒரே தடவையில் நிறைய ஆடைகளை கழுவுங்கள். ஓரிரண்டு ஆடைகள் இருப்பின் அவற்றை கைகளால் கழுவி விடுங்கள். இவ்வாறு செயற்படும்போது நீரையும் மின்சாரத்தையும் சேமிக்கலாம்.

- தேவையானபோது மாத்திரம் குளிரூட்டி களைப் பயன்படுத்துங்கள். வெளியிலுள்ள வெப்பத்தை விட ஓரளவு குறைத்து வைப்பதன் ஊடாக மின்னை சேமிக்கலாம். அத்துடன், இயன்றவரை இயற்கையான காற்றை பெறும் வகையில் கட்டிடங்களை அமைத்துக் கொள்ளுங்கள்.

- இலத்திரனியல் உடற்பயிற்சி இயந்திரங் கள் பாவிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இயன்றவரை சைக்கிள் ஓட்டுதல், நடத்தல் போன்ற பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள்.

- நீரை சிக்கனமாகப் பயன்படுத்துங்கள். குளித்தல், ஆடைகளை கழுவுதல், வாகனங் களைக் கழுவுதல் போன்றவற்றிற்கு நீரைப் பயன்படுத்தும்போது பாத்திரங்களில் நீரை சேமி த்து பயன்படுத்துவதே விரயத்தைத் தடுக்கும்.

- அனைத்தையும் மீள் சுழற்சிக்குப் பயன் படுத்துங்கள். கழிவுப் பொருட்களை



எம். நதீர்

# ...றக் கனவு

வகைப்படுத்துவதன் ஊடாக அனைத்துப் பொருட்களையும் மீள் சுழற்சிக்காக பயன் படுத்த முடியும் அல்லது அவற்றை விற்பனை செய்வதன் மூலம் வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

- ஒரு முறை மட்டும் பயன்படுத்த முடியு மான பொருட்களின் பாவனையை தவிர்ந்து கொள்ளுங்கள். மீளப் பயன்படுத்த முடியுமான கோப்பைகள், போத்தல்கள், இதர பொருட் களைப் பயன்படுத்துங்கள். புடவையிலான குழந்தைகளுக்கான Diapers ஐப் பயன்படுத்துங் கள். உங்கள் குழந்தை களை இரசாயன பொருட்களிலிருந்து பாதுகாக்கலாம்.

- மிக அவசியமான, மீளப் பயன்படுத்த முடியுமான, நீண்ட காலம் பயன்படுத்த முடியுமான பொருட்களையே கொள்வனவு செய்யுங்கள். அவை உமது பணத்தையும் நேரத்தையும் மாத்திரமன்றி, இயற்கையை யும் பாதுகாக்கும்.

## 02. உணவு முறையை மாற்றிக் கொள்ளுங்கள்

- பால் பொருட்கள், இறைச்சி உணவு களை குறைவாக உட்கொள்ளுங்கள். வாரத்தில் ஒரு நாள் இறைச்சி உணவுகளை உட்கொள்வது போதுமானது. அது உங்கள் ஆரோக்கியத்திற்கும் அவசியமானது.

- உள்ளூர் உற்பத்திகளை கொள்வனவு செய்யுங்கள். மரக்கறி, பழ வகைகள், ஏனைய உணவுப் பொருட்களின் உற்பத்தி, களஞ்சியப் படுத்தல், விநியோகம் செய்தல் போன்றவற்றின் போது பல்வேறு பாதிப்புக்களுக்கு உட்படு கிறது. அதன் இயற்கை தன்மையை பாதுகாப்ப தற்காக பல்வேறு இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, உள்ளூர் உற்பத்தியாளர்களின் பொருட்களை வாங்கு வதன் மூலம் ஆரோக்கியமான உற்பத்திகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

- உணவுகளை வீண் விரயம் செய்ய வேண்டாம். உங்களுக்கு தேவையான அளவு மாத்திரம் சமையுங்கள். அப்போதும் எஞ்சினால் நண்பர்கள், அயலவர்கள், தேவையுடையவர் களுக்கு பகிர்ந்தளியுங்கள்.

- குடிநீருக்காக மீள பயன்படுத்த முடியு மான போத்தல்களைப் பயன்படுத்துங்கள். பொதுவாக நீர்வழங்கல் சபையினால் வழங்கப் படும் நீர் சுத்தமானதே. வீணாகப் பணம் கொடுத்து, தண்ணீரை வாங்க வேண்டிய அவசியமில்லை.

## 03. போக்குவரத்து முறையை மாற்றிக் கொள்ளுங்கள்

- முடியுமானளவு குறுகிய தூரங்களுக்கு நடந்து அல்லது சைக்கிளில் செல்வதை பழக்கப் படுத்திக் கொள்ளுங்கள். குழந்தைகளைப் பாட சாலை அழைத்துச் செல்வதற்கும் மீண்டும் அழைத்து வருவதற்கும் குழுவாக ஒரு வாக னத்தைப் பயன்படுத்துங்கள். அயலவர்களுடன இணைந்து அதற்கான ஒழுங்கை மேற்கொள்ள லாம். நடை தூரத்தில் பாடசாலை இருந்தால் குழுவாக தங்கள் பிள்ளைகளை அனுப்புவதற் குப் பழக்குங்கள்.



பொதுப் போக்குவரத்து சாதனங்களான பஸ், புகையிரதம் போன்றவற்றை அலுவலகத்திற்கு செல்வதற்குப் பயன்படுத்துங்கள். ஒன்லைன் மூலமாக அல்லது ஓடர் பண்ணுவதன் ஊடாக பொருட்கள், சேவைகளைப் பயன்படுத்த முடியுமாயின் அதனைப் பயன்படுத்துங்கள். உங்கள் நேரம், களைப்பு என்பன சேமிக்கப் படும்.

## 04. உங்கள் வீட்டை மாற்றி அமையுங்கள்

- சூரிய ஒளி கிடைக்கக் கூடியவாறு வீட்டை அமைத்துக் கொள்ளுங்கள். அத்துடன், சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின்னை பெறு வதற்கான ஏற்பாட்டையும் செய்து கொள்ள லாம். இது மின் பாவனையைக் குறைப்பதற் கான இலகுவான நடவடிக்கை ஆகும்.
- நீண்ட காலம் பாவிக்கக் கூடிய, அதிக மாக மின்சாரத்தைச் சேமிக்கக் கூடிய எல்ஈடி விளக்குகளைப் பயன்படுத்துங்கள்.
- தண்ணீர் கசிவுகளை அவதானித்து சீர்செய்யுங்கள். அது போன்றே குளிரூட்டப் பட்ட இடமாக இருந்தால் வாயுக் கசிவையும் அவதானித்து சீர்செய்யுங்கள்.
- கால நிலைக்கு பொருத்தமான திரைச் சீலைகளைப் பயன்படுத்துங்கள். உதாரணத் திற்கு குளிர் பிரதேசமாக இருந்தால் தடிப்பமான சீலையைப் பயன்படுத்துவதன் மூலம் குளிரை கட்டுப்படுத்தலாம்.
- உங்கள் வீட்டிற்கு நேரடியாக சூரிய ஒளி, காற்று படுவதை தடுக்கும் வகையில் மரங்கள், தாவரங்களை நடுங்கள்.
- வீட்டு உபயோகப் பொருட்களை அடிக்கடி சுத்தம் செய்துகொள்ளுங்கள். குளிர் சாதனப் பெட்டி, சலவை இயந்திரம் போன்றன குறிப்பிடத்தக்கவை.
- உங்களுக்கு போதுமான, அளவான, சிறிய வீட்டை தெரிவுசெய்துகொள்ளுங்கள். அது நிர்மாணிப்புச் செலவையும் முகாமைத்துவ செலவையும் கணிசமானளவு குறைத்துவிடும்.

## 05. உங்கள் வீட்டு முற்றத்தை மாற்றியமையுங்கள்

- மரக்கறிகள், பழக்கன்றுகள், மூலிகைகள் போன்றவற்றை உங்கள் வீட்டுத் தோட்டத்தில் பயிர் செய்யுங்கள். உங்களுக்கு பிரயோசனமான பொழுதுபோக்காக இது நிச்சயம் அமையும்.
- உங்கள் வீட்டுத் தோட்டத்திற்கு பறவை கள், பூச்சியினங்கள் வரக் கூடியாவாறு பூக் கன்றுகளையும் நடலாம். அவற்றின் நடமாட்ட மும் சத்தமும் மனதிற்கு இதமானது.
- மரங்களை நட இடவசதி இருந்தால் அவற்றை நடுங்கள். அது உங்கள் வீட்டுச் சூழலை குளிர்காலத்தில் சூடாகவும் வெப்ப காலத்தில் குளிராகவும் வைத்திருக்க உதவும். பழம் தரும் மரங்களை நட்டால் நீங்கள் மேலதிக பயன்களை அடைந்துக் கொள்ளலாம்.
- உங்கள் பயிர்களுக்கு, மரங்களுக்கு இரசாயன உர வகைகள், கிருமிநாசினிகள் பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ளுங்கள்.
- உங்கள் வீட்டில் கொம்போஸ்ட் இயற்கை பசளை உற்பத்திக்கான இட மொன்றை ஒதுக்கிக் கொள்ளுங்கள். உணவுக் கழிவுகள், இலைகள் போன்றவற்றை அதிலிட்டு மிகச் சிறந்த பசளையைப் பெற்றுக் கொள்ளலாம்.

## 06. மீளப் பயன்படுத்துங்கள்.

- உங்களுக்கு அவசியமற்று, மீளப் பயன்படுத்த முடியுமான பொருட்களை தேவையுள்ளோரை தேடி வழங்குங்கள்.
- கழிவுப் பொருட்களிலிருந்து, ஆக்கப் பொருட்களை தயாரியுங்கள்.
- பொலிதீன், பிளாஸ்டிக் பைகளுக்கு பதிலாக புடவை பைகளை பயன்படுத்துங்கள்.

## 07. செயற்பட முன்வாருங்கள்.

- சூழலை பாதுகாப்பதற்கான விழிப் புணர்வை மக்களிடத்தில் ஏற்படுத்துவதற்கான அமைப்புகளில் அங்கத்துவம் பெறுங்கள்.
- சூழல் பாதுகாப்பு தொடர்பான வழி காட்டல்களை வழங்குங்கள்.
- சூழல் பாதுகாப்பு அமைப்புகளுக்கு உதவுங்கள்.

மகிழ்வான குடும்ப வாழ்வு குறித்தும் அதில் தம்பதியர்கள் ஆற்றுகின்ற சிறப்பான நடிபங்குகள் குறித்தும் முன்னைய பத்திகளில் கலந்துரையாடினோம். இப்பத்தியில் குடும்ப வாழ்வை தகர்க்கின்ற பாதிக்க வைக்கின்ற முக்கியமான இரு விடயங்களை அலசலாம் என்றுள்ளோம்.அன்பு இல்லாமல் போவதும் பிள்ளைப்பாக்கியம் இல்லாமல் போவதுமே பெரும்பாலான சிக்கல்கள் குடும்ப வாழ்வில் வந்து குவிய காரணமாகின்றன. எனவே, இவை குறித்து அவதானமாக செயற்படவேண்டும்.

மனம், மனை, மனைவி, இந்த மூன்றும் சிறப்பாக இருக்கும் போது குடும்ப வாழ்வு எல்லையற்ற மகிழ்வை பரிசளிக்கும். அன்பை அள்ளி வழங்குவதால் மனம் மகிழ்வாக இருக்கும். அன்பை பரஸ்பரம் பரிமாறும் தம்பதிகள் வாழும் இல்லம் மகிழ்வாக இருக்கும். மனம் என்பதை தமிழில் அகம் என்றும் கூறுவர். அகம் என்பது வீடு என்று அர்த்தம். வீட்டாளை இல்லத்தரசி மற்றும் இல்லாள் என்பர். இல்லாள் எப்போதும் இனியாளாக இருக்க வேண்டும். அதற்கு அன்பு மட்டுமே போதும். இல்லாளின் இங்கிதம் தான் இனிய குடும்பத்தை உருவாக்கும். குடும்ப வாழ்வில் வருகின்ற பரஸ்பர அன்பு உள்ளத்தின் அடியாழத்தில் இருந்து தூய்மையாக வரவேண்டும். பகட்டுக்காக, விளம்பரத்துக்காக, வேடிக்கைக்காக, அடுத்தவர்களுக்கு காண்பிப்பதற்காக அமையக் கூடாது. உள்ளுக்குள்ளால் புகைந்துகொண்டு அடுத்தவர்களுக்கு முன்னாள் அடக்கி அமைதியாக வாழ்வதால் குடைந்து குழியாகி ரணகளமாகிப் போவது எங்கள் உள்ளங்கள் தவிர வேறோன்றும் இல்லை.

எனவே, திருமண வாழ்வின் பின்னரான எமது அன்றாட செயல்களில் அன்பை குழைக்க வேண்டும். குவிக்க வேண்டும். அன்பு கலந்த வார்த்தைகள், அன்பு கலந்த பார்வைகள்,அன்பு கலந்த அரவணைப்புக்கள், அன்பு கலந்த புன்னகை, அன்பு கலந்த பாராட்டுக்கள்,அன்பு கலந்த கோபதாபங்கள், அன்பு கலந்த முத்தங்கள், அன்பு கலந்த ஸ்பரிசங்கள், அன்பு கலந்த கண்டிப்புக்கள், அன்புகலந்த தண்டிப்புக்கள்... இப்படி... இப்படி..., அன்பை அனைத்திலும் சங்கமிக்க வைக்க வேண்டும். அன்பை மூலதனமாக்க வேண்டும். அன்பால் ஆள வேண்டும். அன்பால் ஆழ வேரூன்ற வேண்டும். ஆல மரம் போல் ஆழ வேர் விட்டு அகல விழுது பரப்பி உயர வேண்டும். அன்பை அள்ளி வீச வேண்டும். அன்பை இலவசமாக்க வேண்டும். அன்புக் கோட்டை கட்டி வாழ வேண்டும். அன்பு மேலோங்கினால் வம்புகளுக்கு தலைதூக்க வசதியிருக்காது. அன்பால் உள்ளத்தை ஆள வேண்டும்.

நீங்கள் அமைதி பெறுவதற்காக உங்களில் இருந்தே உங்களுக்கான துணைவியை உருவாக்கியுள்ளோம் என்று

பிஸ்தாமி



# குடும்ப வாழ்வைப் பாதிக்கும் இரண்டு விடயங்கள்....

அல்லாஹ் கூறுவது அவனது அத்தாட்சியை சார்ந்தது. உள்ளார்ந்த அமைதியை அடுத்து வருகின்ற தூய அன்பும் அருள் மிகுந்த கிருபை யும் குடும்ப வாழ்வின் சுபீட்சத்துக்கு பிரதான மாகும். மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த (வரம்)அருள். ஆக பரஸ்பர அன்பை பரிமாறாத, அன்பின் வலிமையை உணராத தம்பதிகள் அழுத்தங்களையும் அவஸ்தைகளை யும் தான் வாழ்வின் பரிசாகப் பெற்றுக்கொள்வர்..

ஆணாகட்டும் பெண்ணாகட்டும் அவன் உண்மையான மகிழ்வும் அமைதியும் திருப்தியும் பெறுமிடமாக அவன் வாழ்கின்ற குடும்பமே உள்ளது. திருமணத்துக்கு முன்னரான வாழ்வில் தாயிடம் அன்பைப் பெற்றவர்கள் திருமணம் நிகழ்ந்த பிறகு அதனை தாரத்திடம், துணைவி யிடம் பரஸ்பரம் எதிர்பார்க்கின்றனர். இந்த அன்புக்கான ஏக்கமும் தவிப்பும் நிறைவேறாத போது குடும்ப வாழ்வு கசக்க ஆரம்பித்து விடுகிறது. பூகம்பமாய், புயலாய், ராட்சத பேரலையாய் மாறி குடும்ப வாழ்வுக்கு சவாலாக அமைகிறது. விளைவு வேகமான விவாகம் அதிவேகமான விவாகரத்தாக உருவெடுக்கிறது.

திருமண வாழ்வில் தெரிவின் போது அதீத அழுத்தம் கொடுக்கப்பட்ட இரண்டு விடயங்களில் இன்றைய அவதானம் செலுத்தப்படுகிறது. காரணம் இன்றைய சமூகம் எதிர்கொள்கின்ற குடும்ப வாழ்வியல் பிரச்சி னைகள் எழுகின்ற, கருக் கொள்கின்ற, வேர்கொள்கின்ற முக்கியமான விடயம் அல்லது இடம் ''அன்பை இழத்தலின் விளைவு'' என்பதால் இது குறித்து கவனம் செலுத்துகின் றோம்.



நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். ''நீங்கள் அன்புள்ளம் கொண்டவளையும் கருவளம் கொண்டவளையும் பார்த்து திருமணம் செய்து கொள்ளுங்கள்'' திருமண வாழ்வுக்கு அன்பே ஆரம்பம் அடித்தளம், அத்திவாரம் என்று நபிகளாரின் மேற்படி போதனை கூறுகின்றது.உள்ளிருந்து கிடைக்க வேண்டிய அன்பு நிறை வாக கிடைக்காவிட்டால் அன்புக்காக இன்னொன்றை தேடுவது தவிப்பது மனித இயல்பு. அன்பு அதன் முழுமையான வடிவத்தை வழங்க மறுத்தால் அது ஆபத்தில் வந்து விழும்.இந்த நபிமொழியை ஆழமாக நோக்கினால் திருமண வாழ்வு நிலைபெறுவது அன்பினால் மட்டுமே என்பது புலனாகும். கணவன் மனைவி யாக வாழ்வது என்பது நம்பிக்கையின் அடிப் படையில் தான். தன்மீது அன்பு கொண்டவன் கணவன் என்ற அளவு கடந்த நம்பிக்கையில் தான் மனைவி தன்னை கணவனிடம் இழக்கிறாள். இது இழப்பு என்பதை விட நல்லதோர் தலைமுறைக் கான அடித்தளம் என்றும் கூறலாம். அன்பை இழந்த குடும்பம் அவஸ்தையில் விழும்.

குடும்ப வாழ்வை தகர்த்து விடும் ஒன்று அன்பு இன்மை அடுத்தது அன்பின் விளைவாக மட்டுமே வரக்கூடிய அடுத்த தலைமுறை பற்றிய சிந்திப்பு. இந்த உலகம் அன்பில் தான் எழுந்து நிற்கின்றது. அல்லாஹ்வின் அன்பும் அருளும் கிருபையும் இல்லாவிட்டால் இந்த உலகில் உயிரினங்கள் நிலைக்காது. இறைவனின் அன்பு தான் உலகை இன்றுவரை நிலைக்க வைத்துள்ளது. அவன் வானங்களினதும் பூமிகளினதும் அவற்றுக்கு



இடைப்பட்டவற்றினதும் அருளாளன் (ஸூரா அந்நபஉ: 37) அன்பற்ற உலகில் வாழ்வது அர்த்தமில்லாத வாழ்வாகும்.அது அழிவையே கொண்டுவரும்.

திருமணம் என்பது அன்பை வேண்டி நிற்கின்ற ஒரு புதிய வாழ்வியல் கட்டமைப்பு. அது அழகு நிறைந்த வாழ்வியல் ஒழுங்கு. ஆன்மாவை போஷிக்கின்ற அர்த்தம் நிறைந்த அருள். அங்கு மகிழ்வை வரவழைக்கின்ற பிரதான இடம் அன்பு மட்டுமே. அன்பை கொடுப்பதில் பரஸ்பரம் கஞ்சத்தனமாக கள்ளத்தனமாக நடந்துகொள்வதால் குடும்ப வாழ்வின் கட்டமைப்பே சிதைகின்றது. அன்பை அடைத்து வைப்பதில் பயனில்லை; பலனில்லை; பாதுகாப்பில்லை. அது திறந்து விடப்பட வேண்டும். பகிரப்பட வேண்டும். குடும்ப வாழ்வில் ஒழிவு-மறைவின்றி வெட்கம்-கூச்சமின்றி அன்பை பரிமாற்ற மிகவும் பொருத்தமான நபர் தமது வாழ்க்கைத் துணைவர்கள் தாம் என்பதை உணர்ந்து வாழ வேண்டும்.

அன்றாட குடும்ப வாழ்வில் அன்பைப் பரிமாற்ற எமக்குத் தடையாக பல விடயங்கள் வந்து செல்கின்றன. பரஸ்பரம் புரிந்து கொள்ளாமை, விட்டுக்கொடுக்காமை, தன்னல மேம்பாடு, செருக்கு, கர்வம், அகங்காரம் போன்றன தம்பதிகளுக்கிடையே அன்பின் அர்த்தத்தை அர்த்தமிழக்க வைக்கின்றன. அன்பை அள்ளிக் கொட்ட அணைகட்டி விடுகின்றன. தனியாள் வேறுபாடுகள், அபிலாஷைகள், விருப்பு வெறுப்புக்கள் குறித்த தெளிவும் புரிதலும் அருகினால் குடும்ப வாழ்வில் பூகம்பங்கள் தான் பெருகும். பூமியில் நிகழும் பூகம்பங்கள் தரும் அனர்த்தத்தையும் அழிவுகளையும் விட இரண்டு ஆன்மாக்கள் மோதிக்கொள்ளும்போது ஏற்படும் ஆத்மா சார்ந்த பூகம்பங்கள் ஏற்படுத்தும் அழிவுகள் எழுத்துக்கு அப்பாற்பட்டவை. மொழிபெயர்த்துக் கூற முடியாதவை.

குடும்ப வாழ்வை பூதாகரமாக்கும் அடுத்த விடயம் பாலியல் சார்ந்ததாக மட்டுமில்லாமல் பாலியலுடன் சேர்ந்த அதனது இலக்கான சிறந்த தலைமுறையை வம்சத்தை பரம்பரையை தோற்றுவிக்கும் அம்சமாகும். திருமணம் என்றவுடன் அடுத்த எதிர்பார்ப்பாக ஒரு குழந்தையை பெற்றெடுப்பது மனக்கண் முன் வந்து விடுகிறது. பிள்ளைப் பாக்கியம் என்பது இறைவனது அருளின் அன்பின் அடியாக எழுகின்ற விடயமாக உள்ளது. எனினும், இன்றைய நவீன உலகில் மனிதனுக்கு ஏற்படுகின்ற நோய்கள் மன அழுத்தங்கள் போன்றனவும் குழந்தைப் பேற்றை தாமதப்படுத்தி விடும். இதற்கு பெண் மட்டுமே காரணி என்பதை மருத்துவ உலகம் ஏற்பதில்லை. மலட்டுத்தனம் ஆணுக்கும் ஏற்படலாம்.திருமணத்துக்கு முந்திய பிழையான நடவடிக்கைகள், புகைத்தல், போதைப்பொருள் பாவனை, மதுப் பாவனை போன்றனவும் ஆணில் மலட்டுத் தன்மையை உருவாக்கலாம்.

எனவே, திருமணத்தை அடுத்து பிள்ளைப் பாக்கியம் கிடைக்காவிட்டால் அதற்குரிய சிகிச்சைகளை தம்பதிகள் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் மேற்கொள்ள வேண்டும். இதை விடுத்து ஆளுக்காள் விரல் நீட்டி குற்றம் சுமத்துவதோ, பழி சுமத்துவதோ, இழிவாக நோக்குவதோ சிறப்பான பட்டங்கள் கொடுப்பதோ விபரீதத்தை உருவாக்கும். உரிய சிகிச்சைகள் நிச்சயம் பலனளிக்கும்.

மருத்துவ சிகிச்சைகளுக்கு முன்பாக ஆன்மீக சிகிச்சைகளையும் கையாள வேண்டும். எத்தனையோ நபிமார்களின் குழந்தை பேருக்கான கனவுகள், பிரார்த்தனைகள், எதிர்பார்ப்புகள் குறித்து அல்குர்ஆன் அழகாக சொல்கிறது. குழந்தைப் பாக்கியத்தை தருபவன் அல்லாஹ். எனவே, அவனை சார்ந்திருப்பது, பாவமன்னிப்பில் ஈடுபடுவது, தான தர்மங்கள் புரிவது என்று பல விடயங்களை செய்யலாம். இதையும் தாண்டி நிராசையடையாமல் மன மகிழ்வுடன் குடும்ப வாழ்வில் ஈடுபடுகின்றவர்களும் எமக்குள்ளால் வாழ்கின்றனர் என்பதை புரிய வேண்டும்.

குடும்ப வாழ்வில் அன்பு, இனிய தாம்பத்தியம் மூலமான சந்ததி உருவாக்கம் எனும் இரண்டு விடயங்களில் தான் மிகப்பெரும் சிக்கல்கள் உருவாகின்றன என்பதை உணர்ந்து தம்பதிகள் வாழ்கின்ற போது முதலாம் காரணியாகிய அன்பு தம்பதிகளிடம் மிகைக்கின்ற போது இரண்டாம் காரணியாகிய குழந்தை பேரின்மை என்பது குடும்ப வாழ்வை சிதைக்கும் விடயத்தில் செல்வாக்கு செலுத்துவது சிரமமாகிவிடும். அன்பே அனைத்தையும் ஆளும் அளவற்ற சக்தியாகும் என்பதை உணர்வோம்.

# உங்கள் தெரிவை எங்கே மேற்கொள்ளப் போகிறீர்கள்?

ஷெய்க் அக்ரம் அப்துல் ஸமத்

திருமண வாழ்வை எதிர்நோக்கியிருப்பவர்கள் பதில் காண வேண்டிய கேள்விகளுள் நான்காவது எங்கே? என்ற கேள்வி. திருமண வாழ்வில் நுழைய முன்னர் இந்தக் கேள்வியும் மிகவும் முக்கியமானது. எங்கே என்ற கேள்வி தொடுக்கப் படுவதன் முக்கியத்துவம், எமது தெரிவின் போது, இலட்சியவாதக் கோட்பாடுகளைத் தாண்டி, அதி கம் பிரக்டிகலாக சிந்திக்க வேண்டும் என்ற புள்ளி யிலேயே மறைந்திருக்கிறது.



நான் பலரைப் பார்த்திருக்கிறேன், தமது தெரி வுக்கு சில பொலிஸிகளை வைத்திருப்பார்கள். உறவுக்குள் முடிக்க மாட்டேன், ஊருக்குள் முடிக்க மாட்டேன் என்று இருப்பார்கள். சில சமயங்களில் அவர்களது பொலிஸிகள் காரணமாகவே வாழ்க் கையில் பல சிரமங்களை எதிர்கொள்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. திருமண வாழ்வில் பொலிஸி கள் இருக்க வேண்டும்தான் மறுப்பதற்கில்லை, அதே நேரம் நாம் பிரக்டிகலாகவும் இருத்தல் வேண்டும். மிகவும் இறுக்கமாகவும் இருந்துவிடக் கூடாது. நலனை மையமாகக் கொண்ட விட்டுக் கொடுத்தல் என்பதே இங்கு முக்கியமான சம நிலையாகும்.

எங்கே என்ற கேள்விக்கு எவ்வாறு விடை காண வேண்டும் என்பது பற்றி இன்றைய அமர்வில் சகோதரர்களை மையப்படுத்தி சில கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள நினைக்கி றேன். இதனை கீழ்வரும் சில தலைப்புகளில் பேசலாம் என்றிருக்கிறேன்.

### 1. உறவுகள்:

திருமணத்தின் தெரிவை எங்கே மேற்கொள்ள வேண்டும்? என்ற கேள்விக்கான பதில்களுள் 'உறவுகள்' என்பதும் ஒன்றாக அமைய முடியும். கடந்த பத்தியொன்றில் யார்? என்ற கேள்விக்குப் பதில் தரும் போது, நெருங்கிய உறவுகளுக்குள் திருமணம் செய்வதன் சாதக பாதகங்கள் அலசப் பட்டன. உறவுக்குள்ளே திருமணம் செய்வது பொருத்தமா? இல்லையா என்பது ஷரீஅத் ரீதியாக வும் சரி, விஞ்ஞான ரீதியாகவும் சரி விவாதத்திற் குரிய ஒரு தலைப்பு. அந்தவகையில் அதனை பொருத்தம் அல்லது பொருத்தமில்லை என்று ஏதேனும் ஒரு விதியில் மாத்திரம் நின்று நோக் காமல் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதில் நலனி ருக்கிறது என்ற அடிப்படையில் தெரிவை மேற் கொள்வதே சிறந்தது.

உறவுகளுக்குள்ளே தெரிவை மேற்கொள்வதன் நலன் பற்றி, அனுபவப்பட்டவர்களிடமிருந்து பெறப்பட்ட இரண்டு விடயங்களை இங்கு பரிமாறிக் கொள்கிறேன்.

முதலாவது, பொருத்தப்பாட்டுக் காரணிகள், குணநலன்கள், ஒழுக்கம் சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்து பெரிய தேடுதல் எதுவும் அவசியமற்றது. ஒரே உறவுவட்டம் என்ற வகையில் இவையனைத்தும் நன்கு அறிமுகமான நிலையிலேயே காணப்படும். அந்தவகையில் நம்பிக்கையோடு அடுத்த கட்ட முடிவை நோக்கிச் செல்வது இலகுவாக இருக்கும்.

இரண்டாவது, பொருளாதார உத்தரவாதம், அதிலும் குறிப்பாக திருமணத்தின் பின்னர் தம்பதிகளின் பொருளாதார வாழ்வின் மேம்பாடு என்பது தனித்து அவர்கள் இருவரது கைகளில் மாத்திரம் தங்கியிருக்கின்ற ஒரு விடயமாக இருக்க மாட்டாது. கணவன் மனைவி இரண்டு தரப்பினரும் ஒரே உறவு வட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் பொருளாதார ரீதியாக பரஸ்பரம் உதவி செய்யும் நிலை அல்லது குறைந்த பட்சம் தனித்து விடப்படாத ஒரு நிலை காணப்படும்.

### 2. அறிமுக வட்டம்:

தெரிவு எங்கே? என்பதற்கான இரண்டாவது பதில் இது. அறிமுக வட்டம் என்பது உறவு அல்லாத ஆனால் ஏற்கனவே நன்கு அறிமுகமானவர்களைக் குறிக்கும். பெற்றோர்கள், உறவினர்கள், சகோதர, சகோதரிகளின் நட்பு வட்டங்கள் இதில் உள்ளடங்கும். அது தொழில் முறை நட்பு அல்லது தஃவா முறை நட்பு என எந்த வடிவத்திலும் அமையலாம்.

எமது தெரிவு இந்த அறிமுக வட்டத்தில் அமைவதும் தவறில்லை. ஆனால், அறிமுக வட்டம் என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் தெரிவு இடம் பெற்றுவிடக் கூடாது. மாற்றமாக, இரு தரப்பு நலன்களை வைத்தே தெரிவு இடம் பெறுதல் வேண்டும். அறிமுக வட்டத்தில் தெரிவு நடைபெறுவதன் நலன்கள் குறித்து அனுபவப் பட்டவர்கள் சொல்லும் ஒரு விடயத்தை இங்கு பரிமாறிக் கொள்கிறேன்.

இங்கு இருதரப்பினரையும் நன்கு அறிந்த ஒருவரோ அல்லது ஒரு தரப்பினரோ கண்டிப்பாக இருப்பார். அவ்வாறு இருப்பதன் காரணமாக இரு தரப்பினரதும் நல்ல பக்கங்களையும் பாதகமான பக்கங்களையும் மிகச் சரியாக பரிசீலிப்பதற்கான வாய்ப்பிருக்கிறது. அந்தவகையில் தெரிவை மிகச் சரியாக மேற்கொள்வதற்கு இது துணை செய்யும். மாத்திரமன்றி இரு தரப்பினரையும் அறிந்தவர்கள் என்றவகையில் இங்கு ஏமாற்றுவதற்கான இடம் பாடும் மிகவும் அரிதானது.

அத்துடன் திருமணத்தின் பின்னர் கூட ஏற்பட முடியுமான பிணக்குகளின் போது, இணக்கப் பாடுகளை ஏற்படுத்துவதற்கு அதே தரப்பின் உதவி பெற்றுக் கொள்ளப்படவும் முடியும். மிக முக்கியமாக இந்த இடத்திலும் நம்பிக்கையுடன் முன்னோக்கிய தீரமானத்தை எடுப்பதற்கான வாய்ப்பிருக்கிறது.

### 3. ஒரே பணியில் இருப்போர்:

தெரிவு எங்கே? என்ற கேள்விக்கான மற்றோர் பதில் இது. இங்கு ஒரே பணி என்பதன் மூலம் குறிப்பாக தொழில் ரீதியாக ஒரே இடத்தில் மற்றும் ஒரே பணியில் இருத்தல் அல்லது ஒரே இடத்தில் கல்வி கற்றல் போன்ற வடிவங்களே நாடப்படுகின்றன. பல திருமணங்களில் இந்த அடிப்படையில் தேர்வு நடைபெற்றமையை மறுப்பதற்கில்லை. இங்கு ஒரு தரப்பு அடுத்த தரப்பை விளங்கிக் கொள்வதற்கான வாய்ப்பு அதிகம் இருப்பதனால் பல தேர்வுகள் இதனை அடிப்படையாக வைத்து நிகழ்கின்றன. இது தவறானதல்ல, ஆனால் அந்தத் தேர்வு, அடிக்கடி காண்பதனால் ஏற்படும் ஒருவித ஈர்ப்பினால் மாத்திரம் நிகழ்ந்ததாக அமைந்து விடக் கூடாது. அதனைத் தாண்டி இது இருதரப்பிற்கும் எவ்வாறு நலனாக அமைகிறது என்பதை வைத்தே தீர்மானிக்கப்படல் வேண்டும்.

இந்த அடிப்படையில் தெரிவு அமைவதன் நலன் குறித்து அனுபவப்பட்டவர்கள் சொல்லும் முக்கிய கருத்து என்னவெனின், திருமணத்திற்குப் பின்னர் வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதை நிறையவே இலகுபடுத்துகிறது என்பதாகும். திருமணத்தின் பின்னர் தொடர்ந்து கற்பதாக இருந்தாலும், தொழில் செய்வதாக இருந்தாலும் சமையல், போக்குவரத்து, பிள்ளைப் பராமறிப்பு, போன்ற பல விடயங்களில் இலகுவாக தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியுமாக இருக்கும். மாத்திரமன்றி பணியில் கூட பரஸ்பர ஒத்துழைப்புகளை வழங்கிக் கொள்ள முடிகிறது என்பர்.

இந்த நலன்கள் நியாயமானவைதான் மறுப்பதற்கில்லை. அதே நேரம் இங்கு ஒரு எதிர்மறையான பக்கம் இருப்பதையும் மறந்து விடக் கூடாது. அதாவது, ஒரே பணியில் இருப்பவர்கள் என்ற வகையில் பணிரீதியான முரண்பாடுகள் ஏற்படு

வதற்கும் வாய்ப்பிருக்கிறது. அதே போன்று திருமணத்திற்கு முன்னர் சந்தித்துக் கொள்ளும் வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதால் தேவையற்ற முரண்பாடுகள் ஏற்படவும் முடியும். இந்த எதிர்மறைகள் குறித்தும் தெரிவின் போது நாம் கவனமாக உள்ள போதுதான் இவற்றைக் கடந்து செல்வது எவ்வாறு என்பது குறித்து சிந்திக்கத் தலைப்படுவோம். இதுவும் அனுபவப்பட்டவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றதுதான்.

### 4. ஒரே இயக்கத்தின் உள்ளே தெரிவு இடம் பெறுதல்:


தெரிவு எங்கே? என்பதற்கு மற்றொரு முக்கியமான பதில் இது. என்னைத் தெரிந்தவர்கள் பலர் என்னிடத்தில் ஆலோசணை கேட்கும் பரப்புக்களில் இதுவும் ஒன்று. இயக்கத்தின் உள்ளே முடிப்பது சிறந்ததா? வெளியே முடிப்பது சிறந்ததா? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முன்னர் ஒரு விடயத்தை நினைவுபடுத்தி விட்டுச் செல்வது நல்லது.

இன்று இஸ்லாமிய தஃவா இயக்கங்கள் தவிர்க்க முடியாதவை. அவற்றை நோக்கிய விமர்சனங்கள் எவ்வாறு எழுந்தாலும் அவற்றின் வட்டம் விரிவடைந்து கொண்டுதான் செல்கின்றன. புதிய இளைஞர் பரம்பரை ஒன்று அவற்றில் இணைந்து கொண்டுதான் இருக்கின்றது. அந்தவகையில் அங்கிருப்பவர்களிடம் இந்தக் கேள்வி நியாயமாகவே எழுகிறது.

ஏற்கனவே சொல்லப்பட்ட அறிமுக வட்டம் என்ற பரப்பிற்குள் இயக்கத்தையும் உள்ளடக்க முடியும் என்றிருந்தாலும், இன்று தனித்துப் பார்க்கப்படும் அளவுக்கு அது சார்ந்த கேள்விகள் அதிகரித்துள்ளன என்றுதான் சொல்ல வேண்டும். மற்றோர் புறத்தில் இயக்க நலனைக் கருத்தில் கொண்டு இயக்கத்தில் திருமணம் முடிப்பது மட்டும்தான் மிகச் சரியான தஃவா தெரிவு என்ற மனநிலைகளும் இயக்கங்களுக்குள் இல்லாமலில்லை. எனவே, இளைஞர்கள் மத்தியில் உண்மையில் இது கட்டாயமானதுதானா? என்றதொரு கேள்வி எழுகிறது. அதனாலும் இதனை தனித்து நோக்க வேண்டியிருக்கிறது.

முதலில் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த இடத்திலும் ஏற்கனவே சொல்லப்பட்டது போல், கோட்பாட்டு ரீதியான விடயங்களை முன்னிறுத்தியன்றி பிரக்டிகலாக தீர்மானம் எடுப்பதே முக்கியமானது. ஏனெனில் இயக்க நலன் என்று வருகின்ற பொழுது, இயக்க அங்கத்தவர்களிடத்தில் அதற்கு ஒரு புனித உணர்விருக்கிறது. எனவே, பிரக்டிகலாகவன்றி கோட்பாட்டு உண்மைகளில் நின்று மாத்திரம் தீர்மானம் எடுப்பதற்கான வாய்ப்பு இங்கு அதிகம் காணப்படுகிறது. கோட்பாட்டு உண்மைகளுக்காக பலர் தமது நடைமுறை வாழ்வில் சிரமங்களை எதிர்கொண்டமையையும் மறுப்பதற்கில்லை.

இயக்கத்திற்கு உள்ளே தெரிவு அமைகின்ற போது, மிக முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் பொருத்தப்பாட்டுக் காரணிகளாகும். இயக்க நலன் என்ற காரணத்தால் பொருத்தப்பாடு என்ற விடயம் மறைந்து போய் விடக் கூடாது. ஏனெனில் பொருத்தப்பாடு என்பது நீடித்த குடும்ப வாழ்விற்கு முக்கியமானது. இவ்விடயம் மறக்கப்படுகின்ற பொழுது, எந்த நலனுக்காக திருமணம் நடைபெற்றதோ அந்த நலனே அடையப் பெறாமல் போகவும் வாய்ப்பிருக்கிறது. இன்றைய சமூக வாழ்வில் பெரிதும் தாக்கம் செலுத்துகின்ற பொருளாதாரம், சமூக அந்தஸ்த்து போன்ற விடயங்கள் மிகவும் முக்கியமானவை.



இயக்கத் தெரிவின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு விடயம் இருக்கின்றது. அதாவது, பல சமயங்களில் துடிப்பாக, முன்வந்து செயற்படும் இளைஞர்களுக்கு அதே போன்று துடிப்பாக, முன்வந்து செயற்படும் யுவதிகள் திருமணம் பேசப்படுகின்றனர். இந்த தெரிவில் நலன்கள் இல்லை என்று சொல்ல முடியாது. ஏற்கனவே சொல்லப்பட்டது போல் தஃவா ரீதியான பல நலன்கள் இதில் இருக்கின்றன.

ஆனால், இதில் இருக்கின்ற எதிர்மறையான ஒரு பக்கமும் அவதானத்திற்குரியது. பல சமயங்களில் இருவரும் சம தரத்திலான பொறுப்புக்களை சுமந்து செயற்பட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அங்கு சமூக தஃவா பயனடைகிறது. ஆனால், அவர்களது குடும்ப வாழ்வில் குறிப்பாக பிள்ளைப் பராமறிப்புக்கான நேர ஒதுக்கீட்டில் பெரும் சவாலை எதிர்கொள்ள நேரிடுகிறது. அந்த வகையில் எனது தனிப்பட்ட ஆலோசணை, சமகாலத்தில் இருவரும் பெரிய பொறுப்புக்களை சுமக்காதிருப்பது நல்லது, மாத்திரமன்றி தெரிவின் போதே ஒரே வகையான திறமைசாலிகளாக வன்றி, தனது இடைவெளியை நிரப்பும் வகையில் அமைத்துக் கொள்வதும் நல்லது என நினைக்கிறேன்.

இயக்க தஃவா அனுபவத்தில் பலரும் இந்த உண்மையை ஏற்றுக் கொள்கின்றனர். சமூக தஃவாவின் உச்சத்தில் இருக்கின்ற பலரது வாழ்க்கையைப் பார்க்கின்ற பொழுது, சாதாரண ஒரு குடும்பப் பெண்ணாக இருந்து கொண்டு, அவர்களது மனைவிமார்கள் இவர்களது தஃவா உச்சத்திற்கு எந்தளவு துணை நின்றிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இதற்கு மறுதலையாக சாதாரண ஒரு இயக்க அங்கத்தவனாக இருந்து கொண்டு, தமது மனைவிமாரின் தஃவா தலைமைத்துவத்திற்கு ஆணிவேராக இருக்கும் எத்தனையோ கணவன்மாரையும் நானறிவேன். ஒருவகையில் இது ஒரு நல்ல சமநிலை என்று தோன்றுகிறது. இங்கு புரிந்துணர்வும் மதிப்பளித்தலும்தான் மிகவும் முக்கியமானவை, திறமைகள் சமாந்தரமாக இருக்க வேண்டும் என்பதில்லை.

இயக்க ரீதியான தெரிவின் போது, இயக்க ரீதியான அல்லது தஃவா ரீதியான பொது நலன்கள் பல இருக்கின்றன என்பது உண்மை. அவை பற்றி குறிப்பாக இங்கு நான் பேச நினைக்கவில்லை. ஆனால், சம்பந்தப்பட்ட இருவருக்கும் இதில் உள்ள நலன் என்ன? என்பது சற்று புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்று. இங்கு முக்கியமாக இரண்டு விடயங்களை மாத்திரம் அடையாளப்படுத்துகிறேன்.

முதலாவது, குடும்ப வாழ்வு புரிந்துணர்வுடன் நடைபெறுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கின்றது. குறிப்பாக தஃவா ரீதியான கடமைகளின் போது, வீட்டுக் கடமைகளில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் போதாமைகள் சகித்துக் கொள்ளப்படுகின்றன. முக்கியமாக இவற்றை மையப்படுத்தி பிணக்குகள் ஏற்படுவது குறைகின்றன.

இரண்டாவது, குடும்பச் சூழலில் இஸ்லாமிய விழுமியங்களைக் கட்டியெழுப்புவது இலகுவாகின்றது. இதுவும் தஃவாவில் ஒரு இலக்காக அமைவதால் இருவருக்கும் சமகாலத்தில் இதற்கான தூண்டுதல்கள் கிடைக்கப் பெறுகின்றன. இந்த சூழ்நிலையை சிறந்த முறையில் பயன்படுத்திய எத்தனையோ உதாரணங்கள் இருக்கின்றன என்பது மறுக்கப்பட முடியாதது.

அடுத்து, நாம் முக்கியமாக மனம் கொள்ள வேண்டிய ஒரு விடயம் இருக்கின்றது. அதுதான் இயக்கத்தினுள் தெரிவை மேற்கொள்வதா? இல்லையா? என்பது. ஏற்கனவே கூறப்பட்டது போல் நலன் சார்ந்த ஒரு விடயமே அன்றி, மார்க்கக் கடமை சார்ந்த ஒரு விடயம் அல்ல. மாத்திரமன்றி பொதுவாக, இயக்க தஃவா பாரம்பரியத்திலும் கூட இது கட்டாயமாக வலியுறுத்தப்படும் ஒரு சட்டமும் அல்ல. எனவே, இயக்க அங்கத்தவர் ஒருவர் இயக்கத்தினுள் தெரிவை மேற்கொள்ளவில்லை என்பது, மார்க்க ரீதியாகவும் சரி, தஃவா ரீதியாகவும் சரி குற்றமிழைத்ததாக ஒரு போதும் கருதப்பட மாட்டாது.

இந்த இடத்தில் இமாம் ஹஸனுல் பன்னா அவர்கள் முன்வைத்த நிலைப்பாடுதான் மிகவும் சமநிலையானது என்று நினைக்கிறேன். அதாவது, தனது துணை, தனது சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும் மதிப்பளிப்பவராக இருப்பது மாத்திரம் போதுமானது என்கிறார்கள். இன்றைய தஃவா இளைஞர்களுக்கு நான் சொல்லும் உபதேசமும் இதுதான். உங்கள் தஃவாவை மதிக்கின்ற, புரிந்து கொள்கின்ற துணையைத் தெரிவு செய்யுங்கள். இயக்கத்தின் உள்ளேயே பொருத்தமான தெரிவு அமையும் எனின் மிகவும் சிறந்தது. அதனை முற்படுத்தலாம். ஆனால் அதனை மாத்திரம் நிபந்தனை ஆக்காதீர்கள். மிகவும் முக்கியமாக திருமணத்தின் பின்னர் உங்கள் துணையும் உங்கள் வழியைத்தான் பின்பற்ற வேண்டும் என்று நிர்ப்பந்திக்காதீர்கள். ஏனெனில், துணைத் தெரிவைப் போன்றே தஃவாத் தெரிவும் மிகவும் சுதந்திர


மானது. தஃவாக் கடமை திணிக்கப்படமுடியாதது. அது இயல்பாய் இரத்தத்தில் கலக்க வேண்டும். உங்களது துணையாய்த்தான் இருந்தாலும் அவர்களாய் உணர்ந்துதான் தீர்மானம் எடுக்க வேண்டும்.

இயக்கம் சம்பந்தப்பட்ட துணைத் தெரிவை இந்த அர்த்தத்தில் புரிந்து கொள்கின்ற பொழுது, ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவர் பிறிதோர் இயக்கத்தில் துணைத் தெரிவை மேற்கொள்வதும் தவறானதாக அமைய மாட்டாது. இதுவும் சாத்தியமானதுதான். இதற்கான உதாரணங்களும் இல்லாமல் இல்லை. ஆனால் தனிப்பட்ட வகையில் நான் இதனை எவருக்கும் பரிந்துரை செய்வதில்லை. நடைமுறையில் அங்கு பல சிரமங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. உண்மையில் இதற்குப் பொது விதி ஒன்று சொல்வதை விடவும் ஒவ்வொரு தனிப்பட்ட நிகழ்வுகளை வைத்தே நலன்களின் அடிப்படையில் தீர்வு சொல்ல முடியும் என்று நினைக்கிறேன்.

**5. தனது ஊரில் தெரிவு செய்தல்:**

தெரிவு எங்கே என்ற கேள்விக்கு இதனையும் ஒரு பதிலாய்த் தர முடியும். தனது ஊரில்தான் திருமணம் செய்ய வேண்டும் என்பதை பொலிஸியாக வைத்திருக்கும் எத்தனையோ இளைஞர்களைச் சந்தித்திருக்கிறேன். அடிப்படையில் இந்தப் பொலிஸியில் தவறுகள் இல்லை. ஊரோடு வாழுதல் நல்லதுதான். குடும்ப வாழ்வு அவசரமாய் ஒரு ஸ்திரத்தன்மைக்கு வந்து விடும். தாய் வீடு என்றும், மாமி வீடு என்றும், அல்லது வாடகை வீடு என்றும் அடிக்கடி மாறி மாறி வாழும் வாழ்க்கையை விடவும் சொந்த ஊரில் நிலையாய் வாழ்வது பலவகையிலும் குடும்ப வாழ்வை மேம்படுத்தும். திட்டமிட்ட முன்னேற்றங்களை நோக்கி நகரவும் முடியும்.

இவைபோன்ற குடும்ப வாழ்வு சம்பந்தப்பட்ட பல நலன்களை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் இந்தப் பொலிஸி எல்லோருக்கும் பொருந்தவும் மாட்டாது என்ற உண்மையையும் நாம் ஏற்றாக வேண்டும். இந்தப் பொலிஸியைக் கடுமையாய்க் கடைபிடித்த பலரது குடும்ப வாழ்வு, வார இறுதிக் குடும்ப வாழ்வாக மாத்திரம் அமைந்து விட்ட அவலத்தையும் பார்த்திருக்கிறேன். ஆம், தான் தொழில் பார்க்கும் இடத்



திற்கு தனது குடும்பத்தை நகர்த்திக் கொள்வதற்கு தனது பொருளாதாரம் இடம் தரவில்லை. எனவே, வார நாட்களில் தனியாகவும் வார இறுதி நாட்க ளில் மட்டும் குடும்பத்துடனும் பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலைமை பல எதிர்மறைகளைக் கொண்டு வருகிறது என்பது நிதர்சனமானது. சந் தோசமான கணவன் மனைவி உறவை அது பாதிக்கிறது. பிள்ளை வளர்ப்பை அது பாதிக் கிறது. ஏன்? குறித்த ஆணுடைய தனிப்பட்ட முன்னேற்றத்தைக் கூட அது பாதிக்கிறது. தின மும் தனது மனைவியுடன் வாழ்பவன்தான், சமூக வாழ்வில் மிகச் சரியான தீர்மானம் எடுக்க முடி யும் என்பது, உளவியல் மாத்திரமல்ல ஷரீஅத்தும் சொல்லும் உண்மையாகும். இடைக்கிடை சில பிரிவுகள் அவசியம் என்பதை இங்கு குறிக்க வில்லை. மாற்றமாக தொடரான, குறித்த வடிவி லான பிரிவுகள் வாழ்வில் பல எதிர்மறைகளை ஏற்படுத்தக் கூடியனவாகும்.

இந்த இடத்தில் இளைஞர்களுக்கு ஒரு ஆலோ சனை சொல்ல விரும்புகிறேன். தெரிவின் போது, உங்கள் எதிர்கால தொழில் வாழ்க்கை எவ்வாறு அமையப் போகிறது என்பதை பிரதானமாகக் கவ னத்தில் கொள்ளுங்கள். அதற்கு ஏற்ப எந்த ஊரில் திருமணம் செய்வது என்பது குறித்து தீர்மானிப் பது மிகவும் நல்லது என்று நினைக்கிறேன். தொழில் வாழ்க்கை பற்றிய தீர்மானம் இன்றைய இளைஞர்களிடத்தில் மிகவும் சிரமமான தீர்மா னங்களில் ஒன்று.

நான் யார்? எனக்கு என்ன இயலும்? எதிர் காலத்தில் என்ன செய்யப் போகிறேன்? என்பன பற்றிய முடிவுகள் இன்று தீர்க்கமாகவன்றி அலை களில் அடிபட்டுச் செல்லும் நிலைதான் காணப் படுகின்றன. இந்தப் பொறியில் இருந்து இளை ஞர்கள் வெளியில் வரவேண்டும். ஆரம்பம் முதலே எதிர்காலம் பற்றிய அதிலும் குறிப்பாக தொழில் வாழ்க்கை பற்றிய தெளிவான முடிவு களுக்கு வரவேண்டும். அப்பொழுதுதான் குடும்ப வாழ்க்கையையும் ஸ்திரமானதாய் அமைக்க முடியும்.

தொழில் வாழ்க்கை ஊரில் அமைந்தால் ஊரி லேயே தெரிவை அமைத்துக் கொள்வதில் தவ றில்லை. அல்லது தொழில் வாழ்க்கைக்கு ஏது வாக அமையும் வண்ணம் தொழில் இடத்திற்கு அண்மைய இடங்களில் தெரிவை அமைத்துக் கொள்வது நல்லது. அல்லது தொழில் இடத்திற்கே உங்கள் குடும்பத்தையும் எடுத்துச் செல்வது, இதற்கு உங்கள் பொருளாதாரம் இடம் தர வேண்டும். உங்கள் தெரிவு எங்கே அமையப் போகிறது என்பது பற்றி சிந்தியுங்கள்.

இறுதியாக ஒரு விடயத்தை நினைவு படுத்து கிறேன். அனைத்து உலகியல் அளவு கோள்களை யும் தாண்டி எங்களுக்கு உதவ முடியுமானது பிரார்த்தனை ஒன்றுதான். எப்பொழுதும் அல் லாஹ்விடம் பிரார்த்திக்கத் தவறாதீர்கள். கலாநிதி அக்ரம் ரிழா அவர்கள் தனது துணை தேடும் படலத்தின் போது, ஒருவர் தனக்கு செய்த உப தேசம் ஒன்றை இவ்வாறு பகிர்ந்து கொள்கிறார்.

''உன்னைத் தெரிந்த, உன்னை நேசிக்கின்ற அனைவரிடமும் உனக்குப் பொருத்தமான ஒரு வரை அடையாளம் காட்டுமாறு சொல்லி வை, அடுத்தது, ஒவ்வொரு சுஜூதிலும் யா அல்லாஹ் எனக்குப் பொருத்தமான துணையைக் காட்டிவிடு என்ற பிரார்த்தனையை மறந்து விடாதே'' என்றார் கள். இதே உபதேசத்தை நானும் உங்களுக்குச் சொல்கின்றேன். கலாநிதி அக்ரம் ரிழா அவர்கள் தனது பிரார்த்தனையின் பலனை விரைவிலேயே கண்டு கொண்டதாகக் குறிப்பிடுகிறார். நிச்சயமாக நீங்களும் கண்டு கொள்வீர்கள்.

பிரார்த்தனையின் பலனை மூஸா (அலை) அவர்கள் கண்டு கொண்டமை குறித்து அல் குர்ஆன் கூறிக் காட்டுகிறது. ''எனது இரட்சகனே, எனக்கு நீ இறக்கிய நல்ல விடயங்கள் எனக்குத் தேவையாக இருக்கின்றன'' (கஸஸ் - 24). மூஸா (அலை) அவர்கள் பிர்அவ்னிடமிருந்து மத்யன் பிரதேசத்திற்கு தப்பி ஓடி வந்து, இரண்டு யுவதி களுக்கு உதவி செய்த பின்னர், களைப்புடன் கேட்ட துஆ இது.

அடுத்த இரண்டு வசனங்களின் பின்னர் ''எனது இரண்டு பெண் பிள்ளைகளில் ஒருவரை உனக்கு திருமணம் செய்து வைக்க விரும்புகிறேன்...'' (கஸஸ் - 26) என்று சுஹைப் (அலை) அவர்கள் கூறும் வார்த்தைகள் வருகின்றன.

துஆ என்றும் பயனளிக்கும். அதனை மறந்து விடாதீர்கள். அல்லாஹ் உங்கள் தெரிவை சிறந்த தாக அமைக்கட்டும்.

அல்லாஹ்வே போதுமானவன்.

# கன்ஸா ரழியல்லாஹுஅன்ஹா (துமாளர் பின்த் அம்ர்)

கன்ஸா ரழியல்லாஹுஅன்ஹா அரபு இலக்கிய உலகில் புகழ் பெற்ற பெண் கவிஞர் ஆவார். இவர் இரங்கற் பா கவிதை இயற்றுவதில் பெயர் போனவர். இவர் எழுதிய கவிதைகளின் மொழி நடை இன்றும் கூட புகழப்படுகின்றன.

நபி (ஸல்) அவர்களுக்கு நபிப் பட்டம் கிடைக்க சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் பிறந்த கன்ஸா (ரழி) யின் இயற்பெயர் தமாளர் பின்த் அம்ர் என்பதாகும்.

இவருக்கு முஆவியா மற்றும் ஸக்ர் என இரண்டு சகோதரர்கள் இருந்தனர்.

அறியாமைக் காலத்தில் ஒவ்வொருவரும் தத்தம் மனோஇச்சைப் படி வாழ்ந்து வந்தார்கள். சிறிய பிரச்சினைக்கு கூட வாளின் முனையில் தான் தீர்வு காண முயன்றார்கள். தனிப்பட்டவர்களுக்கிடையில் உருவாகும் பிரச்சினைகள் குலப் பிரச்சினையாக மாறி நீண்ட நெடிய போர்கள் மூண்டு ஒருவருக்கு ஒருவர் வெட்டி மாய்த்துக் கொண்டார்கள்.


இதை போன்ற ஒரு மோதல் கன்ஸா (ரழி) அவர்களின் கோத்திரத்திற்கும் பனூ அஸத் கோத்திரத்திற்கும் இடையே உருவாகியது. பின்னர் அது பெரும் போராக மாறியது. இந்தப் போரில் கன்ஸா (ரழி) அவரின் சகோதரர் முஆவியா கொல்லப்பட்டார்.

நடைபெற்ற போருக்கு பழிவாங்கும் நோக்கில் மற்றும் ஒரு போர் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்ட ஸக்ர் என்ற மற்றைய சகோதரன் அம்பினால் தாக்கப்பட்டு பலத்த காயமடைந்து படுத்த படுக்கையாகிவிட்டார்.

ஒரு சகோதரனை இழந்த கன்ஸா (ரழி) மற்றைய சகோதரனை இழக்க கூடாது என்பதற்காக பெரும் முயற்சி செய்து ஸக்ரை குணமடையச் செய்ய பாடுபட்டார். தன்னை கூட கவனிக்காமல் தனது சகோதரனுக்காக இரவு பகல் என பணி விடை செய்தார். இருந்தும் பயனேதும் இல்லாமல் ஸக்ர் இறந்து விட்டார்.

தனது சகோதரனை அளவு கடந்து நேசித்த கன்ஸாவால் (ரழி) ஸக்ரின் மரணத்தை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. ஸக்ரின் பிரிவு அவரை பெரிதும் நம்பிக்கை இழக்க செய்து விட்டது. ஸக்ரின் வீரம் மற்றும் கொடைத் தன்மை யாவும் கன்ஸாவை பெரிதும் கவர்ந்திருந்தது. இந்த நிலையில் தனது துக்கத்தை போக்கிக் கொள்ள வழி தெரியாமல் ஸக்ரின் புகழை வீதி வீதியாக சென்று கவிதை வடிவில் எடுத்துப் பாடி வந்தார்.

முஸப்பிரா மஷ்ஹூர்



தனது இரங்கற் பா கவிதைகளால் மக்களின் மனதில் பெரும் இடத்தைப் பிடித்துக் கொண்டார்.

இந்த சந்தர்ப்பத்தில் தான் இறைத்தூது இவருக்கு எட்டுகிறது. நபி (ஸல்) அவர்களிடம் சென்று இஸ்லாம் பற்றி அறிந்து கொள்ளவே வெகுவாக குர்ஆனின் பக்கம் கவரப்பட்டு சத்திய மார்க்கத்தை வாழ்க்கை நெறியாக ஏற்றுக் கொள்கிறார்.

கன்ஸா (ரழி) அவர்களின் பேச்சு திறனைக் கொண்டு நிறைய பேருக்கு இஸ்லாத்தை நோக்கி அழைப்பு விடுத்தார். அவரது குலத்தாரிடம் எத்திவைக்க கணிசமான மக்கள் சத்தியத்தின் பால் விரைந்தனர்.

இவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்த போதிலும் அறியாமைக் கால வழக்கம் ஒன்றை அவர் தொடர்ந்து பின்பற்றிக் கொண்டிருந்தார். தனது சகோதரனின் இறப்பிற்குப் பின்னால் அவர் தனது துக்கத்தின் வெளிப்பாட்டை காட்டும் விதமாக தனது கூந்தலை ஒருவகையாக அள்ளி முடிந்து கொண்டிருந்தார். அளவு கடந்த கவலையை வெளிப்படுத்துவதற்காக அறியாமைக் கால அரபிகள் இவ்வாறு செய்வது வழக்கமாக இருந்தது.

ஒருமுறை இந்தக் கொண்டையுடன் இவர் கஃபாவை வலம் வந்து கொண்டிருந்ததை உமர் ரழியல்லாஹு அன்ஹு கண்டு விடுகிறார். இப்படி துக்கம் கொண்டாடுவதற்கு இஸ்லாத்தில் அனுமதி இல்லை என்று எடுத்துக் கூறினார்கள். கன்ஸாவும் தனது சகோதரர்களின் இழப்பை அவரால் ஜீரணிக்க முடியாமல் தான் இவ்வாறு செய்வதாக கூற, உமர் (ரழி) விடாமல் அவருக்கு எடுத்துக் கூறுகிறார்.

இந்த உலகில் எல்லா மனிதர்களுக்கும் ஏதாவது பிரச்சினை இருந்து கொண்டு தான் இருக்கிறது. அதற்கு இஸ்லாத்தின் வழியாகத் தீர்வை தேட வேண்டும். மாறாக இவ்வாறு இஸ்லாம் தடுத்துள்ளதை செய்வது இறைவனுக்கு மாறு செய்வதாகும் என்றவாறெல்லாம் கூற, கன்ஸா (ரழி) அவர்கள் உடனே தனது கூந்தலை சாதாரண நிலைக்கு மாற்றி விடுகிறார்கள். அன்றிலிருந்து அந்த மூடப் பழக்கத்தையும் கைவிடுகிறார்கள். எவ்வளவு ஆழமான நம்பிக்கை.!

நபி (ஸல்) அவர்களே இவரின் கவித் திறனை புகழ்ந்துள்ளார்கள். ஒரு பெண்ணுக்கு அவளது திறமையை இஸ்லாம் காட்டித் தந்துள்ள ஒழுங்குகளோடு வெளிக்காட்டுவதற்கு எல்லா சுதந்திரமும் உண்டு என்பதற்கு இவர் ஒரு சிறந்த முன்மாதிரி ஆவார்.

கலீபா உமர் (ரழி) அவர்களின் சகோதரரான ஸைத் இப்னுல் கத்தாப் (ரழி) ஒரு போரில் ஷஹீதாகினார்கள். அவர் மிகுந்த இறையச்சமும் ஒழுக்கமும் உடையவராவார். உமர் (ரழி) அவர்களுக்கு தனது அன்பு சகோதரனின் பிரிவு மிகுந்த வருத்தத்தை அளித்தது. இந்த சந்தர்ப்பத்தில் கன்ஸா (ரழி) உமர் (ரழி) அவர்களுக்கு ஆறுதல் கூற வேண்டி வந்திருந்தார். அவரிடம் தனது பாசத்திற்குரிய சகோதரனின் மீது இரங்கற் பா ஒன்றை எழுதித் தருமாறு கேட்டுக் கொள்ளவே கன்ஸாவும் (ரழி) மிகுந்த கருத்தாழமிக்க கவிதைகளை பாடுகிறார். இதனை செவியுற்ற உமரும் (ரழி) உற்சாக மேலீட்டால் ''என்னுடைய சகோதரனை குறித்து கன்ஸாவை விட சிறப்பாக யாரும் ஆறுதல் கூறவில்லை'' என உரக்க கூறினார்கள்.

கன்ஸா (ரழி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற பின்னர் அறியாமையிலிருந்து முற்றிலுமாக விடுபட்டு ஏகத்துவக் கொள்கையில் மிகுந்த பிடிப்புடன் மறுமையை மட்டுமே இலட்சியமாக கொண்டு வாழ்ந்து வந்தார்கள். இறைவனின் வார்த்தைகள் அவரை எந்தளவுக்கு மாற்றியது என்பது யாரும் எதிர்பாராத ஆச்சரியமான விடயமாகும்.

அன்னை கன்ஸா (ரலி) அவர்களின் உறுதியான இறைநம்பிக்கையையும், தம்முடைய உயிர் உடைமைகளையும் ஏன், பாசத்திற்குரிய புதல்வர்களையும் இறைவழியில் அர்ப்பணிக்க துணிந்த அவர்களின் தியாக மனப்பான்மையையும் எடுத்துக் காட்டும் ஒரு நிகழ்ச்சி காதிஸிய்யா போரின் போது நிகழ்ந்தது. இது கலீஃபா உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஈராக் நாட்டில் நடைபெற்ற முக்கியமான போராகும்.

அப்போது கன்ஸா (ரலி) அவர்களும் (ஜிஹாதின்) இறைவழிப் போராட்டத்தின் மீது கொண்ட ஆர்வம் காரணமாக களம் நோக்கிப் புறப்பட்டார்கள். போர்த்திறனும் இளமைத் துடிப்பும் மிக்க தம்முடைய நான்கு மகன்களையும் உடன் அழைத்துச் சென்றார்கள்.

முதல் நாள் முன்னிரவில் அனைத்து வீரர்களும் மறுநாள் காலையில் நடக்கவுள்ள பயங்கரமான போரை குறித்து சிந்தனை வயப்பட்டி

ருந்தனர். அங்கே களத்தின் ஓர் ஓரத்தில் அன்னை கன்ஸா (ரலி) அவர்கள் தம்முடைய நான்கு புதல்வர்களையும் அருகே அழைத்து அமர்த்தி ஓர் உணர்ச்சிமிகு உரையை துவங்கினார்.

''என்னுடைய அருமந்தப் புதல்வர்களே! நீங்கள் சுய விருப்பமுடனும் மகிழ்ச்சியுடனும் தான் இஸ்லாத்தை ஏற்றிருக்கின்றீர்கள், விரும்பித்தான் ஹிஜ்ரத்தை மேற்கொண்டீர்கள்.

என் அன்புச் செல்வங்களே! இறைவழியில் ஜிஹாத் செய்வதை விடவும் அதிகமான நன்மையைப் பெற்றுத் தரும் காரியம் வேறொன்றும் இல்லை என்பதை நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள். மேலும் மறுமையின் நிலையான வாழ்க்கை, அழியும் இவ்வுலக வாழ்க்கையை விட எவ்வளவோ சிறந்ததாகும் என்பதையும் நன்கு அறிந்து கொள்ளுங்கள்!

அல்லாஹ் கூறுகின்றான்:-

''இறைநம்பிக்கை கொண்டவர்களே! பொறுமையைக் கைக்கொள்வீர்களாக! அசத்தியவாதிகளுக்கு எதிரில் உறுதியாக நிலைத்து நிற்பீர்களாக! (சத்தியத்திற்காகத் தொண்டு புரிய) எப்பொழுதும் ஒருங்கிணைந்து முனைப்புடன் இருப்பீர்களாக! மேலும் அல்லாஹ்வுக்கு அஞ்சியே வாழ்வீர்களாக! இதனால் நீங்கள் வெற்றியாளர்களாய்த் திகழக்கூடும். (3:200) என்றவாறெல்லாம் மிக நீண்ட உரை ஒன்றை நிகழ்த்தினார்கள்.

வெகுநேரம் வரை அயராமல் சுழன்று சுழன்று தீர்க்கமாகப் போர் புரிந்து இறுதியில் ஒருவர் பின் ஒருவராக ஷஹீதாக்கப்பட்டார்கள். தம்முடைய புதல்வர்கள் போரில் வீரமரணம் அடைந்த செய்தியை அன்னை கன்ஸா (ரலி) அவர்கள் கேள்விப்பட்டதும், 'என்னுடைய புதல்வர்களுக்கு 'ஷஹாதத்' எனும் உயர்ந்த பதவியை வழங்கிய இறைவனுக்கு நன்றி உரித்தாவதாக! அல்லாஹ்வுடைய அருளின் நிழலில் என்னுடைய பிள்ளைகளை நான் சந்திப்பேன் எனும் நம்பிக்கை அவனுடைய கருணையால் எனக்கு உள்ளது என்று கூறினார்கள்.

அன்று தம்முடைய சகோதரர்களின் பிரிவால் அழுது புலம்பிக் கொண்டு அளவு கடந்த துக்கத்தையும் மனவேதனையையும் வெளிப்படுத்தியவாறு அலைந்து திரிந்த அதே கன்ஸா (ரலி)தான் இப்போது தங்களின் அன்பிற்குரிய புதல்வர்கள் போரில் மரணமடைந்த செய்தியைக் கேட்டதும் இறைவனுக்கு நன்றி செலுத்திப் பெருமைப் பட்டுக் கொள்கின்றார்கள். இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளும் அதன் அழுத்தமான அறிவுரைகளும் கன்ஸா (ரலி) அவர்களை எந்நிலையிலிருந்து எந்நிலைக்கு உயர்த்தியது என்பதை கற்பவர் எவரும் இஸ்லாத்தின் ஆற்றல் குறித்து ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது.

நேர்வழி இதுதான் என்று தெரிந்த பிறகு தயக்கமேதும் இல்லாமல் தன்னை முற்றிலும் இறைவனின் பாதையில் அர்ப்பணித்து வாழ்ந்தவருக்கு ஒரு சிறந்த முன்மாதிரி கன்ஸா ரழியல்லாஹு அன்ஹா ஆவார்கள். அன்னையை நாமும் முன்மாதிரியாக எடுத்து நேர்வழி நடப்போமாக.!



''கண்களால் அன்றி மனதால் காண்பதே கனவு என்பர், என் விழிகள் மூடியிருந்தும் நான் கண்டது கனவல்ல நிஜங்களையே அவை மறைவான உண்மைகள்; இறை எச்சரிக்கைகள்..!!''

இமாம் மாலிக் இப்னு தீனார், தாபிஈன்கள் காலத்தின், தலைசிறந்த இமாமாவார். இவர் கூபா நகரில் பிறந்தவர். தர்ஜுமானுல் குர்ஆன் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் இப்னு அப்பாஸ் (றழி) மற்றும் நபி (ஸல்) அவர்களுக்கு பணியாற்றி காதிமுர் ரஸூல் (خادم الرسول) எனும் சிறப்புப் பெயருடைய அனஸ் இப்னு மாலிக் போன்ற பெரும் ஸஹாபாக்களை அடைந்து கொண்டவர். தாபிஈன்களுள் பிரசித்தி பெற்ற ஹஸனுல் பஸரி (றஹ்) அவர்களின் கருத்துச் செல்வாக்கினால் மிகவும் கவரப்பட்டவர்.

இமாம் ஹஸனுல் பஸரி (றஹ்) பஸரா பள்ளி வாயலில் வாராந்த வகுப்புக்களை நடாத்தக் கூடியவராக இருந்தார். ஒரு முறை அவரது வகுப்பில் ''அடுத்த வகுப்பை மாலிக் இப்னு தீனார் நடாத்துவார், அதில் அவரது வாழ்வின் முக்கிய திருப்புமுனைகளைப் பற்றிய ஈமானிய சம்பவங்களை கூறுவார்'' எனவும் அறிவித்தார்.அடுத்த வகுப்பில் இமாம் மாலிக் பின் தீனார், தனது வாழ்வனுபவங்களை மக்களோடு பகிர்ந்து கொள்கிறார்.

''எனது வாழ்வின் ஆரம்ப பொழுதுகள் வழி பிறழ்வுகளில் கழிந்தோடின...

என்னை நேர்வழிப்படுத்திய அருளாளன் அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும்..

எனது வாழ்க்கையில் முப்பது வருடங்களாக நான் தொழுகையே நிறைவேற்றவில்லை..! பஸரா நகர் சந்தைகளை பாதுகாப்பதை தொழிலாகக் கொண்ட நான், சில வேளைகளில் வழிப்போக்கர்களை இடை மறித்து கொள்ளையில் ஈடுபடுவதையும் உப தொழிலாகக் கொண்டிருந்தேன்.. தீய வழியில் கழிந்து வந்த எனது பகல் பொழுதுகளுக்குப் போட்டியாக போதையில் மூழ்கிக் கிடந்தன எனது இரவு நேரங்கள்....

ஒருநாள் சந்தைத் தெருவில் இருவர் வாக்குவாதப்படுவதைக் கண்டு, அவர்களைக் கவனித்தேன். அவர்களது வாக்குவாதம் சண்டைக்குக் கொண்டு சென்றது. அவர்களில் ஒருவர், ''நீ எனது பெண் குழந்தைகளது சந்தோஷத்தில் அநியாயம் இழைக்கிறாயா? நான் அவர்களுக்காகவே வாங்கிய இனிப்புப் பண்டங்களை அபகரிக்கிறாயே! எனது குழந்தைகளது சாபம் உன்னை விட்டுவிடாது. நீ, இதன் பிறகு எதனையும் சிறந்ததாக கண்டு கொள்ளவே மாட்டாய்'' என்றார்.

அந்த இளைஞன் அவரது பேச்சை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அப்பெரியவர் மீண்டும்,

உனக்கு இவ்விடயம் கேளிக்கையாக இருக்கிறதா? நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''யார் ஒரு மனிதர் சந்தைக்குச் சென்று ஏதாவது ஒன்றை வாங்கி குழந்தைகளுக்கு அதனைக் கொடுத்து கண்ணியம் செலுத்தி அவர்களது முகத்தில் சந்தோஷத்தை ஏற்படுத்துகின்றாரோ அவரை அல்லாஹ் பொருந்திக் கொள்கின்றான்.''

# இமாம் மாலிக் இப்னு தீனார்

مع التابعين (மஅ தாபிஈன்) என்ற அறபு நூலின் தமிழாக்கம்

இந்த வார்த்தைகளைக் கேட்ட எனதுள்ளம் பதறிப் போனது.! நான் அந்த அநியாயக் காரனைப் பிடித்து, அவன் அபகரித்த பொருளை பெற்று, அந்த மனிதரிடம் ஒப்படைத்தேன். கொள்ளைக்கு முயற்சித்த இளைஞனுக்கும் ஒரு தொகைப் பணத்தை அவனது செலவுகளுக்காக கொடுத்தனுப்பி னேன். அந்த பெரியவர் என்னை வர வேற்றார், மதித்து நன்றியும் செலுத்தினார்.

''நீங்கள் எனக்கு நன்றி செலுத்த வேண்டிய அவசியமில்லை. உங்களது குழந்தைகளைக் கவனியுங்கள். உணவூட்டிப் பராமரியுங்கள். அவர்களை சந்தோஷப்படுத்துங்கள். அவர் களிடம் எனது நேர்வழிக்காக பிரார்த்திக்கு மாறு வேண்டுங்கள். எனது பெயர் மாலிக் என்றும் அவர்களுக்குக் கூறுங்கள் என்றேன்.

அந்த சம்பவத்திற்கு பிறகு நான் வீடு திரும்பினேன். வழமைக்கு மாற்றமாக மது அருந்தாமல் அதிகம் சிந்திக்கலானேன்... வாழ்வதில் அர்த்தம் வேண்டும். எனது வாழ்வை சிறப்பாகத் தொடர எனக்கொரு வாழ்க்கைத் துணையியும் வேண்டும். எனவே, திருமணம் செய்து கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தேன். என்றாலும் யார்தான் எனக்கு திருமணம் செய்து வைப்பார்கள்..? ஒரு மன முடிவோடு அடுத்த நாள் சந்தைக்குச் சென்று எனக்குப் பொருத்தமான அடிமைப் பெண்ணைத் தேடி அவளை விடுதலை செய்து மணந்தேன். நாட்கள் கழிந்தன. இறை அருளால் எங்களுக்கு பெண் குழந்தை ஒன்றும் பிறந்தது... அல்ஹம்து லில்லாஹ்..

பாத்திமா எனும் பெயர் கொண்ட எனது மகள் வளர்ந்து வருகையில் தனது தந்தை ஒரு குடிகாரன் என எண்ணி, தன்னை விட்டு ஒதுங்கி விடக் கூடாது என்பதற்காக மதுவை வெறுக்க ஆரம்பித்தேன். என்றாலும் என்னால் மது அருந்துவதை முழுமையாக விட்டுவிட முடியவில்லை. எனது மகள் என்னை மாற்ற முயன்றும் அது பலனளிக்கவில்லை...

(நீண்ட கவலையுடன் கூடிய அமைதி நிலை..)

மாலிக் இப்னு தீனார் (றஹ்) அவர்களின் நாவினூடாக சொற்கள் வெளிவர மறுத்தன..! அவர் விழிகளிலிருந்து கண்ணீர் துளிகள் வழிந் தோடத் துவங்கின...!

''எனது மகள் பாத்திமா ....

பாத்திமா...... மரணித்து விட்டாள்...!!

இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.. (மீண்டும் அமைதி நிலை..)

அவளது மரணத்தை என்னால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. நான் இருந்ததை விட இன்னும் மோசமான நிலைக்கு சென்று விட்டேன். ஒரு ரமழான் இரவில் வழமையை விடவும் மதுவை அளவுக்கதிமாக அருந்தியதன் பிற்பாடு மயங்கி விழும் அளவுக்கு மதுவில் மூழ்கிக் கிடந்தேன்..!

எலும்புகள் முறியும் வலியையும் அனுபவித்து என்னை அழகாய் ஈன்றெடுத்த என் தாயின் அன்பை, இறை அன்பு மிகைத்து விட்டது..!

எனதிரட்சகன் என்னை மன்னித்தான்; நேர் வழிப் படுத்தினான்; மதுவிலிருந்து காப்பாற்றி னான்.. எப்படித் தெரியுமா..?

அந்த நாள் இரவு தூக்கம் என்னை மிகைத் திருந்தது. வாழ்நாளில் நான் கண்டிராத விசித் திரமான காட்சிகள் என் கண் முன் தோன் றின.! மக்கள் அணி அணியாக வரிசையில் முன்னோக் கிச் சென்று கொண்டிருந்தனர். ஒவ்வொருவராக முன் அழைக்கப்பட்டு தமது செயல்கள் குறித்து வினாக்கள் தொடுக்கப் பட்டனர். எனது சுற்று வருவதற்குள் திடுக் கிட்டேன்; தடுமாறினேன்; செய்வதறியாது அவ்விடத்தை விட்டு விரண்டோடினேன்... என் பின்னால் பெரும் இராட்சத விஷப்பாம் பொன்று என்னைத் துரத்தியது.! வேகம் குறையாத எனது ஓட்டம் முடிவுக்கு வருகிறது. ஒரு வயோதிபர் காட்சியளிக்கிறார்.. அவரிடம் சென்று எனது சங்கடமான நிலையைக் கூறி உதவி வேண்டினேன்.

''நீ என்னைக் காண்பது போல் நான் அதிகம் பலவீனமானவன். உன்னைக் காப்பாற் றும் அளவுக்கு நான் சக்தி பெற்றவன் அல்ல.. இவ்வழியாகச் செல் உனக்கு விமோசனம் கிட்டலாம்.''

மீண்டும் வெறி பிடித்து செய்வதறியாது விரைகின்றேன். பல நாள் பசியில் கிடந்த

சிங்கத்திற்கு இரை கிடைத்தாற்போல் இராட்சத விஷப் பாம்பும் என்னை விடாது துரத்திக் கொண்டிருக்கிறது. திடீரென என் முன்னால் பெரும் தீக்குழி..! நெருப்பில் விழுவதற்காக கொடிய பாம்பை விட்டும் நான் ஓடி வந்தேன்..? எனதுள்ளம் கேட்கிறது...

வியர்வை துளிகள் நிலத்தை ஈரமிக்கச் செய்கின்றன... ஓட்டக் களைப்பினால் அல்ல..

மரண பயத்தினால்...

எனது எட்டுக்கள் அவ் வயோதிபரை நோக்கி மீண்டும் மீள்கின்றன. அவரோ மீண்டும் அதே வார்த்தைகளை அசை போடுகிறார். எனது இக் கட்டான இந்த சூழ்நிலையை யார் தான் புரிந்து கொள்ளப் போகிறார்கள்..? வெறி பிடித்துத் துரத்தும் விஷப்பாம்பின் கோபமும் வேகமும் தணிவதாக இல்லை. அங்கும் இங்குமாக பதறியடித்துக் கொண்டு ஓடுகின்றேன். தூரத்தில் ஒரு மலைப்பிரதேசம். அதனை நெருங்கிய தருணம் திரையிட்டு மறைக்கப்பட்டிருந்தது. நான் எங்கிருக்கின்றேன்? இது என்ன இடம்? என் புத்திக்கு எதுவும் புரியவில்லை. நிழல் போன்று பின்னால் தொடர்ந்து வந்த இராட்சதப் பாம்பும் மறைந்து விட்டது.

அந்த அமைதியான இடம் என் அச்சத்துக்கும் பீதிக்கும் அபயமளிப்பதாக இருந்தது. அது என் களைப்புக்கு ஆறுதல் தந்தது. பிரகாசம் நிறைந்த ஒளிகள் கொஞ்சம் கொஞ்சமாக அந்த திரைகளை விலக்குகின்றன. அங்கு சின்னஞ் சிறு குழந்தைகள் தமது புன்னகைகளை அள்ளி வீசிக் கொண்டிருந்தனர். அதன் சுடர்களே அச்சிட்டுக்களின் முகங்களில் பிரகாசிக்கின்றன. இந்த நிம்மதியான தருணம்; மன அமைதியைத் தரும் சந்தர்ப்பம் நிலையாக இருக்க வேண்டும் என எனதுள்ளம் விருப்பம் கொள்கிறது. என்றாலும் என்னைத் துரத்தி வந்த இராட்சதப் பாம்பின் சப்தம் என் செவிகளில் அலையாய் மிதந்து மீண்டும் வருகின்றது. இதனைக் கண்ட அந்த இளஞ் சிட்டுக்களின் முகத்தில் புன்னகைகள் மறைந்து பதற்றங்கள் பிறக்கின்றன.

''பாத்திமா! பாத்திமா! பாத்திமா... உனது தந்தையைக் காப்பாற்று... அவரைத் தீண்டுவதற்காக இராட்சதப் பாம்பு அவரை நெருங்குகிறது.''

அங்கு, எனது அன்பு மகள் பாத்திமாவும் இருக்கிறாள் எனக் கண்டுகொண்டேன். பாத்திமா அந்தக் கொடிய பாம்பினை நோக்கி ஒரு செய்கை செய்கின்றாள். என்ன ஆச்சரியம்..!! வேகத்தைக் குறைத்துக் கொண்ட அக்கொடிய பாம்பு என்னை விட்டும் பின் நோக்கி நகர்ந்தது.

பாத்திமா என்ன இது. இங்கு என்ன நடக்கிறது. ஏன் என்னை இக்கொடிய பாம்பு விரட்டுகிறது என அவளை நோக்கி எனது கேள்விக்கணைகளைத் தொடுத்தேன்.

''உங்களைத் துரத்தி வந்த அவ்விஷப் பாம்பு நீங்கள் செய்த தீய செயல்கள். அவை அனைத்தும் ஒன்றிணைந்து உங்களை புசிப்பதற்காக வந்தன. நீங்கள் தான் அதன் பசி தீர்க்கும் இரை. எனது தந்தையே நீங்கள் செய்யும் செயல்கள் அனைத்தும் உருவம் கொடுக்கப்பட்டு உருப்பெறும் என உங்களுக்குத் தெரியாதா?''

நற்செயல்களே செய்யாத எனக்கு, அந்நிலமை பெரும் வேதனையைத் தந்தது; கஷ்டத்தில் ஆழ்த்தியது.

''பாத்திமாவே! அவ்வாறெனில் எனக்கு உதவிய அந்த வயோதிபர்..?

''ஆம் தந்தையே! அது தான் நீங்கள் செய்த நற்செயல்கள். அவை ஒன்றிணைந்து ஓர் வயோதிபராக உருப்பெற்றுள்ளது. அவரோ உடல் பலவீனம் கொண்டவர். நீங்கள் புரிந்த நற்செயல்கள் உங்களது தீய செயல்களை அடக்கிக் கட்டுப்படுத்தும் சக்தியற்றவையே.. என் அன்புத் தந்தையே நான் மரணித்திருக்காவிட்டால் உங்களைப் போன்று இக்குழந்தைகளுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கி நானும் கௌரவித்திருப் பேன். ஏனெனில், அச்செயல்தான் உங்களை நரகை விட்டும் பாதுகாக்கிறது.''

தடுமாறிப் போன எனதுள்ளம் துடிதுடித்தது..

''திடீரென எனது கண்கள் விழித்துக் கொண்டன. நான் எங்கே? எனது பாத்திமா எங்கே? என என்னை நானே கேட்டுக் கொள்கிறேன். கண்களால் அன்றி மனதால்

காண்பதே கனவு என்பர், என் விழிகள் மூடியிருந்தும் நான் கண்டது கனவல்ல நிஜங்களையே அவை மறைவான உண்மைகள்; இறை எச்சரிக்கைகள்..!!

இந்த இறை எச்சரிக்கைகள், அதிசயத் தக்க வைக்கும் நிகழ்வுகள் என் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்தன. மீண்டும் நான் பாவக்குழிக்குள் விழாதிருக்க உதவின.

தவ்பாவின் எண்ணத்திலேயே அல்லாஹ்வைத் தொழுது அழுது மன்றாடி பாவ மன்னிப்பில் ஈடுபட வேண்டும். எனவே, விடியற் காலையிலேயே குளித்து தூய்மையான நிலையில் பள்ளிவாயலை அடைந்தேன். அங்கு இமாம் ஹஸனுல் பஸரி (றஹ்) அவர்கள் சுபஹ் தொழுகையை தொழுவித்துக் கொண்டிருந்தார்கள். தொழுகையைத் தொடர்ந்து நான் கண்ட கனவு பற்றி அவரிடம் விளக்கினேன்.



வியப்பும் அதிர்ச்சியும் அடைந்த இமாமவர்களது விழிகளில் இருந்து கண்ணீர் தாரை தாரையாகச் சொட்டியது.

''சுப்ஹானல்லாஹ், அல்லாஹ் உனக்கு நலவை நாடியுள்ளான். நேர்வழியைக் காட்டியுள்ளான். நீ மிகவும் சிறந்த மனிதனாக திகழ்கிறாய். நீ ஒரு தடவை பெண் குழந்தைகளுக்குப் புரிந்த நற்செயல்களின் வெளிப்பாடுதான் இது. அற்பமான சில விடயங்கள் கூட மனிதனது உள்ளத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவதுண்டு.''

இமாம் அவர்களது உபதேசங்களை உள்வாங்கிக் கொண்டு தான் அல்லாஹ்விடம் மன்னிப்பு வேண்டினேன், ஏனைய நாட்களில் அல்-குர் ஆனையும் மனனமிட்டு அதனை சுயமாக பல பிரதிகளை எழுதும் நிலைக்கு உயர்ந்தேன். அவற்றை விற்பனையும் செய்தேன்.

நேர்வழி என்பது மாலிக் இப்னு தீனார் (றஹ்) அவர்களுக்கு கனவில் வந்தடைந்ததைப் போன்று எமக்கு பல்வேறு வழிகளில் வந்து சேரலாம்.

இவ்வாறு தனது வாழ்வின் பெறுமதியான அனுபவங்களையும், தன்னை நேர் வழிப்படுத்த காரணமாய் அமைந்த சம்பவங்களையும் அம் மக்களுக்கு கூறி முடித்தார் இமாம் மாலிக் இப்னு தீனார் (றஹ்) அவர்கள். அம்மக்களும் பல படிப்பினைகளைப் பெற்றதுடன் இமாம் அவர் களது கருத்துக்கள் மக்கள் மத்தியில் தாக்கம் செலுத்தும் நிலையையும் அடைந்தன.

புரட்டப்படாத உத்தமரின் இவ்வரலாறு கூறும் படிப்பினைகள் எமது வாழ்வின் நேர்வழிக்கும், இறை அச்சத்திற்கும் சிறந்த முற்கோடுகளே...

படைப்பாளனின் படைப்பினங்கள் மீதான கருணையின் விளைவினால் இறை வழியில் மரணித்த இமாமை போன்று எமது வாழ்வும் அருள் பெற படைப்பாளனிடமே கரம் நீட்டியவனாய்....

**ஹஸன் தஸ்லீம்**
பாதிஹ் கல்வி நிறுவனம், திஹாரிய

# இறைதூதரின் பாதச் சுவடுகளினூடே ஒரு புதுப் பயணம்

ஒரு மனிதன் நடந்து செல்லும்போது விட்டுச் செல்லும் தடங்கள் மற்றொரு மனிதனுக்கு பாதையாகின்றது. ஒரு இறைதூதரின் சுவடுகள் மனித சமூகத்திற்கு வழி சொல்லிச் செல்கின்றது. இங்கு இறுதி இறைதூதரின் பாதச் சுவடுகளை அடியொட்டி நடந்த மனிதப் புனிதர்களின் வரலாறுகள் முழு மனித சமுதாயத்திற்கும் வாழ்க்கைப் பாடம் கற்றுத் தருகின்றது.

அல்லாஹ் அவர்களை பொருந்திக் கொண்டான். அவர்களும் அல்லாஹ்வை பொருந்திக் கொண்டார்கள் என்ற அல்குர்ஆன் வசனமும் அவர்களை அல்லாஹுதஆலா நேர்வழியில் செலுத்தினான். அவர்கள் அறிவுடையவர்கள் என்ற அல்குர்ஆன் வசனமும் இந்த மனிதப் புனிதர்களின் வாழ்க்கை அருள் நிறைந்தது, படிப்பினை மிகுந்தது, பின்பற்ற உகந்தது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

இப்பயணத்தில் எமக்கு பரீட்சயமான நான்கு கலீபாக்கள், சுவனத்து நன்மராயம் கூறப்பட்டவர்களை தவிர்த்து, பிரபல்யமற்ற ஸஹாபாக்களை நீங்கள் சந்திக்கலாம். அவர்களது வாழ்க்கை அனுபவங்களை கற்கலாம். வாழ்வில் நடைமுறைப்படுத்தலாம்.

## ஸைதுல் கைர் (றழி)

மர்யம் ஹயா

பனூ ஆமிர் கோத்திரத்தினர் வாழ்ந்த பிரதேசம் கடுமையான வரட்சியால் பாதிக்கப்பட்டது. பயிர்கள், புற்பூண்டுகள் அனைத்தும் அழிந்துவிட்டன. எனவே, ஒருவர் தனது குடும்பத்தினருடன் ஈராக் பிரதேசத்தின் ஹீரா நகரத்தை நோக்கிச் சென்றார். அந்தப் பிரதேசத்தை அடைந்ததும் அவர்களை அங்கே விட்டுவிட்டு 'நான் திரும்பி வரும்வரை இங்கிருங்கள். நான் உங்களுக்காக செல்வம் எதையாவது தேடிக்கொண்டு வருவேன் அல்லது மரணித்து விடுவேன்' என்று கூறிச் சென்றார்.

பின்னர் அவர் தனது பயணத்திற்கு தேவையான சில பொருட்களை எடுத்துக் கொண்டு சென்றார். அன்றைய நாள் முழுவதும் அவர் சுற்றித் திரிந்தார். ஆனால், அவருக்கு எதுவும் கிடைக்கவில்லை. அப்போது அவர் ஒரு கூடாரத்தைக் கண்டார். அதற்கருகில் சில தானியங்கள் கட்டப்பட்டு, வைக்கப்பட்டிருந்தன. அதன் அருகில் சென்று அதனை அவிழ்க்கும்போது 'அதனை விட்டுவிட்டு உன்னை காப்பற்றிக் கொண்டு சென்றுவிடு' என்ற குரல் கேட்டது. அவர் அதனை அப்படியே விட்டுவிட்டுச் சென்றார்.

அதனைத் தொடர்ந்து சுமார் ஏழு நாட்கள் நடந்து திரிந்தார். ஏழாம் நாள் ஒரு கூடாரத்தைக் கண்டார். அதற்கருகில் ஒரு முதியவர் அமர்ந்திருந்தார். அம்முதியவருக்கு பின்னால் அவர் அமர்ந்து கொண்டார். அந்த முதியவர் அதனை உணர்ந்து கொள்ளவில்லை. அதன் பின்னர் நடந்ததை அவரே சொல்கின்றார்.

சூரியன் மறைந்து சிறிது நேரத்திலே மிகவும் உயர்ந்த, கம்பீரமான தோற்றத்திலுள்ள ஒரு குதிரை வீரனும் அவனது இரு பக்கமும் இரு அடிமைகளும் சுமார் நூறு ஒட்டகங்களும் வருவதைக் கண்டேன். முன்னாலுள்ள பெரிய ஆண் ஒட்டகம் அமர்ந்தது. தொடர்ந்து அனைத்து ஒட்டகங்களும் அமர்ந்துவிட்டன.

இப்போது அந்தக் குதிரை வீரன் தனது அடிமைகளில் ஒருவரிடம் ஒரு ஒட்டகத்தை காட்டி அதிலிருந்து பால் கறந்து கொடுக்கு மாறு கேட்டான். அவனும் அவ்வாறே செய்தான். முதியவர் ஓரிரண்டு மிடர் குடித்துவிட்டு, பாத்திரத்தை வைத்தபோது நான் அதனை அவசரமாக எடுத்து முழுமையாகக் குடித்துவிட்டேன். அவ்வடிமை வந்து பாத்திரத்தை எடுத்துக் கொண்டு சென்று, குதிரை வீரனிடம் சென்று அனைத்தையும் குடித்துவிட்டார் என்று கூறினான்.

அப்போது மற்றொரு ஒட்டகத்தை காட்டி, அதி

விருந்தும் பால் கறந்து கொடுக்குமாறு வேண்டினான். அவன் பாத்திரத்தை கொண்டு வந்து கொடுத்ததும் முதியவர் ஓரிரண்டு மிடர்களை குடித்து விட்டு வைத்தார். நான் குதிரை வீரனுக்கு சந்தேகம் வந்து விடும் என்பதால் அதில் அரைவாசியை குடித்தேன்.

குதிரை வீரன் மற்றைய அடிமைக்கு ஓர் ஒட்டகத்தை அறுத்து சமைக்குமாறு கூறினான். அவனும் அவ்வாறே செய்தான். குதிரை வீரன் முதியவருக்கு ஊட்டி விட்டான். பின்னர் அவனும் அடிமைகளும் சாப்பிட்டு விட்டு, உறங்கினார்கள்.

நான் ஆண் ஒட்டகத்தை அவிழ்த்து, அதில் ஏறிக் கொண்டு அதனை ஓட்டிச் சென்றேன். அதன் பின்னால் மற்றைய ஒட்டகங்கள் அனைத்தும் தொடர்ந்து வந்தன. இரவு முழுவதும் பயணம் செய்து, அடுத்த நாள் பகலிலும் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே பயணத்தை தொடர்ந்தேன்.

என் பின்னால் ஏதோ வருவதைப் போன்று உணர்ந்து திரும்பிப் பார்த்தேன். ஓர் உருவம் குதிரையில் வந்துகொண்டிருந்தது. என்னை நெருங்கியதும் அவ்வுருவம் அந்த குதிரை வீரன் என்பதை அறிந்து கொண்டேன். நான் எனது அம்பை எடுத்து, வில்லில் வைத்து குறிபார்த்தேன். அவன் தனது ஒட்டகங்களை விட்டுவிடுமாறு கேட்டான். அதற்கு அந்த மனிதன் 'எனது குடும்பத்தினரை பசியோடு ஹீராவில் விட்டு வந்திருக்கிறேன். நான் அவர்களுக்கு உணவு கொண்டுவராமல் திரும்ப மாட்டேன் என்று கூறியிருக்கிறேன்.

அவ்வீரன் எனக்கு ஏசினான். குதிரைகளை அவிழ்த்துவிடுமாறு கேட்டான். நான் மறுத்தேன். ஒட்டகத்தின் தலையில் ஒரு கயிறு முடிச்சிடப்பட்டிருந்தது. அம்முடிச்சுகளில் ஒன்றை காட்டுமாறு வேண்டினான். நான் காட்டினேன். அவன் சரியாக குறிபார்த்து அம்பை எறிந்தான். அம்பு அம்முடிச்சில் வந்து துளைத்தது. மற்றைய இரண்டு முடிச்சுகளுக்கும் இரு அம்புகளை எய்தான். நான் அவனிடம் சரணடைந்து விட்டேன். அவனது குதிரையின் பின்னால் என்னை அமரச் செய்து கூட்டிச் சென்றான்.

நீ முஹல்ஹில்லின் (தந்தை) உணவு, பானங்களுக்கு செய்தவற்றிற்காக நான் உனக்கு என்ன செய்வேன் என்று நினைக்கின்றாய் என்று கேட்டான். முஹல்ஹில்லின் பெயரைக் கேட்டதும் 'நீ ஸைதுல் கைர் தானே என்று கேட்டேன்.' அவன் ஆம் என்றான். அல்லாஹ் மீது ஆணையாக, இந்த ஒட்டகங்கள் எனது சகோதரியுடயவை. என்னுடையதாக இருந்தால் உனக்கு தந்திருப்பேன். நீ எங்களுடன் சில நாட்கள் தங்கியிரு. உனக்கு நான் ஏதாவது தருகின்றேன் என்றான். ஆம், மூன்று நாட்கள் கழிந்தன. எனக்கு அவனது குடும்பத்தினர் ஒட்டகங்களை தந்து பாதுகாப்புக்காக சில மனிதர்களையும் அனுப்பி வைத்தனர். இது தான் ஸைத் பின் கைலின் ஜாஹிலிய்யா காலம்.

நபி(ஸல்) அவர்களது செய்திகள், அவரது பிரச்சாரம் போன்ற விடயங்கள் ஸைதுக்கு கேள்விப்பட்டபோது அவர் தனது சமூகத்திலுள்ள தலைவர்களை அழைத்துக் கொண்டு மதீனாவிற்கு வந்தார். அவர்கள் மதீனாவிற்கு வந்தபோது நபியவர்கள் மிம்பரிலிருந்து குத்பா செய்துக்கொண்டிருந்தார்கள். முஸ்லிம்கள் அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தனர். நபியவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக, நீங்கள் வணங்குகின்ற உஸ்ஸாவையும் ஏனைய கடவுள்களையும் விடவும் நான் சிறந்தவன்...

நபி(ஸல்) அவர்களின் உரை ஸைத் பின் கைலினதும் அவருடன் வந்திருந்தவர்களினதும் உள்ளங்களில் ஊடுருவின. அவர்களில் சிலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். இன்னும் சிலர் மறுத்து திரும்பி விட்டனர். ஸைத் கூறினார்: முஹம்மதே (ஸல்) அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும் நீங்கள் அல்லாஹ்வின் தூதரென்றும் சாட்சி கூறுகின்றேன். அவரை முன்னோக்கி வந்த நபி(ஸல்) அவர்கள் நீங்கள் யார் என்று கேட்டார். அதற்கவர், நான் ஸைதுல் கைர் பின் முஹல்ஹில் என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் நீங்கள் ஸைதுல் கைல் அல்ல, ஸைதுல் கைர் என்று கூறினார்கள். எனவே, அதன் பின்னர் அவர் ஸைதுல் கைர் என்றே அழைக்கப்பட்டார். அவரை நபியவர்கள் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

'ஸைதே எனக்கு ஒரு மனிதரை பற்றி வர்ணனை செய்யப்பட்டது. அவரைப் போன்ற ஒரு மனிதரைக் நான் கண்டதேயில்லை. உங்களை கண்டேன். நீங்கள் வர்ணிக்கப்பட்ட அதே மனிதரைப் போன்றிருந்தீர்கள்.' பின்னர் 'நீங்கள் இன்று காலை என்ன நினைத்தீர்கள்' என்று கேட்டார். அதற்கு அவர், 'நான் நன்மை யையும் நல்லவர்களையும் நன்மை செய்பவர்களையும் விரும்பினேன். நான் நன்மை செய்தால் அதற்கு கூலி கிடைக்கும் என்று உறுதியாக நம்பினேன். நான் செய்ய விரும்பிய ஒரு செய்ய முடியாது போனால் அதற்காக வருந்துவேன் என்றார்கள்.

அதற்கு நபி(ஸல்) அவர்கள் 'இது அல்லாஹ் விரும்புகின்றவர்களின் அடையாளம் என்று கூறினார். நபி(ஸல்) அவர்களிடம் திரும்பிய ஸைதுல் கைர் அவர்கள் 'அல்லாஹ்வின் தூதரே, எனக்கு 300 குதிரை வீரர்களை தாருங்கள். நான் அவர்களை கொண்டு ரோமர்களோடு போராடி அவர்களை வெற்றி கொள்வேன்' என்றார்.

இதனைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் தக்பீர் சொல்லிவிட்டு, அல்லாஹ்விடம் உங்களுக்கு நிறைய கூலிகள் கிடைக்கும். நீங்கள் எத்தகைய அற்புதமான மனிதர்!'' என்றார். (தொடரும்)

# மறந்துவிட வேண்டாம்!



மக்கள் உங்களுக்கு அநியாயம் செய்கின்றார்களா? உங்களை துன்புறுத்துகின்றார்களா? நீங்கள் கவலைப்பட வேண்டாம். ஏனெனில், யூசுப் (அலை) அவர்களின் சகோதரர்களே அவரை கிணற்றில் தள்ளிவிட்டார்கள்.

உங்கள் பெற்றோர் உங்களுக்கு எதிராக இருக்கின்றார்கள் என கவலைப்படுகின்றீர்களா? இப்ராஹிம் (அலை) அவர்களின் தந்தையே அவரை நெருப்புக் கிடங்குக்குள் தள்ள காரணமாக இருந்தார்கள் என்பதை நினைத்துப் பாருங்கள்.

நீங்கள் ஒன்றும் செய்ய முடியாமல் ஓரிடத்தில் ஒதுக்கப்பட்டு விட்டீர்களா? கவலை வேண்டாம், யூனுஸ் (அலை) அவர்கள் மீனின் வயிற்றுக்குள் இருந்தார்களே.

உங்களைப் பற்றி யாரேனும் அவதூறு சொல்கின்றார்களா? மனம் தளர வேண்டாம். ஆயிஷா (றழி) அவர்களுக்கு அவதூறு சொன்னார்கள் அல்லவா?

நீங்கள் உங்கள் உறவினர்களாலே துன்புறுத்தப்படுகின்றீர்களா? கவலை வேண்டாம். முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அவரது உறவினர்களே துன்பம் இழைத்தார்கள்.

# வரலாற்றில் ஒரு சம்பவம்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நோன்பு நோற்றிருந்தால் அனஸ் (றழி) அவர்கள் நோன்பு திறப்பதற்கு பாலையும் பேரீத்தம் பழங்களையும் தயார் செய்து வைப் பார்கள். ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் நோன்பு நோற்றிருந்தார்கள். அனஸ் (றழி) அவர்கள் நோன்பு திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வைத்திருந்தார்கள்.

நோன்பு திறக்கும் நேரம் கடந்த பின்னரும் நபி (ஸல்) அவர்கள் வரவில்லை. எனவே, நபி (ஸல்) அவர்கள் வேறு எங்காவது நோன்பு திறந் திருப்பார்கள் என நினைத்து, பாலை அருந்தி, பேரீத்தம் பழங்களையும் அனஸ் (றழி) அவர்கள் சாப்பிட்டு விட்டார்கள்.

சிறிது நேரத்தில் நபி (ஸல்) அவர்கள் மற்றொரு தோழருடன் வந்துவிட்டார்கள். அனஸ் (றழி) அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை. வீட்டில் வேறெதுவும் இருக்கவு மில்லை. அனஸ் (றழி) அவர்கள் வெட்க மடைந்தார்.

நபி (ஸல்) அவர்கள் கேட்டால் நடந்தவற்றை சொல்வோம் என நினைத்தார். ஆனால், நிலமையை விளங்கிக் கொண்ட நபி (ஸல்) அவர்கள் எதுவும் பேசவில்லை. வழமைப் போன்று புன்னகைத்தவாறே இருந்தார்.

அனஸ் (றழி) அவர்கள் சொல்கின்றார்கள். நபி (ஸல்) அவர்கள் அந்த சம்பவத்தைப் பற்றி ஒருபோதும் கேட்கவுமில்லை, யாரிடமும் சொல்லவுமில்லை.

படிப்பினைகள்:

- ஒரு தவறு செய்தால் அதனை கண்டிக்க வோ, மற்றையவர்களுக்கு முன்னர் சொல் லிக் காட்டவோ கூடாது.
- அடுத்தவர்கள் தவறு செய்தால் பொறுமை யோடு சகித்துக் கொள்ள வேண்டும்.
- மற்றையவர்களுக்கு கஷ்டம் கொடுக்க கூடாது.
- சொல்லிக் காட்டக் கூடாது.

# ஹதிய்யா கேட்கும் மூதாட்டி

ஒரு வயது முதிர்ந்த மூதாட்டி ஒருவர் ஒரு பள்ளிவாசலின் முன்னால் ஹதிய்யா கேட்பதை வழக்கமாக கொண்டிருந்தார். ஒரு நாள் அந்த மூதாட்டியிடம் சென்ற பள்ளிவாசலின் இமாம் 'ஏன் உம்மா நீங்கள் ஹதிய்யா கேட்கின்றீர்கள். உங்களுடைய மகன் இருக்கின்றான் தானே. அவன் உங்களுக்கு பணம் தருவதில்லையா?' என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பெண்மணி 'நீங்கள் சொல்வது சரிதான். எனக்கு ஒரு மகன் இருக்கின்றான். அவன் எட்டு மாதங்களுக்கு முன்னர் வெளிநாட்டிற்கு சென்றுவிட்டான். அவன் செல்லும்போது கொஞ்சம் பணம் தந்தான். அவை முடிந்துவிட்டது. எனவேதான், நான் ஹதிய்யா கேட்கின்றேன்' என்றார்.

'உங்களுடைய மகன் உங்களுக்கு பணம் அனுப்புவதில்லையா?' என்று இமாம் கேட்டார். அதற்கு அப்பெண்மணி 'ஒவ்வொரு மாதமும் அவன் ஒரு அழகான படத்தை அனுப்புவான். அதனை நான் முத்தமிட்டு, சுவரில் ஒட்டி வைத்திருக்கின்றேன்.' என்றார்.

இமாம் அவளுடன் அவளின் வீட்டிற்கு சென்றார். அவளது வீட்டுச் சுவரிலே பல காசோலைகள் ஒட்டப்பட்டிருந்தன. காசோலை என்பதை அந்த மூதாட்டி தெரியாததாலே அவள் அதனை சுவரில் ஒட்டியிருக்கிறாள்.

இது போன்றுதான் நாம் எமது வீடுகளிலே அல்குர்ஆனை வைத்திருக்கிறோம். சில ஸூராக்களை சுவரில் மாட்டியிருக்கிறோம். அல்குர்ஆனை உயர்ந்த இடத்தில் வைத்திருக்கிறோம். சில நேரங்களில் அதனை எடுத்து முத்தமிடுகின்றோம். அவ்வளவுதான். அதிலுள்ள கருத்துக்களை விளங்குவதில்லை. அதனை படிப்பதுமில்லை. இதன் பிறகாவது நாம் அல்குர்ஆனை விளங்கி, அதனை வாழ்க்கையில் எடுத்து நடப்போம்.



## அல்குர்ஆனை மனனம் செய்துள்ள ஏழு வயது சிறுமி மாரியா

மாரியா இங்கிலாந்தில் வாழ்கிறார். அவருக்கு ஐந்து வயதாக இருக்கும்போது ஒரு போட்டிக்காக ஸூரா யாஸீனை மனனமிட்டார். அதனைத் தொடர்ந்து சில மாதங்களிலே அம்ம ஜுஸ்ஹை மனனமிட்டு விட்டார்.

அவரது திறமையை அறிந்துகொண்ட அவரது தாய், தனது மகளை ஒரு ஹாபிழா வாக மாற்ற வேண்டும் என நினைத்தார். அதற்காக ஹிப்ழ் மத்ரஸாக்கள் எதுவும் காணப்படவில்லை. எனவே, வீட்டில் தாய் மகளுக்கு அல்குர்ஆனை கற்றுக்கொடுத்தார்.

இரண்டு வருடங்களிலே மாரியா அல்குர்ஆனை முழுமையாக மனனமிட்டு விட்டார். தம்பி, தங்கைகளே நாமும் அல்குர்ஆனை மனனமிட முயற்சிப்போமா?

# இல்லை

மின்னுவதெல்லாம் இங்கே
பொன்னில்லை
காண்பதெல்லாம் கண்ணில்
கனவில்லை...!

உண்பதெல்லாம் உடலுக்கு
உகந்ததில்லை
எண்ணுவதெல்லாம் சிலநேரம்
சரியில்லை
சொன்னதெல்லாம் செயலில்
வரவில்லை...!

ஆண்களெல்லாம் ஆணவம்
கொள்பவர்களில்லை
பெண்களெல்லாம் பெருமை
அடிப்பவர்களில்லை....!

துன்பங்களெல்லாம் தொடர்ந்தும்
இருப்பதில்லை
இன்பங்களெல்லாம் இறுதிவரை
நிலைப்பதில்லை....!

மண்ணையெல்லாம் மனிதன்
மறக்கவில்லை
விண்ணையெல்லாம் வியந்து
பார்ப்பதுமில்லை.....!

கன்னிகளெல்லாம் கவனமாய்
காக்கப்படுவதுமில்லை
ஆன்மாக்களெல்லாம் அதிகம்
புதுப்பிக்கப்படவுமில்லை.....!

நன்மைகளெல்லாம் நாளுக்குநாள்
அதிகரிக்கவில்லை
நண்பர்களெல்லாம் நல்லவர்களாய்
அமைவதில்லை...!

நன்றிகளெல்லாம் மீண்டும்
நினைவிலில்லை
முன்னுதாரணங்களெல்லாம் முன்புபோல்
பேசப்படவில்லை...!

உண்மையெல்லாம் உலகம்
ஏற்பதில்லை
அன்பெல்லாம் அதிகம்
பயன்படுவதில்லை
சான்றுகளெல்லாம் சாட்சி
கூறுவதில்லை...!

என்னையும் உன்னையும்
மாற்றம் தழுவப்போவதுமில்லை.....!

நதா அக்ரம்
பேராதனைப்பல்கலைக்கழகம்

# கலப்படமிக்க கடைகள்

கனவுகள் களவுகளில்
கலப்படம் கடமைகளில்
நாணயம் நடத்தையற்று
நாடகத்தில் நடிக்கும்
கடைகளிலுள்ள கதாபாத்திரங்கள்
நேர்மை நேர்த்தியற்று
நேரத்தை நியாயப்படுத்தும்
பணத்திற்காக குணத்தை மாற்றி
நிலவரங்களை கலவரமாக்கும்
திருப்திப்படுத்தாத திமிர்களுக்கு
பிடித்திருக்கும் பிடிவாதங்கள்
கொடூர கொலைக்காக
சேர்க்கையை சேமிப்பதும்
மீதிக்காக மதியோடு விளையாடி
விதியை வென்றார்கள்.
பிரச்சினைகள் எங்கும் எதிலும்
பிளவுகள் வருமானத்தின் ஏற்றத்தில்
சுயநலம் கலப்படமாக
இலாபம் சுவைக்கிறது.

-மபாஸ்-

# ஒதுங்கல்

பாஸிரா மைந்தன்

அந்திப் பொழுது சாயும் வேளை. மனிதர்கள், பறவைகள், மிருகங்கள் என அனைத்து உயிர்களும் தமது தங்குமிடங்களை நோக்கி நகரும் பொழுது அது. இரவு அது ஓய்விற்கான பொழுது. எல்லா உயிரினங்களும் ஓய்வை யாசிக்கின்றன. இருள் மெல்ல ஒளியை விழுங்கும் அந்தப் பொழுது மிகவும் அழகானது. இந்த அழகான பொழுதை சில நிகழ்வுகள் அலங்கோலப்படுத்தியும் விடுகின்றன.

70 வயதை எட்டும் இரு முதிய பெண்கள் ஒரு தனியார் வங்கியின் வராந்தையில் தமது ஓய்விற்கான இடத்தைத் தேடுகின்றனர். முகத்தில் கரியை அள்ளிப் பூசியது போல இருக்கும் அந்த மனநோயாளி தனது தேநீர் கோப்பையையும் பீங்கானையும் இறுகப் பற்றிக் கொண்டு பஸ் நிலையத்தின் மூலையில் ஒதுங்குகின்றான். அன்றைய நாளில் நகரெங்கும் சுற்றித் திரிந்து சேர்த்த பணத்துடன் ஒரு யாசகன் அரை போத்தல் வாங்குவதற்காக மதுபான கடையின் வாசலை நெருங்குகின்றான்.

இந்த அந்தி மாலைப் பொழுதில் வாழ்வின் அந்திம கனங்களை எண்ணிக்கொண்டிருக்கும் முதியவர்கள் எங்கு ஒதுங்கியிருக்கின்றார்கள். தனது ஒரே மகனை சிரமத்துடன் வளர்த்தெடுத்து, தோட்டத்தில் கிடைத்த வருமானம் அனைத்தையும் அவனுக்கே செலவிட்ட சோமா, இரண்டு பிள்ளைகளும் பொறியியலாளர்கள் என தன் பிள்ளைகளின் புகழை சோமாவின் காதில் 1550 முறை கூறிக் கொண்டு நடக்கும் யமுனா, ஏற்கனவே அங்கு போய் இடம்பிடித்திருக்கும் நந்தசேன, அமராவதி இன்னும் பலர். புத்தர் அமைதியுடன் வீராசன நிலையில் அமர்ந்திருக்கின்றார். அனைவரும் மிகுந்த பக்திபூர்வமாக 'காத்தாவை' ஓதத் தொடங்கினர்.

ஓர் அமைதியான கிராமத்தில் அந்த முதியோர் இல்லம் அமைந்திருக்கின்றது. அங்கு வசதிகளுக்கு எவ்வித குறைகளுமில்லை. அங்குள்ள ஊழியர்கள் முதியவர்களை நன்கு பராமரிக்கின்றனர். எல்லா மொழியிலும் வெளியாகும் பத்திரிகைகள் காலையிலே அவர்களுக்குக் கிடைத்துவிடும். மூன்று தொலைக்காட்சிகளும் வெவ்வேறு இடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு சிறிய நூலகமும் இருக்கின்றது.

அம்மா, அப்பா வாருங்கள். நாம் போவோம் என அனைவரையும் அழைத்துக் கொண்டு செல்கின்றாள் அம்முதியோர் இல்லத்தின் பணியாளர்களில் ஒருத்தி.





நடக்கச் சிரமப்படுகின்ற இருவரை தோளில் சுமந்து அழைத்துச் செல்கின்றனர் ஆண் ஊழியர்கள் இருவர். அவர்களது இன்றைய நாளுக்கு இன்னும் சில மணிநேரங்களில் அவர்கள் விடைகொடுத்து விடுவார்கள்.

அடுத்த நாள் உற்சாகத்துடன் மலர்கின்றது. காலைக் கடன்களை முடித்துக் கொண்ட முதியவர்கள் காலை உணவை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு வேன் முதியோர் இல்லத்தின் வாசலில் வந்து நிற்கின்றது. பெரும்பாலான முதியவர்கள் சாப்பிடுவதை விட்டு விட்டு வேனை ஆவலுடன் பார்த்தனர். சிலர் தமது மூக்குக் கண்ணாடியை எடுத்து அணிந்துக் கொள்கின்றனர். தமது பிள்ளைகள் யாரும் வந்திருக்கலாம் என்ற எதிர்பார்ப்பு அந்த குழி விழுந்த கண்களில் தெரிகின்றது. ஆண்களும் பெண்களுமாக சிலர் வருகின்றனர்.

சோமா சத்தமிட்டுக் கொண்டு எழுகிறாள். 'புதா, மகே புதா' அவள் எழுந்து, தட்டுத் தடுமாறிச் சென்று அவளது மகனை கட்டியணைத்து, முத்தமிட்டுக் கொண்டாள். அவன் அவளது நரைத்து, ஒரு கயிற்றுப் பிடிபோல் இருந்த முடியை தடவி விட்டான். அவனுடன் வந்தவர்கள் அவர்களிருவரையும் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். அவன் தனது தாயை அருகிலிருந்த ஒரு கொங்ரீட் கதிரைக்கு அழைத்துச் சென்று அமர வைத்தான்.

'ஏன்ட தங்கம் நல்லாயிருக்கிறீங்களா. குமாரி மகள் என்ன செய்கிறாள், அவளையும் கூட்டிட்டு வந்திருக்கலாமே, லக்ஷான் என்ன செய்கிறான்?' அவள் கேட்டுக் கொண்டே இருந்தாள். அவன் ஒவ்வொன்றிற்காக பதிலளித்தான். அதற்கிடையே அவளது சாரியில் முடித்து வைத்திருந்த சில ரூபாய் தாள்களை அவனது கையில் திணித்துவிட்டு, 'இதை செலவுக்கு வைச்சிக்கொங்க மகன்' என்று கெஞ்சினாள்.

'அம்மா, உங்களுக்கு என்ன வேண்டும்? நான் ஒன்றும் வாங்கிட்டு வரலையே டவுனுக்குப் போயிட்டு வாரேன். சொல்லுங்க அம்மா.' அவள் ஒரு இளம் குமரி போல வெட்கப்பட்டாள். அவன் மீண்டும் மீண்டும் கேட்கவே அவள் 'பலகாரம்' என்றாள்.

'அம்மா, நீங்க லைப்ரரில இரிங்க. நான் வாங்கிட்டு வாரன்.' அவன் அவளது கையைப் பிடித்து கூட்டிக்கொண்டு சென்றான். வழியில் நந்தாவதி மிஸ் எதிர்ப்பட்டாள். அவளிடம் 'ஏன்ட மகன்' என்று அவனைக் காட்டி பெருமைப்பட்டாள் சோமா. அவளை நூலகத்தில் விட்டு விட்டு அவசரமாக முதியோர் இல்லத்தின் அலுவலகத்திற்கு சென்றான் அந்த இளைஞன்.

'சேர், சோமா ஆன்டிட மகன போல தான் நீங்களும் இருக்கிறீங்க. அதுதான் அவள் உங்களை அவளது மகன் என நினைத்துவிட்டாள். அவளது மகன் அவுஸ்திரேலியாவில் இருக்கிறான். மூன்று வருடங்களுக்கு முன்னர் கொண்டு வந்து விட்டுட்டு போனான். இது வரையும் வரவேயில்லை.'

அலுவலகத்தில் இருந்த ஒவ்வொருவரும் விபரம் சொன்னார்கள். அவனது கண்கள் மட்டுமல்ல எல்லோரின் கண்களுமே ததும்பின. அவன் ஒரு ஆய்வாளன். ஒரு ஆய்விற்காக அவனைப் போன்ற ஆய்வாளர்களுடன் இங்கு வந்திருக்கிறான். அவன் அவர்களிடம் விடைபெற்று நகரிற்குச் சென்றான்.

அரை மணித்தியாலத்திற்குள் மீண்டும் வந்து விட்டான். அவனது கரங்களில் பலகார பொதி இருந்தது. சோமா அவனைக் கண்டதும் மீண்டும் கட்டியணைத்துக் கொண்டாள். அதே கேள்விகளை மீண்டும் கேட்டாள். அவன் சலிக்காமல் பதில் சொன்னான். 'அம்மா உங்களுக்கு என்ன வேண்டும்' அவள் மீண்டும் முன்னரைப் போன்றே வெட்கப்பட்டாள். 'பலகாரம்' என்று வாய் திறந்தாள். அவன் தனது கையிலிருந்த பொதியை அவளிடம் கொடுத்தான். அவள் அதிலிருந்து ஒன்றை அவனுக்கு ஊட்டி விட்டு, அவளும் சாப்பிட்டாள். நண்பகலும் கடந்தது. தாயும் மகனும் கதைத்துக் கொண்டே இருந்தனர்.

இரவு பகலை விழுங்கத் தயாரான அந்திப் பொழுது வந்தது. அவன் விடைபெறப் போனான். அவள் சிறுபிள்ளை போல தேம்பித் தேம்பி அழுதாள். எல்லோரும் அவர்களை வேடிக்கைப் பார்த்தனர். அவன் தனது கண்களைத் துடைத்துக் கொண்டு வேனில் ஏறி அமர்ந்தான்.

எல்லா உயிரினங்களும் தமது இருப்பிடங்களுக்கு திரும்பிக் கொண்டிருந்தன. அந்த முதியவர்கள் தமது இறுதி இருப்பிடத்திற்கு செல்வதற்கான நாட்களில் இன்னுமொன்றை கடத்தி விட்டார்கள்.

நான்கு நாட்கள் கடந்திருந்தன. அவன் அலுவலகத்தில் இருந்தான். அவனது கைத்தொலைபேசி அதிர்ந்தது. முதியோர் இல்லத்தின் தொலைபேசி இலக்கம். 'சேர், உங்கள் அம்மா இறந்துவிட்டார்கள்.'

# மீள்பார்வை

# கலண்டர் 2018



வித்தியாசமான கருப்பொருளுடன்
வித்தியாசமான வடிவிலே

**விரைவில்**

கடந்த முறை வாசகர்கள் எமக்குத் தந்த ஒத்துழைப்புகளை
இம்முறையும் தருவீர்கள் என எதிர்பார்க்கிறோம்.




Registered as a Newspaper in GPO - QD/94/NEWS/2018 Printed: AJ Prints (Pvt) Ltd, Dehiwala.